

எடுத்ததுக்கெல்லாம் சுடுறதே
உவங்கட பழக்கமா போச்சு...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 331 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 06, சனிக்கிழமை 22.10.2016


## 5 பொலிஸார் நேற்று உடனடியாகவே கைது

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பொலி ஸார் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட பணிப் பின் பேரில் முல்லைத்தீவு பொலிஸ் அத்தி யட்சகர் பக். 25

## காரணம் தெரியவேண்டும் மாணவர்கள் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இரு வரும் எதற்காகச் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பதை உட்னடியாகத் தெரிவிக்கவேண்டும் என்று கோரியுள்ள யாழ். பல் பக். 06

## வைத்தியசாலையில் நூற்றுக்கணக்கான மாணவர் குவிந்தனர்


யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இரு வர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட் டனர் என்ற தகவல் நேற்றுப் பரவியதை அடுத்து யாழ். நகரில் பரபரப்பும் பதற்றமும் தோன் றியது.

நடந்தது என்ன என்று தெரியாத நிலை யிலும் மாணவர்கள் ஏன் சுடப்பட்டனர் என்ற காரணம் தெரியாத நிலையிலும் பல்கலைக் கழகத்தினர் மட்டுமன்றி ஏனையவர்களும் குழம்பியிருந்தனர். யாழ்.பல்கலைக்கழகத் தின் மாணவர்கள் சுமார் 300 இற்கும் மேற் பட்டவர்களும் பல்கலை ஆசிரியர்கள் சிலரும் வைத்தியசாலை பக். 25

## ராமேஸ்வரத்தில் சிக்கியது வயகரா

### இலங்கையின் வடக்கே கடத்தப்படவிருந்தவேளை



கொழும்பு, ஒக். 22

வடக்குக்குக் கடத்தப்பட இருந்த பெருந் தொகையான வயகரா மாத்திரைகள் இரா மேஸ்வரம் மண்டபம் அருகே கைப்பற்றப் பட்டுள்ளதாகத் தமிழகப் பொலிஸார் தெரி வித்தனர்.

இதன் பெறுமதி இந்திய மதிப்பில் 50 லட்சம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை, காரைநகர் கடற்பரப்பில் பக். 25



# பல்கலை மாணவர் இருவர் சூட்டில் கொலை

### குளப்பிட்டியில் வியாழன் நள்ளிரவு சம்பவம்
### யாழ்ப்பாணத்தில் பரபரப்பு; பதற்றம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு பொலிஸாரின் துவக்குச் சூட்டை அடுத்து உயி ரிழந்தனர். மோட்டார் சைக்கிளில் பக். 23

## அதிகாரம் பகிரப்படின் ஜனநாயகம் நிலைக்கும்

### மைத்திரி முன்னிலையில் கூறினார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், ஒக். 22

நாட்டில் ஜனநாயகம் நிலை பெற வேண்டுமாக இருந் தால் மாகாணங்களுக்கு, பிராந்தியங்களுக்கு, உள் ளூராட்சிச் சபைகளுக்கு அதிகாரம் பகிரப்பட்டு பகிர்ந்தளிக்கப் படவேண்டும். இதனை ஜனாதிபதி பக். 06

## மாணவர்கள் கொலைக்கு கடுமையான கண்டனங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கொலைக்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன. கொலைக்குக் காரண மானவர்கள் உடன் கண்டுபிடிக்கப் பட்டுத் தண் டிக்கப்படவேண்டும் எனவும் அவை வலியுறுத் தியுள்ளன.

**மாவை எம்.பி.**

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப் பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் உடன் கைது செய்யப்படவேண்டும். கொலையாளிகள் தண் டிக்கப்படவேண்டும். இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க, ஜனாதி பதி உடனடியாக நடவடிக்கை பக். 23

## குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

### சம்பந்தனிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஒக். 22

பல்கலைக்கழக மாணவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில், சிறப்பு விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்துவர். குற்றவாளிகள் தண்டிக்கப்படு வர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பானது தமது பிள்ளைகளை இழந்து துயரில் வாடும் குடும்பத்தாருக்கும் உற் றார் மற்றும் நண்பர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப் பிட்டுள்ளது. பக். 23

## கடற்படையினரை தாக்கிய குற்றச்சாட்டில் அறுவருக்கு மறியல்

மன்னார். ஒக்.22

மன்னார், முத்தரிப்புத்துறைக் கிராமத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு கடற்படைச் சிப்பாய் கள் இருவர் மீது தாக்குதல்களை மேற்கொண்ட தாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 6 பேர் சிலாவத்துறை பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதி மன்றத்தில் முன் னிலைப்படுத் தப்பட்டபோதுஅவர்களை எதிர் வரும் திங்கட்கிழமை வரை பக். 23

## 'பேய் பட்ஜெட்'

### மகிந்த அணி விமர்சனம்

கொழும்பு, ஒக். 22

2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவுநாடாளு மன்றத்தில் சமர்ப் பிக்கப்பட் டுள்ள நிலையில், தேசிய அரசின் வரவு-செலவுத் திட்டம் மக்களை வாட்டி வதைக்கும் 'பேய் பட் ஜெட்''டாகவே அமை யும் என்று மகிந்த அணி விமர் சித்துள் ளது."அவ்வாறு எதுவும் இல்லை. மக்கள் நலன் சார்ந் ததாகவே பக். 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழ அகதிகள் சுயமாக தாயகம் வர விரும்பின்

# எந்தப் பிரச்சினையும் இந்தியாவுக்கு இல்லை

### அயலுறவுச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 22

இலங்கை அரசின் உதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப விரும்பினால், இந்தியாவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களில் வசிக்கும் 2 ஆயிரத்து 500 பேர் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், இவர்கள் இந்திய அரசு ஒழுங்கு செய்து தருவதாக வாக்குறுதி அளித்த கப்பல் சேவைக்காகக் காத்திருப்பதாகவும், செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து இந்திய ஊடகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, அகதிகள் தாயகம் திரும்புவது தொடர்பாக இந்திய அரசுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்துள்ளார்.

'கொழும்பில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவரராஜுக்கும் சந்திரகாசனுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் நானும் கலந்து கொண்டிருந்தேன். அந்தச் சந்திப்பின்போது, அகதிகளாக இருக்கும் மக்கள் சுயவிருப்பின் பேரிலேயே தாயகம் திரும்ப வேண்டும் என்பதை இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

சுயமாக முடிவெடுத்து, அரசின் ஒத்துழைப்புடன் நாடு திரும்ப இந்த மக்கள் விரும்பினால், நாம் ஏன் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்க வேண்டும்?' என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனினும், இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் உறுதியளித்தவாறு, அகதிகள் நாடு திரும்புவதற்குத் தேவையான கப்பல் பயண வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து அவர் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஆயுள் காலம் மிகக்குறைந்த மாவட்டமாக முல்லைத்தீவு

கொழும்பு, ஒக். 22

ஆண்கள் மற்றும் பெண்களின் ஆயுள் காலம், இலங்கையிலேயே மிகக் குறைந்த மாவட்டமாக முல்லைத்தீவு உள்ளது. இங்கு ஆண்களின் ஆயுள் காலம் 60.9 ஆண்டுகளாகவும், பெண்களின் ஆயுள் காலம் 72.9 ஆண்டுகளாகவும் உள்ளன. இவ்வாறு சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் இந்து பண்டார தெரிவித் தார். இலங்கையில் பெண்களின் சராசரி ஆயுள் காலம் 78.6 ஆண்டுகளாக உள்ளது. ஆண்களின் சராசரி ஆயுள் காலம் 72 ஆண்டுகளாகவே இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

1962-64 ஆம் ஆண்டு காலப் பகுதி வரை இலங்கையில் பெண்களின் சராசரி ஆயுள்காலம் ஆண்களை விடக் குறைவாகவே இருந்தது.

தற்போது, அம்பாறை மாவட்டத்திலேயே அதிகபட்சமாக பெண்களின் சராசரி ஆயுள் காலம் 81.1 ஆண்டுகளாக உள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே அதிகபட்சமாக ஆண்களின் சராசரி ஆயுள்காலம் 74.2 ஆண்டுகளாக உள்ளது.

ஆண்களின் இரண்டாவது குறைவான சராசரி ஆயுள் காலம், கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. இங்கு ஆண்களின் சராசரி ஆயுள் காலம் 64.5 ஆண்டுகளாகும். அதையடுத்து, மட்டக்களப்பில் 66.8 ஆண்டுகளும், வவுனியாவில் 67.8 ஆண்டுகளும்; ஆண்களின் சராசரி ஆயுள்காலமாக உள்ளது. ஆண்களை விடவும் பெண்கள் அதிக காலம் உயிர் வாழ்கின்றனர். இதற்கு சில உயிரியல் மற்றும் புவியியல் காரணிகளும் காரணமாக உள்ளன. ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் சராசரி ஆயுள் காலம் திருப்திகரமானதாகவே உள்ளது என்றார். (த-5)

# வெளிநாடுகளுக்கும் பனம்பொருள்களை சந்தைப்படுத்த வசதி

### பனம்பொருள் கண்காட்சி நிகழ்வில் அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

இலங்கையில் வடக்கு மாகா ணத்தில் அதுவும் யாழ். நகருக்கு முற்கோலாக பனை மரம் இருக்கின்றது. வடக்கு மாகாணத்தில் பனை வளம் சிறந்ததாகக் காணப்படுகிறது. தற்போது பனை ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படும் பனம் பொருள் சார்ந்த பிஸ்கட், யோக்கட், ஐஸ் கிறீம் போன்றவற்றுக்கு விரைவில் ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழைப் பெற்று இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் ஏற்று மதி செய்யக்கூடிய சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஞாலத்தில் புதுமை புகும் தாலம் எனும் தொனிப்பொருளில் பனை அபிவிருத்திச் சபையினால் பனைசார் உற்பத்திகள் மற்றும் புதியதொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சியும், ஆய்வரங்கம் மற்றும் விற்பனையும் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல்நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:-

பனை அபிவிருத்திச் சபையில் கடந்த 38 வருடங்களுக்குப் பிறகு இப்படியான ஒரு கண்காட்சியைக் காண்கிறேன். ஞாலத்தில் புதுமை புகும் தாலம் எனும் தொனிப்பொருளில் நடந்திருக்கும் இந்தக் கண்காட்சியானது பனை வளத்தை நம்பியிருக்கும் அனைத்து மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும். பனை அபிவிருத்திச் சபையானது பனம் பொருள் உற்பத்திகளைச் சரிவரச் செய்வதற்கு ஊக்குவிக்கவேண்டும். அத்தோடு இந்தப் பனைசார் உற்பத்திப் பொருள்களை இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புக்களை வழங்குவோம்-என்றார்.



பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் உரையாற்றுகையில்,

1928 ஆம் ஆண்டு முன்னாள் பெருந்தோட்ட அமைச்சர் ஜெயவர்த்தனவால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பனை அபிவிருத்திச் சபையானது இன்றுவரை பனை வளத்தை நம்பி வாழும் மக்களுக்குகைகொடுத்தவண்ணம் உள்ளது. யாழ். மாவட்டத்தில் 25 ஆயிரம் குடும்பங்கள் பனம் கைப்பணியை நம்பி வாழ்கிறார்கள். இவர்கள் பனம் உற்பத்திப் பொருள்களில் மாதாந் தம் 15 ஆயிரம் ருபா முதல் வருமா னம் பெறுகிறார்கள். மேலும் பனை ஆராய்ச்சி நிறுவனமானது பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு பல நவீன இயந்திரங்களையும் அறிமுகம் செய்து வருகின்றது. போர்க் காலத்தில் இலட்சக்கணக்கான பனைமரங்கள் அழிந்துள்ளன. அதுபோலவே தற்போதும் பல தேவைகளுக்காகப் பனை மரம் அழிக்கப்பட்டு வருகின்றது. இது தடுக்கப்படவேண்டும். மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் பனைகளை நம்பி வாழும் மக்களுக்கு பனம் பொருள்சார் உற்பத்திக்கான தேவையான அனைத்து வளங்களையும் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகின்றது. கடந்த காலங்களில் பல தீய எண்ணம் கொண்ட செயற்பாட்டாளர்களால் பனை அபிவிருத்திச் சபை சரியாக செயற்பட முடியாமல் போய் உள்ளது. எனினும் இனி அவ்வாறான செயற்பாடுகள் நடைபெற இடம்கொடுக்கக்கூடாது. பனைவளத்தை நாம் காக்கவேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உயிர் இரசாயனவியல்துறை மருத்துபீடப் பேராசிரியர் பாலகுமார், யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில் வேந்தன், வடக்கு மாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் கணேசன், பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் லோகநாதன், பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ஞாலத்தில புதுமை புகும் தாலம் நூல் வெளியீடும் இடம்பெற்றது. (த-ரி)

# அநுராதபுரம் அம்மன் ஆலயத்தின் சீரமைப்புக்கு அரசு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக். 22

தாக்குதலுக்கு உள்ளான அனுராதபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை சீரமைப்புச் செய்வதற்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

> சேதமடைந்த சிலைகளுக்குப் பதிலீடாக மீள் பிரதிட்டை செய்வதற்கு உடனடியாகத் தேவைப்படும் நிதியை வழங்குமாறும், சீரமைப்பை மேற்கொண்டு ஆலயத்துக்குரிய கும்பாபிசேகம் செய்வதற்கும் நிதியை வழங்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி அநுராதபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்குள் புகுந்து சிலர் ஆலயத்தில் கடமையாற்றும் தமிழ் [illegible] இருந்த அம்மன் மற்றும் முருகன் சிலைகளையும் சேதமாக்கியுள்ளனர். இது தொடர்பாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தரின் நேரடி விசாரணையின் மூலம் ஆலயத்துக்கு ஏற்பட்ட சேத விவரம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சேதமடைந்த சிலைகளுக்குப் பதிலீடாக மீள்பிரதிட்டை செய்வதற்கு உடனடியாகத் தேவைப்படும் நிதியை வழங்குமாறும், புனரமைப்பை மேற்கொண்டு ஆலயத்துக்குரிய கும்பாபிசேகம் செய்வதற்கும் நிதியை வழங்குமாறும், குறித்த ஆலயத்தின் பாதுகாப்புத் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்குமாறும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் இந்து சமய அலுவல்கள் திணைக்களத்துக்கு பணிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக ஆலயத்துக்குத் தேவையான நிதி திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படை முகாம் விரிவாக்கம் மக்கள் மீதும் கடும் கெடுபிடி

## முத்தரிப்புத்துறையில் தொடர்கிறது பதற்றம்

மன்னார், ஒக். 22

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முத்தரிப்புத்துறை கிராமத்தில் உள்ள கடற்படை முகாம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் பெரிய அளவில் விரிவாக்கப்பட்டுவருவதோடு, அங்குள்ள கடற்படையினரால் மக்கள் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் எனவுக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

'கடற்படையினருக்கும் முத்தரிப்புத்துறை கிராம மக்களுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து தற்போது வரை அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் அச்சத்தின் காரணமாகக் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை எனக் கூறப்பட்டது.

அத்துடன் அங்கு காணப்பட்ட சிறிய அளவிலான கடற்படைக் காப்பரண் தற்போது நிரந்தர - பெரிய கடற்படை முகாமாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. அந்தக் காப்பரணில் இருந்த கடற்படைச் சிப்பாய்கள் மாற்றப்பட்டு புதிய கடற்படை சிப்பாய்கள் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை பிரதான வீதி மற்றும் நாணாட்டான் அருவியாற்று வீதி ஆகியவற்றில் கடற்படையினர் வீதித் தடைகளைப் போட்டு பொதுமக்கள், மீனவர்களைச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வாவிடம் முறையிட்டப்பட்டுள்ளது என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

'கடற்படையினரின் குறித்த நடவடிக்கைகளினால் முத்தரிப்புத்துறை கிராமம் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. அங்குள்ள மக்கள் மத்தியில் சற்றுப் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு அதிகளவான கடற்படையினர், புலனாய்வுத்துறையினர், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா தெரிவித்தார்.

(த-21-56)

# வளங்கள் அழிவதை அனுமதிக்க முடியாது

## திருமலையில் கூறினார் ஜனாதிபதி

மூதூர், ஒக். 22

ஒரு நாட்டில் வளங்கள் அழிக்கப்படுகின்றன என்றால் அந்த நாடு அழிக்கப்படுகின்றது என்று தான் அர்த்தம். அனுமதி பெற்றால் என்ன, பெறாவிட்டால் என்ன இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய சுற்றுச் சூழல் மாநாடு ஜனாதிபதி தலைமையில் நேற்று திருகோணமலையில் நடைபெற்றது. முன்னதாக ஜனாதிபதி மொறவெவ பிரதேசத்தில் நடந்த மரநடுகை விழாவில் கலந்து கொண்டு பின்னர் திருகோணமலைக்கு வருகை தந்தார். மக்கெய்சர் திறந்த வெளியரங்கில் மாநாடு நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

இன்றிலிருந்து நாடளாவியரீதியில் மரங்களை நடவேண்டும். நாட்டின் பலபாகங்களிலும் காடுகள், மரங்கள் வெட்டப்படுகின்றன. மணல் அகழப்படுகின்றது. இவற்றில் 50 வீதம் மாத்திரமே அனுமதிபெற்று நடைபெறுகின்றன. ஏனையவை முறையற்ற வகையில் இடம்பெறுகின்றன.

ஒரு நாட்டில் வளங்கள் அழிக்கப்படுகின்றன என்றால் அந்த நாடு அழிக்கப்படுகின்றது என்றுதான் அர்த்தமாகும்.

கடந்த இரு நாள்களுக்கு முன்னர் நான் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளேன். எந்தப் பிரதேசத்திலும் இவ்வாறான விடயங்களுக்கு அனுமதி பெற்றாலும் அதை ஜனாதிபதிக்கு அனுப்பியே பெறவேண்டும் என அதில் தெரிவித்துள்ளேன்.

எமது பொறியியலாளர்கள் கட்டுமானங்களுக்குக் கொங்கிரீட் சிமெந்துக்குப் பதிலாக புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது பற்றி சிந்திக்கவேண்டும்.

இங்கு எமது எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்த விடயங்களுடன் நான் உடன்படுகின்றேன். அதற்காக அவருக்கு நான் நன்றியையும் தெரி விக்கின்றேன். எனவே, எமது எதிர்காலச் சந்ததியின் நலன்கருதி நாட்டைப் பாதுகாக்க வேண்டும் - என்றார். (த-40)

# முதியோருக்கான கொடுப்பனவு அட்டை மீளாய்வு

தென்மராட்சி, ஒக். 22

தென்மராட்சி பிரதேசத்தில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவோரின் கொடுப்பனவு அட்டைகள் மீளாய்வு தற்போது கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் நடத்தப்பட்டுவருகின்றது என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த 18ஆம் திகதி சாவகச்சேரி நகரம் (ஜே.300) கிராம அலுவலர் பிரிவிலும் நேற்று நுணாவில் கிழக்கு (ஜே.306 ) பிரிவிலும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவோருக்கான அட்டை மீளாய்வு பிரதேச செயலக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது.

மீளாய்வில் தற்போது பணம் பெறும் அத்தாட்சிப் பத்திரம் குடும்ப அட்டை தேசிய அடையாள அட்டை, போன்றவை பரிசீலனை செய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

(வ 9)

# கசிப்பு உற்பத்தி நிலையம் அல்லிப்பளையில் முற்றுகை

யாழ்ப்பாணம், ஒக்.22

கிளிநொச்சி, பளை - அல்லிப்பளை பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டு வெளி மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர் என்று பளை பொலிஸ் நிலைய பரிசோதகர் மினிப்புற தெரிவித்தார்.

முற்றுகையிடப்பட்ட கசிப்பு உற்பத்தி செய்யும் இடத் தில் இருந்து 160 லீற்றர் கோடா, 26 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

'பளை பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து நேற்று முன்தினம் பளை - அல்லிப்பளை களப்பு பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த சோதனை நடவடிக்கைகளிலேயே களப்பு பகுதியில் இருந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று இனம்காணப்பட்டு முற்றுகையிடப்பட்டது. முற்றுகையின் போது அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வெளி மாவட்டங்களைச் சேர்ந்த இருவர்கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் பரிசோதகர் மினிப்புற தெரிவித்தார்.

(வ-21,ரி3)

வட இலங்கை சுதேச வைத்தியசபை
அறிவித்தல்
ஏற்கனவே அறிவித்தபடி பொதுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு வடமாகாண சுதேச மருத்துவ அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் அங்கு கூட்ட நிகழ்ச்சிநிரல் சபையால் வழங்கப்படும்.
வட இலங்கை சுதேச வைத்தியசபை

கடை இடமாற்றம்
164, ஸ்ரான்லி வீதியில் இயங்கும் எங்கள் ஸ்தாபனமான ஹரிணி காட்வெயர் அன் மோட்டோர்ஸ் 21.10.2016 ஆம் திகதியிலிருந்து இல. 281, கே.கே.எஸ். வீதியில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.
உரிமையாளர்-ஸ்ரீபாதன் 021 2222850

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம்: 56
சீட்டிழுப்பு திகதி: 21.10.2016
ரூ. 98,560,620/-
0 37 58 61 64

அபிவிருத்தி லொத்தர்
21.10.2016 2046
22 28 49 51
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,884,840 /-
வெற்றி இலக்கங்கள்
40 54
டபுள் சான்ஸ்

சீட்டிழுப்பு இலக்கம் 507
சீட்டிழுப்பு திகதி 2016.10.21
வெற்றி இலக்கங்கள்
09 15 25 42 E

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்
பரிசளிப்பும் கலைநிகழ்வும்
அழைப்பு
இடம்: துர்க்கா மணிமண்டபம் நல்லூர், யாழ்ப்பாணம்
காலம்: 2016.10.23 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி
தலைவர்
திரு. ந. சோதிநாதன் அவர்கள்
(ஸ்தாபகரும், தலைவரும், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)
பிரதமவிருந்தினர்
ஸ்ரீமான் ஆ. நடராஜன் தம்பதியினர்
(இந்திய துணைத்தூதுவர்)
சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி தம்பதியினர்
(பீடாதிபதி வணிக முகாமைத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்)
திரு. திருமதி பா. சிவதீபன் தம்பதியினர்
(பிராந்திய முகாமையாளர், இலங்கை மத்திய வங்கி)
கௌரவ விருந்தினர்கள்
நாதஸ்வரச் சக்கரவர்த்தி
P.S. பாலமுருகன் தம்பதியினர்
கலைமாடக்கோன் திரு. ச. சிவஞானம் தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர், கிழவன் காடு கலாமன்றம் காரைநகர்)
நிகழ்ச்சிகள்
கலாமன்ற மாணவர்களின்
பண்ணிசை, குழுஇசை, வயலின் இசை, மிருதங்கஇசை, அரங்க ஆற்றுகை, நாட்டியாஞ்சலி என்பனவும்
சிறப்பு நிகழ்ச்சி
பட்டிமண்டபம்
இன்றைய இளைய தலைமுறையின் நெறிப்பிறழ்வுக்கு பெரிதும் காரணம்
பெற்றோர்களே ! சமூகமே !
தலைவர்: செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்.

சரவணா ரெக்ஸ்
நல்லூர்




தீபாவளியை முன்னிட்டு
உயர் தரம், புதிய தெரிவு என்பன
உங்கள் மனம் நிறைந்த விலைகளில்
Side Open Cotton Salwar 2750/= Size: M,L,XL, XXL
Flat Model Cotton Salwar 2900/= Size: M,L,XL, XXL, XXXL
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், (பின் வீதி)
(சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் ஆஸ்பத்திரிவீதி, பிரதான வீதி பகுதிகளில் வாகனத்தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்கு உடன் தேவை.

077 362 7055

**Angela International Siddha Aroghya**

சிகிச்சைகள், முள்ளந்தண்டு, நரம்புசிகிச்சை, கழுத்து வலி சிகிச்சை, முழங்கால் வலி, நீரிழிவு, எடைஇழப்பு, ஆஸ்துமா, குடல்புண், சொரியாஸிஸ், சைனஸ், ஒற்றைத்தலைவலி, முடி உதிருதல், மற்றும் பல

077 5081914, 077 078 7111

**ஜப்பான் Toyota Coaster Bus விற்பனைக்கு**

28 இருக்கைகளை கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட பஸ் வண்டி

NB - xxxx, YOM 2011, Registered in 2012,
Manual Transmission,28 Seated,
Original adjustable seats, DVD, Wifi,
Automatic Door,Curtains,
Original Mileage 198000 km,
used for staff transport
and tourism,
Mint Condition.



சுற்றுலாக்களுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு - 0759732169

## பளையில் நேற்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.22

கிளிநொச்சி, பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான ஆவணங்களை பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை நேற்று பளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிய இந்த நடமாடும் சேவையில் பளை பிரதேசத்துக்குட்பட்ட 591 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். பெண்தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ளவர்களில் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், அடையாள அட்டைகள், காலம் பிந்திய பதிவுகள் போன்ற பதிவுகள் பெறப்பட்டு அவற்றுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடமாடும் சேவையில் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், அமைச்சின் பணிப்பாளர், ஆள்பதிவு திணைக்கள உதவி பணிப்பாளர், பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள் பெண்தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (வ-ரி3)

## பரிசளிப்பு விழா

காரைநகர், ஒக்.22

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித்திணைக்கள கல்வி அபிவிருத்தி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரேமாவதி செல்வின் இரேனியல் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரனும் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

++++++

காரைநகர், ஒக்.21

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலைவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் மன்றத்தின் நிறுவனத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தம்பதியினரும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி தம்பதியினரும் இலங்கை மத்திய வங்கி பிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன் தம்பதியினரும்கௌரவ விருந்தினராக நாதஸ்வரச் சக்கரவர்த்தி எஸ்.பாலமுருகன் தம்பதியினர், கலைமாடக்கோன் ச.சிவஞானம் தம்பதியினர் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.(வ-250)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவல் சபையினரின் வழிபடுநர் சபை உறுப்பினர்களுக்கான அறிவித்தல்

**கௌரவ வழிபடுநர் சபை உறுப்பினர்களே!**

உதயன் பத்திரிகையில் 01.10.2016 ஆம் திகதிய 24 ஆம் பக்கத்தில் வெளியாகிய அறங்காவலர் சபையினரின் அறிவித்தலின்பால் தங்கள்கவனம் ஈர்க்கப்படுகின்றது. மேலும் நேற்றைய தினம் உதயன் பத்திரிகை யில் 4ஆம் பக்கத்தில் ஆலய அறங்காவலர் சபையினதோ வழிபடுநர் மகாசபையினதோ தீர்மானங்கள் இன்றி தன்னிச்சையாகவும் பதவியை துஸ்பிரயோகம் செய்தும் செயலாளரால் வெளியிட்ட அறிவித்தல் அவரால் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் ஆகியவற்றை அறங்காவலர் சபை நிராகரிக்கின்றது. மேலும்

அறங்காவலர்கள் சபை முகாமைத்திட்ட விதி 27(இ) யின் படி முறையான தீர்மானங்கள் மூலமே அறங் காவலர் சபையினருக்கு எதிரான வழக்குகளை எதிர்கொண்டது. முகாமைத்திட்டம் 27(இ) பின்வருமாறு கூறுகின்றது.

எந்தவொரு நீதிமன்றத்திலாவது அல்லது வேறு தீர்ப்பு மன்றத்திலாவது அறங்காவலர்களுக்கெதிராக வழக்கேதாவது தாக்கல் செய்யப்படுமிடத்து அறங்காவல் சபையினால் அத்தகைய வழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை வழிமுறை அறங்காவலர் சபையின் தீர்மானம் ஒன்றின் மூலமே முடிவு செய்யப்பட வேண்டுமென்பதோடு ஒரு பொதுவான வழிமுறை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

மேலும் 30.04.2016இல் கூட்டப்பட்ட கூட்ட அறிக்கை வழிபடுநர் மகாசபையினரால் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. தீர்மானங்கள் தொடர்பாக முகாமைத்திட்ட விதி 8(2) இற்கு அமைய அறங்காவலர் சபையினருக்கு அறிவிக்கப்படவில்லை.

**எனவே முகாமைத்திட்டத்திற்கு முரணாகக் கூட்டப்படும் 23.10.2016ஆம் திகதிய கூட்டத்தினை அறங்காவலர் சபையினருடன் இணைந்து வழிபடுநர் சபை உறுப்பினர்களும் புறந்தள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன்** 30.10.2016இற்கு முன் அறங்காவலர் சபையின் இம் மாதக்கூட்டத்தினைக் கூட்டி ஆராய்ந்த பின் வழிபடுநர் சபையினைக் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். 02.10.2016 கூட்டத்தின்னை புறந்தள்ளிய வழிபடுநர் சபை உறுப்பினர்களுக்கு எம் நன்றிகள்.

**அறங்காவலர் விபரம்**

01. ஆ.தியாகராசா - தலைவர் மரபுவழி அறங்காவலர்
02. கு.சரவணபவானந்தன் - மரபுவழி அறங்காவலர்
03. சி.தனபாலசிங்கம் - அறங்காவலர்
04. கோ.வாமதாசன் - அறங்காவலர்
05. ச.தருமராசா - அறங்காவலர்
06. த.அமிர்தராசா - அறங்காவலர்
07. ந.சுரேஸ்குமார் - அறங்காவலர்
08. க.பரமலிங்கம் - அறங்காவலர்
09. கே.நாகேஸ்வரன் - மரபுவழி அறங்காவலர்
10. ந.மோகனரூபன் -

(J/3549)(11.17.18)

எமது சட்டத்தரணியின் ஆலோசனைப்படி இவ்வறிவித்தல் விடப்படுகின்றது.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.10.2015 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 17.12.2016 (சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | | |
| | மானிப்பாய் | | |
| காங்கேசன்துறை | மல்லாகம் | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | - | | |
| நெல்லியடி | - | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | 16.12.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை 17.12.2016 (சனிக்கிழமை) |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | |
| | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |

**அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.**

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல:- 021 222 2601 / 021 222 [illegible]**

**தொலை நகல்:-021 222 2602**

(C/85047)
(11.18)

**நீண்டகால வாடகைக்கு**

புத்தம் புதிய Mitsubishi Double Cab வாகனம் நீண்டகால வாடகைக்குக் கொடுக்கப்படும்.

077 078 7111

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா பிற்போடப்பட்டுள்ளது**

இன்று (22.10.2016) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இவ்விழா தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர். 21.10.2016

**60 ஆவது பிறந்தநாள் அகவையும் திருமண வாழ்த்துக்களும்**

**சந்திரன் நாகேஸ்வரி**



தாயவள் சுமப்பதோ ஈரைந்து மாதம்
தாயுமானவன் சுமப்பதோ தீராது நாளும்
துன்பங்கள் யாவையும் தன்னோடு
வைத்தவரே இன்பங்கள்
எமக்களித்து ஓடாகித் தேய்ந்தவரே
வாழ்க்கைப் பயணத்தின் திசைகாட்டியுமாய்,
நல் வழிகாட்டியுமாய் சுற்றாரும்,
உற்றாரும் போற்றிட ஏணியாய் நின்று
ஏற்றிவிட்ட எம் அப்பாவே, கற்றார் சபையில்
நாமும் நின்றிட பள்ளி சேர்த்து பக்க பலமாய் நின்றவரே
கேட்டதெல்லாம் கொடுக்குமாம் காமதேனு,
நாம் கேட்டதெல்லாம் கொடுத்தவர் எம் அப்பாவே!
ஆயிரம் உறவுகள் எமக்கிருந்தாலும் உங்களுக்கு ஈடாகுமா!
காலமெல்லாம் காத்திட எம் தந்தைக்கு இன்று
60 ஆவது வைரவ விழா கண்டிட்ட நாளுடன் திருமண நாளையும்
கண்ட எம் தந்தை தாயையும் இன்றுபோல் என்றும்
நீண்ட ஆயுள் பெற்று வாழி வாழி என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஷார்த்திரி, விந்தி (பிள்ளைகள்)
பதி, சிவா (மருமக்கள்)
அக்ஷஜன், அக்ஷரன் (பேரப்பிள்ளைகள்)

(சி.144) (13.18.17)

## கைதடி வீட்டுத்திட்டச்சங்க காணி உரிமையாளர்களுக்கான பகிரங்க அறிவித்தல்

தென்மராட்சிப் பிரதேச செயலகப்பிரிவின் நாவற்குழி மேற்கு (J/294) கிராமஅலுவலர் பிரிவிலுள்ள காணிகளை கைதடி வீட்டுத் திட்டச் சங்கம் ஊடாகப் (1974 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை) பெற்றுக் கொண்ட உரிமையாளர்கள் எதிர்வரும் 22.11.2016 ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சிப் பிரதேச செயலகக் காணிக்கிளையில் தமது விவரங்களை வார நாள்களில் பதிவு செய்துதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இச்சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களும் தமது விவரத்தை வார நாள்களில் பதிவு செய்துதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(C 25958)
(14,17,18)

பிரதேச செயலர், தென்மராட்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கர் தீபாவளி மெகா சேல்

இடம் சுன்னாகம் மத்திய சந்தை மேல்மாடி

காலம் 22 - 25 ஒக்டோபர் 2016

**சகல விதமான இலத்திரனியல் வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் தளபாடங்களை 60% வரையான விலைக் கழிவுடனும், உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.**

SAMSUNG SISIL Whirlpool
SINGER
SONY Welling HITACHI Inspire the Next

தொ.பே: 021 224 0555



வருட இறுதியை சந்தோஷமாக கொண்டாட, அனுபவிக்க...

## மலேசியன் சுற்றுலா ஹோட்டல் பெக்கேஜ்

**யாழ் மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

மலேசியாவை பார்வையிடுவதற்காகவே மிக மிகக் குறைந்த விலையில் சிறந்த Hotel Package அறிமுகப்படுத்தப்படுகிறது.

**மலேசியா தலை நகரில் 3 Star Hotel**



- 3 இரவுகள் 4பகல்
- காலை உணவு அமெரிக்கன் Style
- விமான நிலையத்திலிருந்து Hotel வரை இரு வழிப் பயண வசதிகள் உட்பட

Hotel Package **7499/=** மாத்திரமே.

விமான Ticket+Visa விசா வசதிகளும் செய்து தரப்படும்.
"நீங்கள் பதிவு செய்யும் நேரத்தில் Ticket+Visa கட்டணம் அறவிடப்படும்"

Note: சந்தைப்படுத்தல் (ஆண் /பெண்)மற்றும் காசாளர் (பெண்) ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**SHARMILA TRAVELS & TOURS**
No.289 Stanley Road, Jaffna.
மேலதிக தகவல்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்.
T.P No: 021 222 0266/ 021 222 0267
pettah@sharmilatravels.com


# காட்டுப் பூனை தாக்கி 2 பெண்கள் படுகாயம்

கொழும்பு, ஒக் 22
மஸ்கெலியா, ஓல்டன் தேயிலைத் தோட்டத்தில் காட்டுப்பூனை தாக்கியதில் இரண்டு பெண் தொழிலாளிகள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். (த)


## SB Travels

- மலேசியா, தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்கான வீசா உடன் எடுத்துத் தரப்படும் வீசா விண்ணப்பங்கள் நிரப்பித் தரப்படும்.
- அனைத்து நாடுகளுக்குமான விமான டிக்கட்கள் மிகக் குறைந்த விலையில் வழங்கப்படும்.

வீசா விண்ணப்பப்படிவம் நிரப்ப 100 /= மட்டுமே

சென்னை -19,800/= மதுரை -17,800/= டோகா -15,000/=

212, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 222 7111, 021 222 7888
(அ/23252)(13.18.17)



## சிறிகுமரன் ரெக்ஸ்

தித்திக்கும் தீபாவளியை "சிறிகுமரன் ரெக்ஸ்" உடன் கொண்டாடி மகிழுங்கள்



Office wear
சாறி ரூபா 590/- இலிருந்து
(With Blouse)

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறி, சல்வார் மற்றும் ஆடைத் தெரிவுகளை அதிரடி விலைகளில் பெற்றிட.

இச்சலுகை 19.10.2016 - 29.10.2016 வரை மட்டுமே.

சிறிகுமரன் ரெக்ஸ்
770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.



சொவ்ட்லொஜிக்கின் தீபாவளி சிறப்பு தள்ளுபடிகள்.



30% வரை தள்ளுபடிகள்
இலகு தவணை திட்டம்
விசேட சலுகைகள்
வட்டியின்றி செலுத்தும் முறை.
softlogic

Panasonic TH-32D400 — ரூ. 49,999/- ரூ.2,690 x 14 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 15,000/= விலைக் கழிவு — 3 YEARS WARRANTY

SAMSUNG UA32FH4003 — ரூ. 49,999/- ரூ.2,690 x 14 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 25,000/= விலைக் கழிவு — 3 YEARS WARRANTY

DELL DELL 3558 CORE I3 — ரூ. 69,999/- ரூ.3,971 x 15 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 20,000/= விலைக் கழிவு — 4 YEARS WARRANTY

acer — ரூ. 54,999/- ரூ.3,600 x 14 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 10,000/= விலைக் கழிவு — இலவசம் A4 Colour Printer

SAMSUNG — ரூ. 46,999/- ரூ.2,350 x 17 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 7,000/= விலைக் கழிவு

SAMSUNG RT27JARMASE — ரூ. 86,999/- ரூ.4,300 X 17 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 9,000/= விலைக் கழிவு

Midea MAS70-S140STCL — ரூ. 46,999/- ரூ.2,690 x 14 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 2,500/= விலைக் கழிவு

Whirlpool WWT-70X — ரூ. 27,999/- ரூ.1,570 x 14 மாதாந்தம் வட்டியின்றி செலுத்தும் — ரூ 2,500/=

Panasonic Mixer Grinder — ரூ. 13,499/-
Rice Cooker — ரூ. 4,499/-
Microwave — ரூ. 13,999/-

Panasonic — ரூ. 116,999/-

| | | |
|---|---|---|
| Puthukkudiyiruppu 021 206 1571 077 505 7870 | Thirunelvely 021 567 1118 077 834 7733 | Nelliady 021 567 2148 077 372 5604 |
| Jaffna 021 567 1108 077 799 1283 | Chunnakam 021 567 2148 077 892 8168 | Softlogic max 021 567 8989 077 739 7734 |

நிபந்தனைகளுக்குட்பட்டது* * சொவ்ட்லொஜிக் உத்தரவாதத்தின் பக்கபலம்

Panasonic SAMSUNG Candy DNB NOKIA xerox Midea lifeStyles


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம்...

தெளிவாகப் புரிந்திருப்பார் என்பதில் எவ் விதமான சந்தேகங்களும் இருக்க முடி யாது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய சுற்றுச்சூழல் மாநாடு ஜனாதிபதி தலைமையில் திருகோணமலையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வெவ்வேறு மக்கள் உள்ள நாட்டின் தேசி யப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கும் மற்றும் ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவும் ஜனாதி பதி மைத்திரி பால முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றார். நாட்டில் சர் வாதிகாரத்தை இல் லாமல் செய்வது, ஜனநாயகத்துக்கு உரிய இடத்தைக் கொடுப்பது போன்ற பல்வேறு கருமங் களில் அவரது அரசு ஈடுபட்டு வருகின்றது. ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண் டும் என்று கூறுகின்றபோது தனக்குள்ள அதிகாரங்களை விட்டுச் செல்லத் தயா ராக இருப்பதாகவும் அவர் தெட்டத் தெளி வாகக் கூறுகின்றார். இந்த நாட்டில் தலை வர்களாக இருந் தவர்கள் பலர் இவ்வித மான உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை கூறினார்கள். அவை பின்னர் நிறைவேற் றப்படவில்லை. ஆனால் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தனது ஜனாதிபதி அதி காரத்தை நீக்கி, நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சி இருக்கக் கூடாது என்பதற்காக முயற் சிக்கின்றார்.

ஜனநாயக முறைமை இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கவும் முன்வந்துள்ளார். அதற்கு எமது பங்களிப்பை நாம் வழங்க வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆட்சிக் காலத்திற்குள் நாட்டில் நிலையான ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த நாட்டில் நிரந்தர ஜனநாயகம் மலர் வதே, ஜனாதிபதி தீர்க்க நினைக்கும் பிரச் சினைக்கு நிரந்தரத் தீர்வாகும்.

சர்வாதிகார முறைமையிலான ஆட்சி யில்லை எனக் கருதுகின்ற ஜனாதிபதி ஜன நாயகம் முழுமையாக நாட்டில் நிலவுவ தற்கு அதிகாரம் எந்தளவுக்குப் பகிர்ந்தளிக் கப்படவேண்டும் என்பதையும் உணர்ந்தி ருப்பார் என்று நான் கருதுகிறேன்.

ஜனாதிபதி மைத்திரிபால தனது பதவிக் கால ஆட்சியில் இருந்து நீங்குகின்ற போது இந்த நாடு வேறு ஒரு நாடாக மாறவேண் டும். இன்றைக்கு இந்த ஆட்சி மாற்றத் தின் பின்னர் நாடு பன்னாட்டுச் சமூகத்தி னால் மதிக்கப்படுகின்றது. ஜனாதிபதி நாடு களுக்குச் செல்லும் போது சிறப்பான வர வேற்பு வழங்கப்படுகின்றது.

நாட்டில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் ஒற்று மையையும் புரிந்துணர் வையும் ஏற் படுத்த இந்த அரசு செயற்படுகின்றது என்ற கருத்து பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஆதலால் இந்தக் கருமத் தில் ஜனாதிபதியும் அவரது அரசும் வெற்றி பெறுவதற்கு நாமெல்லோரும் ஒத்து ழைக்க வேண்டும். நாட்டில் நிலையான ஜனநாய கம் ஏற்படுவதற்கு அதிகாரங்கள் முறையாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஜன நாயகம் நிலைபெறும் - என்றார். (த-5-40)

## காரணம்...

கலைக்கழக மாணவர்கள் தமது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றனர். விரைவில் அது தொடர்பில் அறிவிக்கப்படும் என்று அவர்கள் தெரி வித்தனர்.

சக மாணவர்கள் சுடப்பட்டமைக்கு அவர் கள் கடும் அதிருப்தியை வெளியிட்டனர்.

"மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத் தப்பட்டது தொடர்பில் நீதியான விசா ரணை நடத் தப்படவேண்டும். அதற்கு முன்ணனர் சுடப்பட்டுக் கொல்வதற்கான காரணம் கூறப்படவேண்டும். அப்பாவி மாணவர்களைச் சுட்டுக்கொன்றமை யைக் கண்டிக்கிறோம்" என்று மாண வர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவர்களின் இறுதிக் கிரியைகள் வெவ்வேறு நாள்களில் நடை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சி மாணவனின் இறுதிக் கிரி யைகள் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம், அளவெட்டி மாணவ னின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை யும் இடம்பெறும் என்று அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (உ-4,10)

### தேவை

குடிநீர் விநியோகம் செய்வதற்கு விநியோகபிரதிநிதிகள் தேவை.
தொடர்பு - 077 5466125
(ஜே/5581)(17.19.20)

### தேவை

கணக்கு பதிவாளர் தேவை
ஆண்கள் மட்டும்,
அனுபவம் விரும்பத்தக்கது.
22, மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
தொடர்பு - 021 2242570
(ஜே5576)(17.19.20)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்

**என். குருநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற் றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம் நெடுந்தீவு.
(ஜே.5577)(17.19.20)




### கார் விற்பனைக்கு (CAR FOR SALE)

TOYATA AQUA 2012 Model (Registered 2015) CAG xxxx Light Blue
Low mileage, FULL OPTION (DVD,R/CAM)
SALE IN JAFFNA T.P: 077 7968805
Price - Negotiable (J.5582) (16,17,19)

### வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
* கணக்கு உதவியாளர் (பெண்)
* சாரதி (A தர)
* சுத்திகரிப்பாளர் (கிளிநொச்சி)
தொடர்பு: 077 151 2032 (8am - 5pm)

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலட்சுமி பொன்னம்பலம்



**தோற்றம்**
**18.01.1937**

**மறைவு**
**20.10.2016**

யாழ்.கோண்டாவில் வடக்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி பொன்னம்பலம் கடந்த (20.10.2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம் பலத்தின் அன்பு மனைவியும் சுதேசபாலன் (பிரான்ஸ்), சத்தியபாலன் (கனடா), விஜயலட்சுமி (இலங்கை), தேவமலர் (கனடா), பாலகுமாரன் (பிரான்ஸ்), சுகந்தினி (கனடா), அருள்தேவி (கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகா (பிரான்ஸ்), மஞ்சுளா (கனடா), சோதிராஜா (இலங்கை), பிறேம் (கனடா), சிவதர்ஷினி (பிரான்ஸ்), மோகனச்சந்திரன் (கனடா), இரவீந்திரன் (கனடா), விஜயந்தி(கனடா) ஆகியோரின் மாமியும் இராணிமலர், தவராஜா(இலங்கை), கனகாம்பிகை (கனடா), மகேந்திரராஜா (டென்மார்க்), மல்லிகாதேவி (கனடா), மன்மதராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகம்மா, காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம், பவளம், தங்கச்சி யம்மா, குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மைதிலி, மிதிலன், கிருஷாந் (பிரான்ஸ்), சுருதி, கோகுல் (கனடா), அருந்ததி, மாலதி, சகிலா, திபாசினி (இலங்கை), பபிஷா, கவிஷா, லெனிஷா (பிரான்ஸ்), சங்கீதன், லக்ஷனா (கனடா), ரஜுஜன், வர்ணஜா (கனடா), ஆர்யன், ஆதன், மகாலட்சுமி (கனடா), சுதாகரன் (இலங்கை), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோண்டாவில் வடக்கு,**
**கோகுல வீதி.**


தகவல்:
**குடும்பத்தினர்**
**021 2054661**

(J.5580) (16,17,19)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை பேரம்பலம் (ராசா மாஸ்ரர்)

**(ஓய்வு பெற்ற அதிபர்)**



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பேரம்பலம் 20.10.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - விசாலாட்சி தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான இராமநாதன் - வள்ளி யம்மை தம்பதிகளின் அன்பு மருமக னும் புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் தில்லையம்பலம், துரைசிங்கம், காலஞ் சென்ற சிவமணி மற்றும் அருணாச் சலம், கமலாவதி, மகேஸ்வரி ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும் வனஜா (ஆஸ்திரேலியா), விஜினா(மல்லாவி), ஜீவகுமாரி(சுவிஸ்), நந்தகுமார் (லண் டன்), ஜீவகுமார்(பிரான்ஸ்), ஞானகுமார் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சித்திவிநாயகர் (ஆஸ்திரேலியா), கோணேஸ்வரன் (மல்லாவி), சிற்சொரூபன் (சுவிஸ்), காந்திமதி(லண்டன்), கிருஸ்ணவேணி(பிரான்ஸ்), கலைவாணி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நல்லம்மா, காலஞ்சென்ற தனிநாயகம்(ஓய்வு பெற்ற தபால் அதிபர் நெடுந்தீவு), காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் குமாரசாமி(ஓய்வு பெற்ற அதிபர்), இலட்சுமி, பத்மநாதன், சறோஜினி தேவி(ராசு), இராஜேஸ்வரி(பூமணி), மங்கையற்கரசி, சிவகாமசுந்தரி(கிளி), பாக்கியலட்சுமி (வவா), யோகராணி(ராணி), கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் சிவலிங்கம், காலஞ்சென்ற கனகசபை மற்றும் முத்துக்குமார், விவேகானந்தராசா, கைலைநாதன், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகலனும் பிரியங்கா, காவிஜா, யாழினி, சர்விகன், சாதுஷன், சாதுரிஜன், ஆசகன், சபின், சச்சின், அனஜன், மதுமிதா, நிதுலன், ஈழவன், ஈழவாணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(23.10.2016) ஞாயிற்றுக்கிழமை இல.749, யோகபுரம் மத்தி, மல்லாவி எனும் முகவரியில் பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல - 749,**
**யோகபுரம் மத்தி - மல்லாவி.**

(c/25971) (14,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 363 8533**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுக்கையில் இருந்தவரின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

## தாவடியில் அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். தாவடிப் பகுதியில் நேற்று அதிகாலைவேளை வீட்டுக்குள் புகுந்த திருடர்கள்படுக்கையில் இருந்தவரின் மூன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகப், பொலிஸார் தெரிவித்தனர்.

தாவடி தெற்கிலேயே நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் நடைபெற்ற வீட்டில் ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து வருகை தந்தவர்கள் தங்கியுள்ளனர். தங்கியுள்ளவர்களில் ஒருவர், வீட்டின் மொட்டை மாடியில் படுத்துள்ளார்.

இவ்வாறு படுத்துறங்கியவரின் தங்கச் சங்கிலியே திருடர்களால் களவாடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் இது தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(த-5-101)

# பெண்கள் எப்போது சட்டம் இயற்றுவர்?

## முல்லைத்தீவில் நடந்த் கலந்துரையாடலில் மூத்த ஆய்வாளர் சிராணி விஜயசுந்தர கேள்வி

முல்லைத்தீவு, ஒக். 22

பெண்கள் சட்டங்களை நடைமுறைப் படுத்துபவர்களாக மாத்திரம் இல்லாமல் எப்போதுசட்டங்களை இயற்றுகின்றவர்களாக மாறப்போகின்றனர்.

இவ்வாறு கேள்வி எழுப்பினார், மாற்றுக் கொள்கைகளுக்கான மூத்த ஆய்வாளர் சிராணி விஜயசுந்தர.

முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று, உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தல் என்ற தலைப்பிலான கலந்துரையால் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு, உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்களிப்பின் அவசியம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மூத்த ஆய்வாளர் சிராணி விஜயசுந்தர தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி தொடர்பான விடயங்களில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடந்த ஒன்பது ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகின்றது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் அரசியலில் பெண்களின் நிலையை நோக்கும்போது திருப்திகரமானதாக இல்லை. பெண்களுக்கு அரசியல் ரீதியாகச் சமமான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல் ஜனநாயகத்தை நிலைநிறுத்த அவசியமானதாகும்.

எவ்வாறாயினும் அனைத்து ஜனநாயக நாடுகளிலும் தேசிய மட்ட அரசியலுக்கு வரும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விடவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

உலகில் உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப் பினர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்து24. இதில்ஆண் உறுப்பினர்களின் எண் ணிக்கை 32 ஆயிரத்து 210 ஆக இருக்கின்றது. அதேவேளை பெண் உறுப்பினர்கள் 10 ஆயிரத்து 237 ஆகும். எமது நாட்டு நாடாளுமன்றத்தில் 13 பெண்களே அங்கம் வகிக்கின்றார்கள். அரச உத்தியோகங்களில் பெண்கள் 85 வீதமாக இருக்கின்றார்கள். பெண்கள் சட்டங்களை நடைமுறைபடுத்துபவர்களாக மட்டும் இல்லாமல் சட்டங்களை இயற்றுபவர்களாக எப்போது மாறப்போகின்றோம்-என்றார்.

(த-5-ரி7)

# பனைமரத்தின் மருத்துவ குணங்கள்

பனைமரத்தில் இருந்து கிடைக்கும் நுங்கு நீரை தொடர்ந்து சாப்பிட்டுவர கோடை காலத்தில் ஏற்படும் வேர்க் குரு நீங்கும்.

"தோலுடன் நுங்கைச் சாப்பிட்டு வர சீதக் கழிச்சல் நீங்கும்"




பனங்கற்கண்டை ஏதாவது ஒருவகையில் அடிக்கடி பயன்படுத்திவர அம்மை நோயால் ஏற்பட்ட உடல் வெப்பம், தாகம், போன்றவை நீங்கும்.

பனிங்கிழங்குக்கு ஊடல் குளிர்ச்சியைத் தரும் தன்மை உண்டு. இந்தக் கிழங்கை சாப்பிட்டு வந்தால்உடல் அழகு பெறும், உடற் பலமும் அதிகரிக்கும்.

**பதநீர் மகிமை**

சுண்ணாம்பு சேர்த்து எடுக்கப்படும் பனஞ்சாறுக்கு பதநீர் என்று பெயர்.

மேக நோய் இருப்பவர்கள் இதை 40 நாள்களிடைவிடாது அருந்தி வர அந்த நோய்ப் பாதிப்பில் இருந்துவிடுபடலாம்

பதநீரில் இருந்து எடுக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவற்றுக்கும் நோய் தீர்க்கும் குணங்கள் உண்டு.

பனை நுங்கு கோடைகாலத்தில் ஏற்படும் தாகத்துக்கு மிகவும் ஏற்றது.

பனங்கிழங்கை உலர்த்தி இடித்து மாவாக்கி அதனுடன் தேங்காய் உப்பு சேர்த்துச்சாப்பிட்டுவரஉடலுக்குப்பலம்உண்டாகும்.மேலும்உடல்பருமன்ஆகும்.

புனம் பூவைச் சுட்டு சாம்பலாக்கி அதில் சிறிது தேங்காய் எண்ணெய் கலந்து புண்களின் மீது பூச ஆறும்.

உலகளாவிய ரீதியல் எடுத்துப் பார்க்கின்ற போது மிகச் செழிப்பான மற்றும் தொடர்பான இலக்கிய பாரம்பரியம் இலங்கைக்கு சொந்தமாக இருப்பதை காணலாம். கிறிஸ்தவ காலகட்டம் ஆரம்பத்துக்கு முன்னிருந்தே இது தொடர்பான பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளை நாம் காணலாம். கிறிஸ்தவ ஆண்டுகளால் பார்க்கின்ற போது 20 நூற்றாண்டுகளுக்கும் அதிகமான காலமாக தாள இனத்தைச்சேர்ந்த (பனை மரம் ) பனை ஓலைகள் மீது எழுத்தெழுதும் பாரம்பரியம் ஒரு கலையாக தமிழர் மத்தியில் நிலவியிருப்பதைக் காணலாம்.

பனை ஓலைகள் மீது எழுத்தெழுதும் கலையினுள் ஒருவிதமான பாரம்பரிய தொழில்நுட்ப விதிமுறை நிலவி இருந்துள்ளதோடு அவற்றில் கலாசார ரீதியிலான முக்கியத்துவமும் உள்ளடங்கி உள்ளது. புராதன சமுதாயத்தினுள் சமயம், கலாசாரம் பொருளாதாரம் தொழில்நுட்பம் கலை மற்றும் பழக்கவழக்கங்கள் போன்றவையுடன் ஒன்றுசேர்ந்த ஒருசம்பிரதாயம் பனை ஓலை ஏடுகள் எழுவதில் உள்ளடங்கி இருந்தது. ஆகையால் இது சாராசரி எழுத்துக் கலைக்கு அப்பாலரன அகலமாகப் பரந்துப் போயுள்ள எழுத்துக் கலாசாரமாக எண்ணலாம். எமது பாட்டன் முப்பாட்டன்களால் ஆயிரக்கணக்கான ஆண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்வுகள் மற்றும் அதனால் பெற்றுக் கொண்டுள்ள அனுவங்களை அடிப்படையாகக் கொண்ட விலை மதிக்க இயலாத மகத்தான ஒரு அறிவுத் தொகை இந்தப்பனை ஓலை ஏடுகளில் உள்ளது. பனைமரத்தில் இருந்து கிடைக்கும் பதநீர் பலவிதமான நோய்களைத் தீர்க்கும் மருந்தாக உள்ளது. பனை நீரிலுள்ள சீனிச் சத்து உடலுக்கு தேவையான வெப்பத்தைத் தருகிறது. இதிலிருக்கும் குளுக்கோஸ் மெலிந்து தேய்ந்து வாடிய உடலுடைய குழந்தைகளின் உடலை சீராக்கி நல்ல புஷ்டியைத் தருகிறது.

கருவுற்ற பெண்களுக்கும் மகப்பேறு பெண்களுக்கும் ஏற்படுகின்ற மலச்சிக்கல் வயிற்றுப்புண் முதலியவைகளை குணப்படுத்துகிறது. குருதி அழுத்தத்தை சீராக்குகிறது. தைபோயிட்டு, சுரம், நீர்க்கட்டு முதலிய வியாதிகளை போக்குகின்ற நல்லமருந்தாகவும் இது செயற்படுகிறது.

இதை அருந்துவதால் இருதய நோய் குணமாகும். இருதயம் வலுவடையும். இதிலிருக்கும் கல்சியம் பற்களை உறுதிப்படுத்தி ஈறுகளில் குருதிக்கசிவு ஏற்படுவதைத் தடுப்பதோடு பற்களின் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது. இதிலிருக்கும் இரும்புச்சத்து பித்தத்தை நீக்கி சொறி, சிரங்கு, உட்பட சகல தோல் வியாதிகளையும் நீக்குவதுடன் கண்நோய் ஜலதோசம் காசநோய் இவைகளையும் நீக்குகிறது.

மேலும் பதநீரானது சயரோகம், குருதிக் கடுப்பு, அதிக உஷ்ணம், பசியின்மை வயிற்றுப்புண் வாய்வு சம்பந்தமான நோய்களையும் குணப் படுத்துகிறது.

பா. சுதாகரன்.

ஊடக அனுசரணை: உதயன்

# குடிதண்ணீர் வடிகட்டும் இயந்திரம் கள்ளிக்குளத்தில்

## தமிழரசுக் கட்சியின் கனடாக் கிளையின் நிதி உதவியுடன்

வவுனியா, ஒக். 22

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கனடாக் கிளையின் நிதி உதவியில், வவுனியா கள்ளிக்குளம் மீள்குடியேற்றக் கிராமத்தில் குடிதண்ணீர் வடிகட்டும் இயந்திரத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் இதனைத் திறந்து வைத்தார்.

சிறுநீரக நோயிலிருந்து பாதுகாக்கும் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக மக்களின் பாவனைக்காக வடிகட்டிய குடிதண்ணீரை வழங்குவதற்காக இந்த இயந்திரத் தொகுதி வழங்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத் தொகுதியில் நாளொன்றுக்கு ஆயிரம் லீற்றர் வடிகட்டிய நீரைப் பெற்றுக் கொள்ள முடியும். கள்ளிக்குளம் கிராமத்தில் மீள்குடியேறிய மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கடந்த மாதம் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நடத்திய மக்கள் சந்திப்பில், குடிதண்ணீர்ப் பிரச்சினை கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-5)



# அனுமதிக்கு முரணாக மணல் ஏற்றியவர் முல்லையில் கைது

## உழவு இயந்திரமும் சிக்கியது

முல்லைத்தீவு, ஒக். 22

அனுமதிக்கு முரணாக மணல் ஏற்றிய குற்றச் சாட்டில் உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நப்ரும் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இந்தச் சம்பவம் நடைபெற்றதாக முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முத்துஐயன்கட்டு குளப் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் ஆற்றுக்குள் உழவு இயந்திரத்தை இறக்கி மணல் ஏற்றிய குற்றச்சாட்டிலேயே சந்தேக நபர் கைது செய்யப் பட்டார்.

முல்லைத்தீவு மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப்பிரிவுபொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய த்கவல் களை அடுத்து முல்லைத் தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழி நடத்தலின் கீழ் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுபொலிஸ்பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந் தன் தலைமையிலான அணியினரே இவரைக் கைது செய் தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும், உழவு இயந்திரத்தையும் மேலதிக விசாரணைக்காகவும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கையளித்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் மேலும் தெரிவித்தது.

(த-5-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், அவர்கள் அணிந்திருந்த தலைக்கவசங்கள் காணப்படுவதையும், மாணவர்களின் குருதிதோய்ந்த பகுதியையும் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் சேதமடைந்திருப்பதை முதல் மூன்று படங்களிலும் வைத்தியசாலையில் குவிந்திருந்த நூற்றுக் கணக்கான மாணவர்கள் மத்தியில் நீதி விசாரணைக்காக யாழ்ப்பாண நீதிவான் செல்வதையும் படத்தில் காணலாம். (வ-37)

## முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கான

# வாழ்வாதார உதவிகளுக்கு கொழும்பு முட்டுக்கட்டை

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 22

முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவித் திட்டம் வடக்கு மாகாண சபையால் கொள்கை ரீதியில் முடிவு எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை எமது அமைச்சின் ஊடாக முன்னெடுப்பதற்குக் கொழும்பு அரசின் கணக்காய்வுத் திணைக்களம் முட்டுக்கட்டை போட்டுவருகின்றது. தொடர்ந்தும் தடை ஏற்படுத்துவார்களாக இருந்தால், நான் அமைச்சுப் பதவியைத் துறக்கவும் தயாராக இருக்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டு வருகின்றது. கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் 2014ஆம் ஆண்டு பாதீட்டின்போது, முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்குவதற்கான கொள்கை ரீதியிலான முடிவு எடுக்கப்பட்டது. இதனடிப்படையில் கடந்த ஆண்டு வாழ்வாதார உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு அரசின் கணக்காய்வுத் திணைக்களம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள் தொடர்பில் தனது கணக்காய்வு விசாரணையை நடத்தியது.

அந்த கணக்காய்வு அறிக்கையில், வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகளானது கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் ஊடாக வழங்கப்படாது தனிப்பட்ட ரீதியில் உதவு தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ் அரசியல் கைதிகளின் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக கொழும்பு அரசின் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு காணப்படுகின்ற போதும், தனி யொரு திணைக்களமாகிய கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் 45 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருப்பது திணைக்களத்தின் நோக்கத்துக்கு முரணான கொடுப்பனவாகக் கணக்காய்வில் அவ தானிக்கப்பட்டிருப்பதாக, கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவித் துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதுதொடர்பில் தனது உரையில் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்ததாவது:

கொழும்பு அரசின் கணக்காய்வுத் திணைக்களத்தின் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் கணக்காய்வாளர்கள், முன்னாள் போராளிகளுக்கு வாழ்வா தார உதவிகளை வழங்குவதை நிறுத்துமாறு பல வழிகளில் அழுத்தங்களை ஏற்படுத்துகின்றனர். எமது அதிகாரிகளை நெருக்கடிகளுக்கு உள்ளாக்குகின்றனர். இவர்களுக்கான வாழ்வாதார உதவிகளைக் கொழும்பு அரசின் அமைச்சுகளே செய்ய வேண்டும். இதனைச் செய்ய வேண்டியது வடக்கு அரசு அல்ல என்று கணக்காய்வுத் திணைக்களம் வலியுறுத்தி வருகிறது. போர் முடிந்து ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இது வரை முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கு இவர்கள் என்ன செய்திருக்கின்றார்கள்? இனி எப்போது செய்ய போகின்றார்கள்?

வடக்கு மாகாணத்தில் எமது மக்களின் நலன் கருதி என்ன செய்ய வேண்டும் என்று கொள்கை ரீதியாக நாம் தீர்மானங்களை மேற் கொண்டு அதனை நடைமுறைப்படுத்தும் போது அந்தக் கொள்கையில் தலையீடு செய்யும் அதிகாரம் கணக்காய்வுத் திணைக்களத்துக்கு இல்லை - என்றார். (வ-த-5-35)

## இணக்க சபை கூட்டம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாண இணக்க சபை ஜே.246 தற்காலிகமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணிவரை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறும் என்று யாழ். இணக்க சபை ஜே.246 தவிசாளர் இ.திலகரட்ணம் தெரிவித்தார்.

இந்த இணக்க சபையானது இதுவரைகாலமும் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயங்கி வந்தது. இந்தக் கல்லூரியில் கணக்காளர் பரீட்சை நடைபெறவுள்ள காரணத்தினால் தற்போது இடம் மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து அடுத்து வரும் இணக்க சபையானது வழமையான இடத்திலேயே நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-ரி)

## ஆலோசனை கூட்டம்

கொழும்புத்துறை ஒக்.22

யாழ். நீரிழிவு அஷோசியேசன் அமைப்பின் ஏற்பாட்டில் பண்ணாட்டு நீரிழிவு தினம் தொடர்பான நிகழ்ச்சி ஆலோசனைக் கூட்டம் இன்று மு.ப.10 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை முதியோர் சுக வாழ்வுக் கழக யாழ்.சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், சர்வோதயம், வடபிராந்திய மூத்தோர் அவை, வடக்கு மாகாண ஓய்வூதியர் சங்கங்கள் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 14ஆம் திகதி முன்னெடுக்கப்படும் பண்ணாட்டு நீரிழிவுத் தினத்தையொட்டிய விழா ஆலோசனைகளும் மலர் வெளியீடு, கௌரவிப்புக்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-135)

## வீதியில் அவதியுற்ற வயோதிபர் கைதடி அரச இல்லத்தில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

தண்ணீர் ஊற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட வயோதிபர் யாழ்ப்பாண பிரதேச செயலரின் நடவடிக்கையால் நேற்று கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்ப்பிக்கப்பட்டார்.

யாழ். கே.கே.எஸ். வீதியில் உள்ள உணவகம் முன்பாக யாசகர் ஒருவரை உணவகத்தில் வேலை செய்யும் நபர் ஒருவர் நீர் ஊற்றி துரத்தும் காணொளி காட்சி இணையத்தளங்களில் வெளியாகியிருந்தன. அவரை கடையின் முன்பாக இருந்து அப்புறப்படுத்தவே நீர் ஊற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த காட்சி காணொளியாகப் பதியப்பட்டு இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இந்தச் செயல் தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டனர். நேற்று ஊடகங்களிலும் இந்தச் சம்பவம் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டது. இதனை அடுத்து யாசகர்



ஒருவர் மீதான மனிதாபிமானமற்ற செயல் தொடர்பில் பெண் சட்டத்தரணிகளான சாருயா மயூரன், அம்பிகா துமிசன் ஆகியோர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் யாசகரை அப்புறப்படுத்திய ஊழியருக்கெதிராக முறைப்பாடு செய்தனர். இந்த முறைப்பாட்டை அடுத்து குறித்த வயோதிபர் பொதுமக்களுக்கு பெரும் இடையூறு செய்து வருவதாக பொலிஸ் தரப்பினர் குற்றம் சுமத்தி இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் இந்த விடயம் தொடர்பாக கவனமெடுத்த யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினர் குறித்த யாசகரை கைதடி முதியோர் இல்லத்தில் சேர்ப்பித்தனர். கிராம சேவையாளர், மற்றும் மனித உரிமை ஆர்வலருமான திருமதி றசிகலா ஆகியோர் இந்த விடயத்தில் பெரும் பங்காற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-21)



## குருகுல பிதா அப்புஜியின் உருவச்சிலை நேற்றுத் திறப்பு

கிளிநொச்சி, ஒக்.22

குருகுலபிதா அப்புஜியின் 100ஆவது பிறந்த தின நிகழ்வும், உருவச்சிலை திறப்பு விழாவும் நேற்று கிளி நொச்சியில் இடம் பெற்றன.

கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் அப்புஜியின் உருவச்சிலை திறந்துவைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கிளிநொச்சி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது 'நினைவழியாப் பெருமனிதன்' என்னும் நூல் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் தவத்திரு மகாதேவ சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் சிவபூமி தலைவர் ஆறு. திருமுகன், மாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, தவநாதன், பாடசாலை களின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியியலாளர்கள் பெரியோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (வ-21,ரி3,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்ற ஒலிவாங்கிகள் செயலிழப்பு

கொழும்பு, ஒக் 22

2017ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம், நேற்று முன்தினம் வியாழக் கிழமை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டபோது, நாடாளுமன்றத்தின் ஒலிக் கட்டுப்பாட்டமைப்பும் ஒலி வாங்கிக் கட்டமைப்பும் உரிய முறையில் சேவையாற்றவில்லை. மேற்படிக் கட்டமைப்புகளின் பழுதுபார்க்கும் பணிகள், முழுமையாக முடிவடையாமை காரணமாகவே, இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரால், கருத்துத் தெரிவிக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

இவ்வாரத்தில், நாடாளுமன்றப் பணிகள் நிறுத்தப்பட்டே, மேற்படி கட்டமைப்புகளின் பழுதுபார்க்கும் பணிகள் முன்னெடுக்கப் பட்டு வந்தன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சபாநாயகர் கரு ஜயசூரிய, மேற்படி நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவை, நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கவே சமர்ப்பிப்பதால், அவருடைய ஒலிவாங்கி மாத்திரம் செயற்படும் என்றார்.

கடந்த வாரத்தில், கை விரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் கட்டமைப்பு பழுது பார்க்கப்பட்டதாகவும் ஒலி வாங்கி மற்றும் ஒலிக் கட்டுப்பாட்டமைப்பு ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பணிகள், தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறிய சபாநாயகர், ஒலிவாங்கிகள் அனைத்தும் கழற்றப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். (தி)

# வறுமையாலும் கசிப்பினாலும் முல்லைத்தீவில் குடும்ப வன்முறை

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 22

வறுமையும் அதிகரித்த கசிப்புமே முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்படும் குடும்ப வன்முறைக்கு பிரதான காரணமாகக் காணப்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஆண் பெண் பால் நிலை சமத்துவத்துக்கிடையில் ஏற்படும் வன்முறைகளைத் தடுத்தல் அல்லது தீர்வு காணும் முகமாக அதற்கு பொருத்தமான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக்காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் அசோக அளவத்தை தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாகும் பெண்கள் தொடர்பான குமுத்திட்டங்களை மாவட்டத்தில் நடத்தியிருக்கின்றோம். சமூக வன்செயல்களில் பெண்கள் பாதிக்கப்படுவது, சிறுவர்கள் பாதிக்கப்படுவதை நாங்கள் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக பல்வேறு காரண காரியங்களும் அதில் கூறப்பட்டிருக்கிறன. வறுமையினாலும் பெண்கள் வன்முறைக்கு உள்ளாகின்றனர். இன்னொரு புறம் சட்ட விரோதமாகக் காய்ச்சப்படும் கசிப்பினாலும் குடும்ப வன்முறைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தோற்றுவிக்கப்படுவதாக நாங்கள் அறிந்திருக்கிறோம்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸ் திணைக்களத்தினர் செயற்பட்டாலும் முழுமையாகக் கட்டுப்படுத்துவது முடியாத காரியமாக உள்ளது. சமூகத்தில் தொடர்ந்து பாதிப்பாகவே உள்ளது. இந்த பாதிப்புக்களில் இருந்து பெண்களை எவ்வாறு பாதுகாக்கப் போகிறோம் என்பது உண்மையில் கலந்துரையாடப்பட வேண்டியதுடன் அதற்குரிய முறைமைகளை உருவாக்க வேண்டியதும் எங்களுடைய பொறுப்பாக உள்ளது என்றார். (த-5-ரி7)

# கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக தேங்காய் உடைத்து போராட்டம்



கொழும்பு, ஒக் 22

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மலையகத்தில் தேங்காய் உடைத்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவை எல்பட கீழ்ப்பிரிவு தோட்ட மக்களினால் நேற்றுமுன்தினம் காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தொழிற்சங்கக் கொடிக் கம்பங்களில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# உதயங்க வீரதுங்கவுக்கு பன்னாட்டுப் பிடியாணை

கொழும்பு, ஒக். 22

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவரும், மகிந்த ராஜபக்சவின் உறவினருமான உதயங்க வீரதுங்கவைப் பன்னாட்டுப் பொலிஸ் (இன்ரபோல்) ஊடாகக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று முன் தினம் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவைப் பிறப்பிக்குமாறு முன்னர் இரண்டு தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் நீதிவான் மறுத்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுப் பொலிஸாருக்கு இது தொடர்பான சிவப்பு ஆணையைவிடுத்து உதயங்க வீரதுங்கவைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு விட்டுள்ளது.

உதயங்க வீரதுங்கவைப் பன்னாட்டுப் பொலிஸ் ஊடாகக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்குமாறு குற்றவியல் விசாரணைப் பிரிவு நீதிவானிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2005-2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மிக் ரக விமானக் கொள்வனவின்போது இடம்பெற்ற மோசடி குறித்து விசாரணை மேற்கொள்வதற்குக் கைது செய்ய வேண்டிய தேவையிருப்பதாக நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 2006ஆம் ஆண்டுமுதல் 2015 ஆம் ஆண்டு வரை உதயங்க வீரதுங்க ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (த-5)

**வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை**

**இறைச்சிக்கடை, மீன்கடை, பொதுச்சந்தை நடத்துவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2017**

01.01.2017 தொடக்கம் 31.12.2017 வரையிலான காலப்பகுதிகளுக்கு கீழ்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் வழங்கப்படும். கேள்விப் படிவங்களின் ஒரு பிரதி அரக்குமுத்திரை இடப்பட்டு செயலாளர், பிரதேசசபை, வெங்கலச்செட்டிகுளம் என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் பிரதேசசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிலோ **2016ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 08 ஆம் திகதி** மு.ப **10.00 மணிக்கு** முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

இரண்டாவது பிரதியினை **பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், பூங்காவீதி, வவுனியா** என்ற விலாசத்துக்குக் குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**கேள்விப் படிவங்கள் யாவும் 08.11.2016 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.**

**கேள்விப்பத்திரத்தை 24.10.2016–07.11.2016 ஆம் திகதிவரை** வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை அலுவலகத்தில் **காலை 9.00 மணிதொடக்கம் பி.பகல் 3.00 மணிவரை** பெற்றுக்கொள்ளலாம். கேள்வி திறத்தலின் போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் கேள்விச்சபை கூட்டத்தில் பார்வையாளராகக் கலந்துகொள்ளமுடியும்.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி தொடர்ச்சியாக 05வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராமசேவையாளரின் சான்றிதழுடன் கேள்விப்படிவம் பெறப்படவேண்டும்.
2. ஏற்கனவே குத்தகை கேள்விகோரலில் பிரதேசசபை கறுப்புப்பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
3. சித்தியெய்தும் கேள்விதாரர் **08.11.2016** இல் இருந்து **07** (ஏழு) நாள்களுக்குள் **1/3** வைப்புத் தொகையைச் செலுத்தத்தவறின் குத்தகைகேள்வி இரத்துச்செய்வதுடன் கேள்விவைப்பு மீளளிக்கப்படமாட்டாது
4. கச்சேரி அல்லது பிரதேசசபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கமைவாக மாட்டிறைச்சி, மீன் என்பன விற்பனை செய்யப்படல் வேண்டும்.
5. கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.

| இல | கடைவிவரம் | வருடாந்த குத்தகை | மீளளிக்கப்படும் வைப்பு | கேள்விப் படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | மாட்டிறைச்சிக் கடை மாங்குளம் | 1,212,000.00 | 8,000.00 | 1000.00 |
| 2 | மாட்டிறைச்சிக் கடை செட்டிகுளம் | 351,000.00 | 8,000.00 | 1000.00 |
| 3 | மீன் கடை சூடுவெந்தபுலவு | 19,325.00 | 8,000.00 | 1000.00 |
| 4 | மீன் கடை செட்டிகுளம் | 113,000.00 | 8,000.00 | 1000.00 |
| 5 | ஆட்டோதரிப்பிடம் (செட்டிகுளம்,மாங்குளம்,வீரபுரம்,துண்டியாபுளியங்குளம், சூடுவெந்தபுலவு) | 38,302.00 | 5,000.00 | 1000.00 |
| 6 | கணேசபுரம் கடை இல 01 | 7,200.00 | 5,000.00 | 1000.00 |
| 7 | கணேசபுரம் கடை இல 02 | 7,200.00 | 5,000.00 | 1000.00 |
| 8 | குருக்கல்புதுக்குளம் கடை இல 01 | 9,000.00 | 5,000.00 | 1000.00 |
| 9 | குருக்கல்புதுக்குளம் கடை இல 02 | 9,000.00 | 5,000.00 | 1000.00 |

பிரதேசசபை, வெங்கலச்செட்டி குளம்.
22.10.2016

சுப்பிரமணியம் விஜயதாஸ்,
செயலாளர், பிரதேசசபை, வெங்கலச்செட்டி குளம்.

# பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்.ஒக்.22

பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி நிறுவனத்தினரால் கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியப் போட்டிகள் பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கிடையில் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கட்டுரைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியலை மையப்படுத்தியதாகவும், அவர்களது சமூக பொருளாதார அரசியல் சார்ந்த பங்குபற்றல் நிலையை அலசுவதாகவும் அமையவேண்டும்.

பாடசாலை மாணவர்களெனில் 250 தொடக்கம் 300 சொற்கள் கொண்டதாகவும் பொதுமக்களெனின் 300 தொடக்கம் 350 சொற்கள் கொண்டதாகவும் கட்டுரை அமைதல் வேண்டும்.

கவிதை, சிறுகதை, ஓவியப் போட்டிகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியல் கோலங்களைச் சித்திரிப்பனவாக அமைய வேண்டும்.

கவிதைகளைப் பாடசாலை மாணவர்கள் 15 தொடக்கம் 20 வரிகளைக் கொண்டதாகவும், பொதுமக்கள் 25 தொடக்கம் 30 வரிகளைக் கொண்டதாகவும் எழுதவேண்டும். ஓவியங்கள் ஏ-4 தாளில் வரையப்படவேண்டும்.

ஆக்கங்கள் சொந்தப் படைப்புக்களாக இருத்தல் அவசியம். ஏற்கனவே பிரசுரமான அல்லது வெளியான ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒவ்வொரு போட்டியிலும் 3 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். தரமான ஆக்கங்கள் வலு சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு மாதம் திகதி என்பவற்றைத் தெளிவாக எழுதி உங்கள் ஆக்கங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வின்போது வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி கருவி, மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம், 1166/15 அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திய அமைதிப் படையினர் நடத்திய கொலைவெறித் தாக்குதல்:

# மன்னிக்க முடியாத பாவச் செயல்

## வைத்தியசாலை ஊழியர்கள் படுகொலை குறித்து யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர்



யாழ்ப்பாணம், ஒக். 22
மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடாது என்பது பன்னாட்டுச் சட்டம். ஆனால் அதனையும் மீறி எமது வைத்தியசாலையில் ஊழியர்கள் 21 பேர் 29 ஆண்டுகளுக்கு முன்னர் கொல்லப்பட்டனர். இது மன்னிக்க முடியாத பாவச் செயல்.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் செ.சிறி பவானந்தராஜா தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை என்று வந்த இந்திய இராணுவத்தினரால், யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் உள்ளிட்ட 21 பேர் ஈவு இரக்கமின்றி வைத்தியசாலை வளாகத்தினுள் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இதன் 29ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற துன்பகரமான நிகழ்வு. அன்றைய தினம் கடமையின் நிமித்தம் சிரமத்தின் மத்தியில் தமது வீடுகளில் இருந்து வைத்தியசாலைக்குப் பணியாற்ற வந்தவர்கள் திரும்பத் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலமை ஏற்பட்டது. இன்றும் கடமைக்கு வந்த எம்மை காணவில்லை என்றால் எமது குடும்பத்தினர் பதறிப் போய்விடுகின்றார்கள். அதே துன்பத்தினை அவர்களும் அன்றைய தினம் அனுபவித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

21 உத்தியோகத்தர்களும் வைத்தியசாலையில் கொல்லப்பட்டது மன்னிக்க முடியாத பாவச் செயல். பன்னாட்டு நியமங்களின் படியும், போர்ச் சட்டங்களின் படியும், வைத்தியசாலைகள், நோயாளிகள் காவு வண்டிகள் மீது தாக்குதல்கள் நடத்தக் கூடாதென்பது சட்டம். அதையும் மீறி எமது வைத்தியசாலையில் நடை பெற்ற இந்தக் கொடூர சம்பவம் ஊழியர்களைப் பாதித்திருப்பது அவர்களின் அஞ்சலி நிகழ்வில் இருந்து புலப்படுகின்றது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் எந்தவொரு வைத்தியசாலையிலும் நிகழக் கூடாது. கடமையுணர்வுடன் தமது உயிர்களை நீத்த இந்த ஊழியர்களின் பாதையில் எமது கடமைகளை உணர்வுடன் செய்ய வேண்டும் – என்றார்.

கொல்லப்பட்ட 21 உத்தியோகத்தர்களின் 29ஆவது நினைவுதின ஆரம்பத்தின் போது, யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் செ.சிறிபவானந்தராஜா ஈகச் சுடரேற்றினார். உயிரிழந்த உத்தியோகத்தர்களின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

கடமையின்போது சுட்டுக்கொல்லப்பட்டு, உயிரிழந்த மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள், உத்தியோகத்தர்களின் உறவினர்கள், சுடரேற்றியும், மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் தமது அஞ்சலிகளைச் செலுத்தினார்கள். (த-5-106)




## திஸ்ஸவை பார்ப்பதற்கு சிறை சென்றார் மகிந்த

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர், திஸ்ஸ அத்தநாயக்கவை சந்திப்பதற்காக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, வெலிக்கடைச் சிறைச் சாலைக்கு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை சென்றார்.

திஸ்ஸ அத்தநாயக்கவைப் பார்த்து நலம் விசாரித்த மகிந்த, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், எந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்று தெரியாததால் போர்க் காலத்தில் மக்கள் சரியாக உறங்கவில்லை. எந்த நேரத்தில் எப்.சி.ஐ.டி, சி.ஐ. டியினர் வீட்டுக்குள் நுழைவார்கள் என்று தெரியாததால் இப்போதும் மக்கள் சரியாக உறங்குவதில்லை. இந்த அரசின் ஒரே வேலை பழிவாங்குவது மட்டுமே- என்றார். (த)

## விவசாயிகள் மீது தனிநபர் காட்டிய பாசத்தால் நெகிழ்ச்சி

### உரக் கொள்வனவுக்கு உதவினார்

தென்மராட்சி, ஒக்.22
தென்மராட்சி தெற்கு நெற் செய்கையாளர்களுக்கு மறவன் புலவைச் சேர்ந்த ஒருவர் தேவையான அளவு உர வகைகளைக் கொள்வனவு செய்து வழங்கி வருகின்றார்.

கொழும்பு விலைக்கே உர வகைகள் விற்பனை செய்யப்படுவதால் நெற் செய்கையாளர்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை காலபோக நெற் செய்கை மேற்கொள்வோருக்கு முன்னைய காலம் போல மானிய உர வகைகள் வழங்கப்படவில்லை எனவும், மானிய உர வகைகளுக்குப் பதிலாக அவற்றுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நெற் செய்கையாளர்கள் உர வகைகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, காலபோக நெற் செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்படும் தென்மராட்சி தெற்குப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கடந்த இரு தினங்களில் சுமாரான மழை பெய்த போதிலும் தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் தூறல்மழையே பெய்துள்ளது.

இதனால் ஏற்கனவே நெற் செய்கைக்கான ஆயத்த வேலைகள் மேற்கொண்டவர்கள் புழுதி விதைப்பு மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 24,000 பனைகள் சட்ட ரீதியாக யாழில் தறிப்பு

## இதனை மீள்நிரப்புவதற்கு மரங்களை நடவேண்டும் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்ப்பாணத்தில் இதுவரை சட்ட ரீதியாக 24 ஆயிரம் பனை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, இந்த மாவட்டத்தில் 3 ஆயிரத்து 500 வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் போதும் பனை மரங்கள் சட்ட ரீதியாகத் தறிக்கப்படவேண்டிய நிலமை ஏற்படலாம். எனவே கிடைக்கின்ற அரச நிலங்களிலும், ஏனைய நிலங்களிலும் மரங்களை நடுகைசெய்யவேண்டும். இதற்கு அனைவரும் அணி திரளவேண்டும்.
இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறைகூவல் விடுத்துள்ளார்.
அரசின் தேசிய மரநடுகைத் திட்டத்தில், சுழிபுரம் மேற்கு புளியந்துறை பிரதேசத்தில் பயன்தரு மரங்கள் பிரதேச செயலர் தலைமையில் நடுகை செய்யப்பபட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
நடுகை செய்யப்பட்ட மரங்களையும் பாதுகாக்க வேண்டும். இதற்காக உள்ளூராட்சிச் சபைகளின் ஒத்துழைப்பும் பெறப்படவேண்டும்.
இனம் காணப்படுகின்ற அரச நிலங்களிலும் அரச நிறுவனங்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்கள் ஒவ்வொரு தினங்களிலும் பிறந்த நாள் நிகழ்வுகளிலும் ஏனைய பொருத்தமான காலங்களிலும் மரங்களை நட்டுப் பசுமையை ஏற்படுத்தவேண்டும் - என்றார்.
இந்த நிகழ்வில் கிராம அதிகாரிகள், சமுர்த்தி அதிகாரிகள் பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகள், பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிரதேச செயலக அதிகாரிகள் என்று பலரும் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட வேள்ட் விசன் நிறுவன திட்ட முகாமையாளர் ஏ.ஜெ.அனுராஜ், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (வேள்ட்விசன்) வி.ஆதித்தன் ஆகியோர் பயன்தரு மரங்களையும் அதற்கான ஐம்பது கூடுகளையும் வழங்கினர். (த-5-50)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் அடையாளப் பணிப்புறக்கணிப்பு

## ஊழியர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து



சாவகச்சேரி, ஒக். 22
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைப் பணியாளர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து நேற்று ஒரு மணி நேர அடையாளப் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் வைத்தியசாலை, வைத்திய அதிகாரிகள், தாதிய அலுவலர்கள், நிர்வாகப் பிரிவினர், தொழில்நுட்பப் பிரிவினர், மருந்தாளர்கள் உட்பட அனைவரும் ஈடுபட்டனர்.
நேற்று முன்தினம் மாலை கடமை முடிந்து வீடு திரும்ப முற்பட்ட பெண் பரிசாரகரின் மோட்டார் சைக்கிள் பழுதடைந்ததால், வாசலில் நின்ற பாதுகாப்பு அலுவலருடன் மோட்டார் சைக்கிளை அருகில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.
வைத்தியசாலைக்கு வெளியே நின்ற நால்வர் பாதுகாப்பு அலுவலரையும் பெண் பணியாளரையும் தாக்கியதாகச் சம்பவத்தை நேரில் பார்வையிட்டவர்கள் தெரிவித்தனர். தாக்குதலில் பாதுகாப்பு அலுவலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
தாக்குதல் சம்பவத்தை அறிந்து தடுக்க வந்த வைத்தியசாலை மேற்பார்வையாளரையும் அங்கு வந்த வைத்தியசாலைப் பொலிஸ் அலுவலரையும் அங்கு நின்றிருந்த குழுவினர் தாக்கியதாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந் துள்ளது.
சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, பொலிஸாருக்கு அறிவித்தார். பொலிஸார் அங்கு வந்தபோது தாக்குதல் நடத்திய மூவர் தப்பியோடியுள்ளனர். ஒருவரைப் பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.
இந்த நிலையில் நேற்றுக் காலை வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகள் நடைபெற்ற பின்னர் வைத்தியசாலை உள்நுழையும் கதவுகளை மூடிப் பணியாளர்கள் அனைவரும் ஒரு மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
"வைத்தியசாலைக்குள் மதுப்பிரியர்களை அனுமதிக்கக் கூடாது", "வைத்தியசாலை ஊழியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. உடனடியாக வைத்தியசாலை முன்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும்", "வைத்தியசாலை ஊழியர்கள் தாக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்னும் பதாகைகளுடன் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்திருந்த நோயாளர்கள் ஒரு மணி நேரமாக வெளியில் காத்திருந்து பணிப் புறக்கணிப்பின் பின்னர் சிகிச்சை பெற்றுச் சென்றனர். (த-5-9)

## கூட்டுறவுப் பணியாளருக்கு தீபாவளிக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.22
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய வருடாந்த போனஸ் மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவுகளைச் சில சங்கங்கள் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளன எனத் தெரியவருகின்றது.
சங்கங்களின் இயக்குநர் சபைகள் இதற்காகக் கூடி இந்தக் கொடுப்பனவை வழங்கவும் தீர்மானித்துள்ளன.
சங்கங்களின் வருடாந்த கணக்கறிக்கை முடிவின்படி சங்கங்கள் இலாபத்தில் செயற்பட்டால் அதற்கான போனஸ் கெடுப்பனவை வழங்க முடியும். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். இந்த கொடுப்பனவுகளை வழங்குவதற்குச் சங்கங்கள் சில முன்வந்துள்ளன.
அதனை விட வருடாந்த விடுமுறை நாள் கொடுப்பனவை வழங்குவதற்கும் சங்கங்கள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் ஒருவர் தெரிவித்தார்.
அத்துடன் தீபாவளிப் பண்டிகைக்கு முன்பாகச் சங்கப் பணியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கும் சில சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.
இலாபத்தில் செயற்படும் சங்கங்கள் பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவையும் தீபாவளிக்கு முன்பாக வழங்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
(த-17)

# புன்னைநீராவியில் வீடுகள் இல்லாமல் 780 குடும்பங்கள்

## பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாவதாக மக்கள் கவலை

யாழ்ப்பாணம், ஒக். 22
கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 800 குடும்பங்கள் வாழும் புன்னைநீராவிக் கிராமத்தில் 780 குடும்பங்கள் இன்றுவரை வீட்டு வசதியே இன்றி உள்ளன. இதனால் தாம் கடும் நெருக்கடிக்கு உள்ளாவதாக அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் உள்ள புன்னை நீராவிக் கிராமம் பெரிய கிராமாகும்.
கே.என்/ 58 கிராமசேவகர் பிரிவைக் கொண்ட இந்தக் கிராமத்தில் மொத்தமாக ஆயிரத்து 813 குடும்பங்கள் வாழ்கின்றன. இவ்வாறு வாழும் குடும்பங்களில் 711 பேருக்கு மட்டுமே நிரந்தர வீட்டு வசதிகள் உள்ளன.
இங்கு 1800 குடும்பங்களில் 391 குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளதோடு இவர்களில் 65 பேர் குடும்பத் தலைவர்களைப் பிரிந்து வாழும் நிலையில் உள்ளனர்.
மிகவும் வறுமையான இந்தக் கிராமத்தில் பெண்களே முக்கிய உழைப்பாளர்களாகவும் உள்ளனர். இந்தக் கிராமத்தின் முக்கிய தொழில்களாக இரு தொழில்கள் உள்ளன. அதில் பெண்கள் ஆடைத் தொழிற்சாலைக்குச் செல்லும் அதே நேரம், அதிகமான ஆண்கள் சிவில் பாதுகாப்புப் பிரிவின் பண்ணைகளுக்குப் பணிக்குச் செல்கின்றனர்.
அத்துடன் இந்தக் கிராமத்துக்கான வீதிகள் இன்று வரை செப்பனிடப்படவேயில்லை.
மீள்குடியேறிய காலம் முதல் தமது அவலம் தொடர்கதையாகவே உள்ளதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.
(த-101)

# சிறுமி சித்திரவதை; தாய்க்குப் பிணை

யாழ்ப்பாணம், ஒக். 22
நீர்வேலிப் பகுதியில் 6 வயதுச் சிறுமியை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த தாயாரை நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுவித்தது.
கடந்த மாதம் இணையத்தளங்களிலும், சமூகவலைத் தளங்களிலும் 6 வயதுச் சிறுமியைத் தாயார் ஒருவர் தாக்கும் காணொலி வெளியாகியிருந்தது. அதன் அடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரினால், சிறுமியின் தாயாருக்கு எதிராகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.
முறைப்பாட்டின் அடிப்படையில் தாயாரான புவனேஸ்வரி ராஜா கைது செய்யப்பட்டிருந்தார். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். தாக்குதலுக்கு உள்ளான சிறுமி உள்ளிட்ட அவரது சகோதரர்கள் மூவர் சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர்.
வழக்கு நீதிமன்றில் நேற்று மீளவும் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தயாருக்குப் பிணை வழங்கப்பட்டது. (த-5-101)

# மேலும் 600 வீடுகள் யாழ். மாவட்டத்துக்கு

## மீள்குடியேற்ற அமைச்சு வழங்குகிறது

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மாவட்டத்துக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட வீடுகளுக்கு மேலதிகமாக 600 வீடுகள், மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. இதற்குரிய பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு, வீடுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
மீள்குடியேற்ற அமைச்சினால் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகள், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்துக்கு 3 ஆயிரத்து 150 வீடுகள் வழங்கப்பட் டிருந்தன. வழங்கப்பட்ட வீடுகளில் 90 சதவீதம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.
மீள்குடியேற்ற அமைச்சு, யாழ். மாவட்டத்துக்கு மேலதிக வீடுகள் வழங்குவதற்கு ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்தது. அதற்கு அமைவாக, 600 வீடுகள் இந்தமாத ஆரம்பத்தில் மாவட்டச்செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
வீடு தேவையாக உள்ளவர்களின் விவரங்கள் யாழ். மாவட்டச் செயலகத்தினால் ஏற்கனவே திரட்டப்பட்டிருந்தன. அந்தப் பட்டியலின் அடிப்படையில் முன்னிலையில் உள்ளவர்களுக்கு வீடுகள், இந்த வீட்டுத் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டத்தின் முதல் கட்டக் கொடுப்பனவும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நடப்பு ஆண்டின் இறுதிக்குள்ளேயே வீட்டுத் திட்டப் பணிகள் முடிவுறுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், மழையினால் பாதிப்பு ஏற்பட்டால் அடுத்த ஆண்டு முதல் மாதத்துக்குள் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்புக்கு மீண்டும் ஓர் எச்சரிக்கை

இலங்கைக்கு 10 நாள்கள் பயணமாக வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறுபான்மையினரின் சிக்கல்கள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா இசாக், காலப் பொருத்தமான அறிவுரைகளை இந்த அரசுக்கு வழங்கியிருக்கிறார்.

குறிப்பாகத் தமிழ்ச் சிறுபான்மையினரின் உள்ளக் கிடக்கையை அவர் அரசுக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அவை அரசின் ஆழ்ந்த கரிசனைக்கும், பரிசீலனைக்கும், உடனடி நடைமுறைப்படுத்தலுக்கும் உரியவை.

போர் முடிந்ததில் இருந்து தமிழ்ச் சமூகம் தொடர்ந்து வலயுறுத்தி வரும் பல விடயங்களையே ரீட்டாவும் அழுத்தம் திருத்தமாக கொழும்புக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார். அரசியல் தீர்வு என்கிற சாட்டுப் போக்கை விட்டுவிட்டு இந்த விடயங்கள் உடனடியாகக் கவனிக்கப்பட்டு தீர்வு காணப்படவேண்டியவை என்றும் அவர் வலியுறுத்தியிருப்பதைக் கொழும்பு ஆழமாகக் கவனத்தில் எடுக்கவேண்டும். அதுவும் நல்லிணக்கத்துக்கான சவால்கள் என்றே ரீட்டா இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுகிறார் என்பதையும் கொழும்பு கவனத்தில்கொள்ள வேண்டும்.

இராணுவக் குறைப்பு, கைதிகள் விடுவிப்பு, நில மீளளிப்பு ஆகியவையே வடக்கு - கிழக்கில் சிறுபான்மை மக்கள் அடிக்கடியும், முக்கியமாகவும் எழுப்பிய பிரச்சனைகள் என்றும், இவையே நல்லிணக்கத்துக்கான சவால்கள் என்றும் ரீட்டா தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். முழுவதுமாகச் சிங்களவர்களைக் கொண்டது என்று சொல்லக்கூடிய இராணுவத்தின் அளவுக்கு மீறிய இருப்புக் காரணமாக, வடக்கு - கிழக்கில் அது ஆக்கிரமிப்புப் படையாகவே நோக்கப்படுகிறது என்பதையும், அதிகரித்த இராணுவ இருப்பு, தமிழர்களை ஆயுததாரிகள் என்று தொடர்ந்து இழிவுபடுத்துகின்றது என நம்பப்படுகிறது என்பதையும் ரீட்டா தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன - தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசு பதவிக்கு வந்தவேளையிலும், தமிழர்கள் இவற்றையே முக்கிய பிரச்சினைகளாக முன்வைத்தார்கள். அவற்றுக்கு தீர்வு தரப்படும் என்று வாக்குறுதியளித்தே இந்தத் தலைவர்கள் பதவிக்கும் வந்தார்கள். ஆனால், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்குச் சவால்விடும் இந்த விடயங்களின் மீது இந்த அரசும் அதிக அக்கறை எடுத்து அவற்றுக்குத் தீர்வு காணவில்லை என்பதையே ரீட்டாவின் அறிக்கை தெளிவாக்கியுள்ளது.

இந்த அறிக்கை ஒன்றும் கூட்டமைப்பாலோ அல்லது வேறு தமிழ் அரசியல் அணிகளாலோ முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல; வெறும் அரசியல் கூச்சல் என்று கொழும்பு புறமொதுக்கிவிட்டுப் போவதற்கு. பக்கச்சார்பற்ற ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரால் - இதற்கென நிபுணத்துவம் பெற்ற ஒருவரால் - நேரடிக் கள ஆய்வின் பின்னர் எடுத்துச் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் இவை. அவற்றுக்கு கொழும்பு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது மிக அவசியம்.

2015 தேர்தல்கள் மூலம் பெற்ற உத்வேகத்தை கொழும்பு அரசு இழந்துவிடக்கூடாது என்பதுடன், காத்திரமான நடவடிக்கைகளின் ஊடாக சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவும் வேண்டும் என்றும் ரீட்டா தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். நீண்ட அழிவுப் போருக்குப் பின்னர் விரிந்து பரந்த, நன்கு திட்டமிட்ட - நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட உண்மை, நல்லிணக்கம், குணப்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறை முன்னெடுக்கப்பட வேண்டும்; ஆனால் அது ஒரே இரவில் செய்து முடிக்கப்படக்கூடியதும் இல்லை என்று அவர் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரே இரவில் செய்ய முடியாதது என்ற யதார்த்தத்தை அவர் ஏற்றுக்கொண்டாலும், இந்த ஒன்றரை வருட இரவுகளில் அதற்கான காத்திரமான பங்களிப்பு அரசிடம் இருந்து வெளிப்படவில்லை என்பதை - அல்லது இதுவரை செய்தவைகள் போதாது என்பதையே அவரது அறிக்கை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டுகின்றது. தனது அவதானங்கள் ஆய்வுகளின் அடிப்படையில் அரசு செய்ய வேண்டிய பரிந்துரைகளையும் அவர் முன்வைத்திருக்கிறார்.

ரீட்டாவின் அவதானங்களையும், ஆய்வுகளையும் தமிழ்ச் சமூகமும் முற்று முழுதாக ஆதரிக்கின்றது. நல்லிணக்கத்திற்கும், தீர்வுக்கும் முன்பாகக் கொழும்பு அரசு செய்யவேண்டியவற்றை, செய்யக்கூடியவற்றைச் செய்ய வேண்டும் என்றே தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. ஆனாலும் கொழும்பின் பாராமுகம் அதன் மீது தொடர்கிறது. இது கண்டிக்கத்தக்கது. விரும்பத்தகாதது.

ரீட்டாவின் அறிக்கை கொழும்பு அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள மற்றொரு எச்சரிகையே. இதன் பின்னராவது சிறுபான்மை மக்களின் விடயத்தில் கொழும்பு காத்திரமான நகர்வுகளைக் காட்ட வேண்டும். இல்லையேல் நிரந்தரத் தீர்வும் நல்லிணக்கமும் கானல் நீராகவே போய்விடும்.

# எழுந்த பின்?

## எழுக தமிழ் மீதான மறுபார்வை 1

இலைஜா ஹூல்

கடந்த வருடப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் வெளியில் தமிழருக்கு முன்னால் தெளிவான இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒருபுறம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மறுபுறத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் அரசியல் எதிர்காலம் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணான கொள்கை நிலைப்பாடுகளை முன்வைத்துத் தேர்தலைச் சந்தித் தன. இரு கட்சிகளும் முன் வைத்த இலக்குகளிலும், இலக்குகளை அடைவதற்காக அவை தெரிந்தெடுத்த பாதைகளிலும் வேறுபாடுகள் இருந்தன.

பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்



கள் வழங்கிய மகத்தான ஆணை, பலரது அரசியல் எதிர் காலங்களுக்குச் சாவு மணி அடித்தது. குறிப்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கூட்டமைப்பினுள் இருந்த வண்ணமே கட்சியின் அரசியல் பயணத்தில் குழப்பம் உண்டாக்கிக் கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தேர்தல் காலத்தில் மிகத் தெளிவாகவே தமிழ்த் தேசியமக்கள்முன்னணியினரை ஆதரித்து அவர்களுக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் வாக்கு வேட்டை நடத்திய வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்போர் இதில் முதன்மையானோர்.

கடந்த ஆண்டின் முடிவில், இவர்கள் வேறும் சில தனி நபர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு, தமிழ் மக்கள் பேரவையை ஆரம்பித்தனர். பேரவை, தன்னைக் கட்சி அரசியலுக்கப்பால் தமிழரை ஒருங்கிணைக்கும் தளமாக அறிவித்துக் கொண்ட போதிலும், பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தையும் அரசியல் நிரலையும் தொடர்ச்சியாக எதிர்த்து வந்த, வாழ்-நாள் அரசியல்வாதிகளுக்கு முன்னுரிமை கொடுத்தது. அதுவே அதன் உள் நோக்கங்களைப் பல மட்டங்களில் கேள்விக்குள்ளாக்கியிருந்தது.

இன்று தமிழ் மக்கள் பேரவை 'எழுக தமிழ்' என்றொரு பெயரில் ஊர்வலம் ஒன்றை நடத்தி முடித்து மாதம் ஒன்று கடந்தாயிற்று. இந்த ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தியவர்களின் அரசியல் நோக்கம் என்ன? எழுக தமிழ் ஊர்வலத்தின் ஊடாகத் தமிழ் மக்கள் பேரவை எதைச் செய்யத் தலைப்பட்டது? இவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள்எவை? ஆகிய கேள்விகளுக்கு விடை தேடுவது இந்தத் தருணத்தில் சாலப் பொருத்தம்.

ஊர்வலத்துக்கான முன்னாயத்தங்கள், அது நடந்து முடிந்தபின் அதன் மீதான அரசியல் உரையாடல்கள், கடந்த நான்கு வாரங்களாகத் தேசிய மற்றும் தமிழ்த் தேசிய அரசியல் மட்டங்களில் அதன் பிரதிபலிப்புக்கள் என்பவற்றிலிருந்து இந்தக் கேள்விகளுக்கு விடை தேடும் முயற்சியே இது.

### பின்புலம்: பேரவைப் பெருந்தலைகளும் கொள்கைப் பற்றுறுதியும்

நடந்து முடிந்த ஊர்வலத்தின் அரசியலைப் புரிந்துகொள்ள, தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கியவர்களின் கடந்தகால அரசியலை அலசுவதே மிகப் பொருத்தமானது.

பேரவைப் பெருந் தலைகள், தமிழ்த் தேசியத்துக்கான தளராத அர்ப் பணிப்பும், கொள்கை உறுதியும்கொண்டவர்களாகத் தம்மை விளம்பரம் செய்து கொள்வதில் உண்மைகள் ஏதும் உண்டா என்ற கேள்வியிலிருந்து அது தொடங்குகிறது.

### பொன்னம்பலத்தின் குத்துக்கரணம்

2014ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவகத்தின் விசாரணையை உள்ளடக்கிய ஜெனீவாத் தீர்மானம் நிறைவேற்றப்படவிருந்த நாள்களில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வழி காட்டலில், உள்நாட்டிலும், வெளி நாட்டிலும்குறித்ததீர்மானத்தில்சர்வதேச விசாரணைக் கூறு இல்லை; இதனால் இந்தத் தீர்மானத்தைத் தமிழர் நிராகரிக்கின்றனர் என்று பலத்த கூச்சல் எழுப்பப்பட்டது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் பொன் னம்பலத்தின் குழப்பங்கள் நின்றபாடில்லை. தொடர்ந்தும் குறித்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணையைப் பற்றிப் போரினாற் பாதிக்கப்பட்ட மக்களிடம் அவர் புரளிகளைக் கிளப்பி வந்தார். 2015 செப்ரெம்பர் மாதம் போர்க் காலக் குற்றங்களுக்கான நீதி வேண்டிக் கலப்புப் பொறி முறையொன்றை நிறுவ ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முயற்சியெடுத்தபோது, சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறை ஒன்றே வேண்டும் எனக் கோரி கஜேந்திரகுமார் இலங்கையில் கையெ முத்து வேட்டையில் ஈடுபட்டார்.

தமிழ் சிவில் சமூகமென்ற பெயரில், மனித உரிமைகள் உயர் ஆணையருக்கு, பாதிக்கப்பட்ட தமிழர் கலப்பு நீதிமன்றத்தை நிராகரிப்பதாக குறிப்பிட்டுக் கடிதமொன்று எழுதப்பட்டது. இன்று கஜேந்திரகுமாரும் அவரது தொண்டர்களும் தாங்களே போராடி, கலப்புப் பொறிமுறைக்கான தீர்மானத்தைக் கொண்டு வந்ததைப் போலவும், அந்தத் தீர்மானத்தைக் கிடப்பில் போட அரசோடு சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயல்வது போலவும் ஒலி வாங்கிகளைப் பொருத்தி குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது சிரிப்பதா, அழுவதா எனத் தெரியாமலுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, சமஷ்டித் தீர்வை நீண்ட காலமாகவே முன்மொழிந்து வந்திருக்கின்ற அரசியல் இயக்கங்களில், தமிழரசுக் கட்சி முதன்மையானது. கடந்த பொதுத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சி தனது அறிக்கையில் தெளிவாகவே ஒன்றுபட்ட இலங்கைக்குள், ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கில் சமஷ்டியாட்சியைத் தீர்வாக முன்வைத்து மக்கள் ஆணையைக் கோரியது. இதே தேர்தலில் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ ஒரு நாடு, இரு தேசம் என்ற சுலோகத்தில், இணைந்த தேசங்கள் என்ற ஆட்சி முறைமையைத் தீர்வாக முன்மொழிந்திருந்தது.

இன்றோ, பொன்னம்பலம், இரு தேசம் ஒரு நாடு என்ற இணைந்த தேசங்களின் தீர்வைக் கைவிட்டு சமஷ்டியே தீர்வென்று முதலமைச்சரோடு கை கோர்த்து பட்டையைக் கிளப்புகின்றார். இது போதாதென்று தனது கட்சி தேசங்களின் இணைப்பைத் தீர்வாக முன்மொழிந்த வரலாற்றையே, முற்றாக மறுதலித்து வருகின்றார். ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசங்களின் இணைப்பையே தீர்வாக முன்மொழிந்து வந்தது என்பது தமிழ் அரசியலை அறிந்த எவருக்கும் தெரியும்.

கட்சித் தலைவர்தான் இப்படியென்றால், கட்சிப் பிரமுகர் விஸ்வலிங்கம் மணிவண்ணனோ, தனது முகநூலில் சுதந்திர ஈழக் கனவை நனவாக்க எழுக தமிழ் நிகழ்வில் மக்கள் இணைய வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இதில் யார் சொல்வது உண்மை? எது கட்சியின் உத்தியோக பூர்வ நிலைப்பாடு? நேற்று இணைந்த தேசங்கள், இன்று சமஷ்டி என்றால், நாளை ஒற்றையாட்சியா?

கஜேந்திரகுமாரும், அவரது சிவில் சமூக நண்பர்களும் தமிழரது அரசியல் எதிர்காலம் தொடர்பில் சர்வதேச உதவியுடன் உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழரிடம் நடத்தவிருந்த பொதுவாக்கெடுப்புப் பேச்செல்லாம் இன்று என்னானது?

ஆனால், மக்கள் இவ்வாறான குழப்பங்களால் கிலேசமடைந்ததாகத் தெரியவில்லை. கஜேந்திரகுமாரின் அரசியல் ஞானத்திற்கும், அவரதும், அவரது கட்சிக் காரர்களதும் கொள்கையுறுதிக்கும் கடந்த ஆண்டு பொதுத் தேர்தல் பெறுபேறுகளே சான்று.

**சுரேஷ் பிரேமச்சந்திரனின் கொள்கையுறுதி**

பேரவையின் மற்றுமொரு பெருந்தலை, சுரேஷ் பிரேமச்சந்திரன், பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் ஆசனம் கேட்டு அலைந்தார். நாள் தோறும் அறிக் கைகள் விடுத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடுகளோடு உடன்படாதவர், கூட்டமைப்பு தமிழ்மக்களை ஏமாற்றிச் வருவதாகக் கருதுபவர், ஏன் அதே கட்சியில் ஆசனம் கேட்டு அலைய வேண்டும்? இதுவா பிரேமச்சந்திரனின் கொள்கைப் பற்றின் இலட்சணம்? கூட்டமைப்பின் தலைமை நாடாளுமன்றத்தில் இவருக்கொரு இடம் கொடுத்திருந்தால், அவர் இன்று பேரவையில் இல்லை, பேரவையும் இல்லை.



தமிழ்த்
தேசிய மக்கள் முன்னணித் தலைவர்
கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்
வழி காட்ட லில், உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் குறித்த தீர்மானத்தில் சர்வதேச
விசாரணைக் கூறு இல்லை, இதனால்
இந்தத் தீர்மானத்தைத் தமிழர்
நிராகரிக்கின்றனர்
என்று பலத்த கூச்சல்
எழுப்பப்பட்டது.

**விக்னேஸ்வரனது தடுமாற்றம்**

நாடாளுமன்றில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பேணி வந்த மிதவாத அரசியல் நிரலின் மாகாண மட்ட நீட்சியாகச், சம்பந்தனால் கொண்டு வரப்பட்டவரே முதலமைச்சர் விக்னேஸ்வரன். தெற்கில் நீண்ட காலம் வாழ்ந்தவரும், சிங்களவர்களோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவருமான இவர், வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் பாலமாக இருப்பார் என்ற நம்பிக்கையில் முதலமைச்சர் வேட்பாளராக்கப்பட்டவர். இவரை முதலமைச்சர் வேட்பாளராக்கியதற்கு இன்று இவரைச் சூழ்ந்திருப்பவர்களில் பலரிடமிருந்து பலத்த எதிர்ப்பு வந்தது. இந்தச் சக்திகள் அன்று அவரை மேட்டுக் குடியாளராகவும், தேசியப் பற் றற்றவராகவும் சித்தரித் தன. பலத்த எதிர்ப்புக்க ளின் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைமையின தும், உறுப்பினர்களினதும் உழைப்பின் வழியாக 2013 மாகாண சபைத் தேர்தலில் அவர் வெற்றி பெற்று முதலமைச் சரானார்.

சம்பந்தனது அரசியல் நிரலோ டொத்து அரசியல் செய்யவென அழைத்து வரப்பட்ட இவர், அடுத்து வந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்தார். தேர்தலுக்கு ஒரு வாரமே எஞ்சியிருந்த நிலையில் எந்தச் சந்தேகங்களுக்கும் இடமின்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சரணாகதி அரசியலைச் செய்கின்றனர் எனச் சாடினார். தமி ழர் தமது தனித்துவத்தையும், சுயநிர்ணய உரிமை யையும் உறுதி செய்யும் பொருட்டு தேர்தல் நாளன்று வீட்டுக்குள் (கூட்டமைப்பு) முடங்கிக் கிடக்காமல், விடியும் முன்பே எழுந்து தமது பொன்னான (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்) வாக்குகளை வழங்க வேண்டுமெனச் சொல்லி வைத்தார். அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மக்களால் நிராகரிக்கப்பட்டனர். விஜயகலா மகேஸ்வரனுக்கும், ஏன் அங்கஜன் ராமநாதனுக்கும் கிடைத்த வாக்குகளைக்கூட பொன்னம் பலத்தாலும் அவரது கட்சியினராலும் சுவீகரிக்க முடிய வில்லை. இந்தச் செய்திகூட ஏனோ விக்னேஸ்வரனுக்கு உறைக்க வில்லை. கூட்டமைப்பைத் துரோகிகளாக்க நினைப்பவர்களோடு இணைந்து, இன்றும் அவர் மேடையில் நிற்பதற்கு, அவர் சொல்வதைப் போலவே மக் களோடு மக்களாக வடக்கில் வாழ்ந்து, அவர்களது இன் னல்களைக் கண்டு நெஞ்சம் கலங்கிப் பிறந்த ஞானமா காரணம்?

*(நாளையும் எழுந்து விழும்)*

# ஆசிரியர் சமூகத்துக்கு ஒரு பணிவான விண்ணப்பம்

கிளிநொச்சியிலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற சம்பவமொன்று மனதை நெகிழ வைத்ததுடன் கல்விச் சமூகத்தின் மீது வெறுப்பையும் ஏற்படுத்திவிட்டது.

அந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்ற சில மாணவர்கள் சப்பாத்து அணியாது செருப்புடன் பாடசாலைக்குச் சென்றதால் ஆத்திரமடைந்த பாடசாலை அதிபர், அவற்றை மாணவர்களைக் கொண்டு கழற்ற வைப்பித்து, பின்னர் அவற்றையெல்லாம் குவித்து வைத்துள்ளார்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் சப்பாத்து அணிய வேண்டுமென்பது ஒரு விதியாகவுள்ளது. இதைக் கடைப்பிடிக்க வேண்டியது மாணவர்களின் கடமையுமாகும். ஆனால் சகல மாணவர்களுக்கும் சப்பாத்து வாங்கக் கூடிய பொருளாதார வசதி உள்ளதா? என்பதையும் ஒருகணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இவ்வாறு வசதி குறைந்த மாணவர்களுக்கு ஏதாவது நிறுவனங்கள் அல்லது தயாள குணம் படைத்தவர்கள் மூலமாக அவர்களுக்குத் தேவையான சப்பாத்து உள்ளிட்ட உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் பாடசாலை நிர்வாகிகள் ஈடுபட்டு வருவதையும் காணமுடிகின்றது. இந்த நடைமுறையை, சம்பவம் இடம்பெற்ற கிளிநொச்சிப் பாடசாலையிலும் கடைப்பிடித்திருந்தால் மேற்படி சம்பவம் இடம்பெற்றிருக்க மாட்டாது.

மேலும் மாணவர்களது மனங்களைப் புண்படுத்துகின்ற முறையிலான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது சரியா என்பதைக் கல்வியியலாளர்கள் சிந்திக்க வேண்டும். அவர்கள் கற்றறிந்தவர்கள். பிள்ளைகளுக்கு நல்லதுதான் செய்வார்கள். ஆனால் ஒரே அளவுகோல் எல்லோருக்கும் பொருந்துமா என்றோ மனக்கிலேசம் ஏற்பட்டதால் அதனைச் சுட்டிக்காட்டினோம்.

ஜெயந்தன் .

# பாணா? பம்மாத்தா?

பாண் இலங்கை மக்களை பொறுத்தவரையில் ஒரு ஜீவாதார உணவுப் பண்டமாகும். ஏழைகளின் தோழன் என அழைக்கப்படும் இந்தப் பாண் பல குடும்பங்களின் மூன்று நேரப்பசியைக் கூட ஆற்றுகிறது. அது மட்டுமல்ல கடந்த கால அரசியலில் கூட பெரும் செல்வாக்குச் செலுத்தியது. பாண் விடயத்தில் மாறி மாறி வந்த அரசுகள் கவனமாகவே இருந்துள்ளன. ஏனென்றால் பாணில் கைவைத்தால் அது ஆட்சியையே கவிழ்த்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். இவ்வளவு சமூக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பாணானது இன்று சில பிரதேசங்களில் ஏனோதானோ என்று உற்பத்தி செய்யப்படுவது வேதனைக்குரியது.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் குடும்பக்கார்ட் போல ஒவ்வொரு குடும்பத்துக்கும் பாண் கார்ட் கொடுக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாண் விநியோகிக்கப்பட்டது. கியூவில் நின்று தான் அந்தப் பாணை நாங்கள் கூட்டுறவுக் கடைகளில் வாங்கினோம். அதன் சுவையோ தனிச்சுவை, அதாவது தேவாமிர்தம்.

இவ்வாறான பாணை ஏழைகளின் தோழன் என்ற காரணத்தினால் ஏனோ தானோ என்று தயாரிப்பது தகுமா? நியாயமா?


எவரும் குறை நினைக்கக் கூடாது. உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை பகுதிப் பாண்கள் பிய்க்கும்போது இறப்பர் போல இழுபடுகின்றன. உருவத்தில் பெரியதாகவும் உள்ளுக்குள் கோதாகவும் இருக்கின்றன. சிலவேளை உள்பாகம் பச்சையாக வேகாது இருக்கிறது. ஒரு துண்டு கிள்ளி எடுப்பதற்கு லாஸ்ரிக் போல நீள இழுத்து அதிகப் பலம் பிரயோகிக்க வேண்டி உள்ளது.

ஏழைகள் பணம் கொடுத்து வாங்குவது. சற்று மனிதாபிமானத்தைக் கடைப்பிடியுங்கள், பாவம் குழந்தைகள், பள்ளி மாணவர்கள், முதியவர்கள் இவற்றை என்ன பண்ணுவார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

விஸ்வாஸ்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யாசிடிப் பெண்கள் மீட்கப்படுகின்றனர்

பக்தாத், ஒக். 22

ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு பாலியல் அடிமைகளாக சிறைப்பிடித்து வைத்திருந்த ஆயிரக்கணக்கான யாசிடி இனப் பெண்கள் மோசூல் நகரிலிருந்து மீட்கப் பட்டனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அங்கு தனது அரக்கத்தனமான ஆட்சியை அரங்கேற்றி வருகிறது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. ஈராக்கின் மோசூல் நகரமே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பலமாக இருந்த நிலையில் குறித்த பகுதியை மீண்டும் கைப்பற்ற ஈராக் முனைப்புக் காட்டியது. இதற்காக மிகப்பெரிய திட்டமொன்றைச் செயற்படுத்தியது. இதன்படி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் அண்மையில் ஆரம்பித்தது. 35 ஆயிரம் ஈராக் இராணுவச் சிப்பாய்கள் உள்ளடங்கலாக மொத்தம் 90 ஆயிரம் சிப்பாய்கள் மோசூலை மீட்கக் களத்தில் உள்ளனர். இதுவரை 10 கிராமங்கள் மீட்கப்பட்டன. ஏராளமான மக்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்து விடுபட்டு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகாமுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரால் பாலியல் அடிமைகளாக வைத்திருந்த ஆயிரக் கணக்கான யாசிடி இனப் பெண் களும் மீட்கப்பட்டுள்ளனர் என இராணுவத் தரப்புத் தெரிவித்தது.

யாசிடி இனத்தை அடியோடு அழிக்கும் விதத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புச் செயற்பட்டது. ஆயிரக் கணக்கான யாசிடி இன ஆண்கள் அந்த அமைப்பால் கொல்லப்பட்டனர். குறித்த இனப் பெண்களை தமது பாலியல் அடிமைகளாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு வைத்திருந்தது. ஏனைய பகுதிகளுக்கும் அவர்களை விற்பனை செய்தது. 2014 ஆம் ஆண்டில் மட்டும் யாசிடி இனப் பெண்களை விற் பனை செய்ததில் 20 மில்லியன் டொலர்களை அந்த அமைப்பு இலாபமாக ஈட்டியதாக அமெரிக்க புலனாய்வுத்துறை தெரிவித்திருந்தது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் போதிய ஆயுதங்கள் இல்லை. கார்க் குண்டுத் தாக்குதல்களும், தற்கொலைத் தாக்குதல்களுமே அவர்களின் பிரதான மார்க்கங்களாக உள்ளன என அமெரிக்கா எச்சரித்தது.

ஈராக், சிரியாவிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டால் அங்கிருந்து வெளியேறும் அகதிகளுடன் ஆயுததாரிகளும் வெளியேறி ஐரோப்பாவுக்குச் சென்று அங்கு தற்கொலைத் தாக்குதல்களை அரங்கேற்றலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-ரி4)

## 200 கோடியில் திருமண ஏற்பாடு

இந்தியாவில் 200 கோடி செலவில் (இந்திய மதிப்பில்) திருமணமொன்று நடைபெறவுள்ளமை பெரும் பரபரப்பான விடயமாக மாறியுள்ளது.

சுரங்கத் தொழிலதிபரான ஜனார்த்தன ரெட்டி என்பவரின் மகளுக்கும், பிறிதொரு சுரங்கத் தொழிலதிபரின் மகன் ராஜீவ் ரெட்டிக்கும் அடுத்த மாதம் 16 ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது. குறித்த திருமணமே இவ்வாறு மிகப் பெரிய செலவில் நடைபெறவுள்ளது. திருமணத்துக்கான அழைப்பிதழ் எல்.சி.டி. வடிவில் மிகவும் ஆடம்பரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அழைப்பிதழைத் திறந்தால் திரையில் காட்சிகள் விரிகின்றன. சரியாக 2 நிமிடம் 28 வினாடிகளை கொண்ட இந்த வீடியோ, திரைப்படப் பாணியில் உருவாக்கப்பட்டுள்ளது. அழைப்பிதழுக்காக மட்டும் மூன்று கோடி செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (ம-ரி4)

## பருத்திக் கிடங்கில் தீ ஐவர் பரிதாபச் சாவு

புனே அருகே பருத்திக் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டதில், அங்கு பணியில் ஈடுபட்டிருந்த 4 பெண்கள் உட்பட 5 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர்.

மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் உள்ள பருத்திக் கிடங்கு ஒன்றில் நேற்று முற்பகல் 10 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தகவலறிந்து, தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஐந்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களுடன், கடுமையாகப் போராடி தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. நான்கு பெண்கள் உட்பட ஐந்து பேர் உடல் கருகிச் சாவடைந்தனர். (ம)

## பாக். பிரத[...] எனது இ[...]

### மலாலா தெரிவித்[...]



பாகிஸ்தான் பிரதமராவதே தனது எதிர்கால இலட்சியம் இவ்வாறு தெரிவித்தார் அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலா.

மத்திய கிழக்கு நாடுகளின் எதிர்கால முதலீட்டு அமைப்பின் சார்பில் சிறப்பு ஐ.நா. கருத்தரங்கம் சார்ஜா வில் நேற்றுமுன்தினம் நடந் தது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மலாலா இவ்வாறு தெரிவித்தார்.

இளம் வயதில் பெண்கள் படித்து வேலைக்கு சென்று ஆண்களுக்கு நிகராக சமூகத்தில் சம அந்தஸ்துப் பெற வேண்டும். வெறும் புத்தகத்தை படித்தால் மட்டுமே மாற்றத்தை கொண்டு வர முடியாது. சமூகத்தில் உள்ள அனைவரும் பெண்களை சுதந்திரமாக செயற்பட ஆதரவு அளிக்க வேண்டும். தற்போது அரபு நாடுகளில் நிறைய மா[...] மகிழ்ச்சி அடைகிறேன். பல்வேறு து[...] விளையாட்டு வீராங்கனைகளாக [...] போது பிரமிப்பு ஏற்படுகிறது. நான்[...] பெனாசிர் பூட்டோவை முன்மாதிரிய[...] பாகிஸ்தானின் பிரதமர் ஆவதே [...] பிரதமர் ஆனால் பெண் கல்விக்கு[...] நாடுகளில் பாகிஸ்தானை ஒரு மு[...] என மலாலா மேலும் தெரிவித்தார்[...]

## அலெப்பே[...] ஐ.நா. சபை[...]



டமஸ்கஸ், ஒக். 22

சிரியாவின் அலெப்போ நகரில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, அங்குள்ள மக்களுக்கான உதவிப் பொருள்களுடன் ஐக்கிய நாடுகள் சபையின் வாகனங்கள் அலெப்போவைச் சென்றடைந்தன.

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போவில் உள்ள அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக சிரிய அரசும், ரஷ்யாவும் வான்வெளித் தாக்குதல்களை நடத்தி வந்தன. பல்லாயிரக்[...]




### இந்தியாவில்

## 300 கோடிக்கு அதிகமான கறுப்புப் பணம் பறிமுதல்

டெல்லியில் வழக்கறிஞர் வீட்டிலிருந்து 300 கோடிக்கும் அதிகமான கறுப்புப் பணம் கைப்பற்றப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கறுப்பு பணம் வைத்திருப்பவர்கள் தாமாக முன் வந்து அறிவிக்கும் திட்டம் இந்தியாவில் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதி குறித்த திட்டத்தின் கால அவகாசம் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து சந்தேகத்துக்கு உரியவர்களின் வீடு, அலுவலகங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தத் தொடங்கியுள்ளனர். தெற்கு டெல்லியில் வசிக்கும் ஒரு வழக்கறிஞரின் வீட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் அண்மையில் நடத்திய சோதனையில் அவரிடமிருந்து 300 கோடிக்கும் (இலங்கை மதிப்பில்) அதிகமான கறுப்புப் பணம் இருப்பது கண்டறியப்பட்டு கைப்பற்றப்பட்டது. (ம-ரி4)

## இந்தியாவுடன் சமரசம் செய்ய அமெரிக்காவை நாடியது பாக்.



பேச்சுவார்த்தைக்கு இந்தியாவை அழைக்க அமெரிக்காவின் உதவியை பாகிஸ்தான் நாடியது என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது பாகிஸ்தானின் ஆயுதக் குழுக்கள் அண்மையில் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதல் தொடர்பாக உறுதியான ஆதாரம் இந்தியாவிடமிருந்து பாகிஸ்தானுக்குகொடுக்கப்பட்ட போதிலும் பாகிஸ்தான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என இந்தியா குற்றம் சுமத்தியது. இதனால் பாகிஸ்தான், பயங்கரவாதத்தை உற்பத்தி செய்து அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது எனத் தெரிவித்து அந்நாட்டைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இந்தியா தற்போது முனைப்புக் காட்டி வருகிறது. பாகிஸ்தானில் நடைபெறவிருந்த சார்க் மாநாடும் இந்தியாவின் புறக்கணிப்பால் கைவிடப்பட்டது. பிரிக்ஸ் மாநாட்டிலும் பாகிஸ்தானுக்கு எதிரான கருத்துக்களை இந்தியா முன்வைத்தது. இந்த நிலையில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரான பாகிஸ்தான், அதற்கான உதவிக்காக அமெரிக்காவை நாடியுள்ளது என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-ரி4)

## 700 வருடங்[...] கலைப்பொரு[...]

சிட்னி, ஒக். 22

700 வருடங்கள் பழமையான புத்தர்சிலை ஆஸ்திரேலியாவில் ஏலத்துக்கு வருகிறது.


மெதஸ்கிரீன் என்ற நிறுவனமே குறித்த பொருள்களைவ விற்பனை செய்யவுள்ளது.

சீனாவை ஹொங்வு அரசர் ஆட்சிசெய்த காலத்தில் குறித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மராவதே
## லட்சியம்

தார்



ற்றங்கள் நிகழ்ந்து வருவது குறித்து துறைகளில் உயர் பதவிகள் மற்றும் பெண்கள் உள்ளதைப் பார்க்கும் ன் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ாக எடுத்துள்ளேன். அவரைப்போல எனது லட்சியம். அவ்வாறு நான் கு முக்கியத்துவம் அளித்து உலக ன் மாதிரி நாடாக திகழச் செய்வேன் ர். (ம-ரி4)



# துருக்கி இராணுவம் வான் தாக்குதல் குர்து போராளிகள் 200 பேர் சாவு

துருக்கி இராணுவத்தின் வான் தாக்குதலில் 200 குர்து போராளிகள் கொல்லப்பட்டனர்.

சிரியாவின் வடக்கு பகுதியில் துருக்கி நாட்டின் எல்லையையொட்டி அமைந்து உள்ள பகுதிகளில் குர்து இனப் போராளிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு அவர்களுக்கு எதிராக துருக்கி இராணுவம் கடந்த ஓகஸ்ட் முதல் வான்தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை நடத்திய தாக்குதலில் 200 போராளிகள் கொல்லப்பட்டதாக துருக்கி இராணுவம் தெரிவித்தது.

குர்து இனப் போராளிகளின் நிலைகள் மீது துருக்கி போர் விமானங்கள் தொடர்ச்சியாகக் குண்டு மழை பொழிந்தன. இதில் குர்து இனப் போராளிகளின் 9 கட்டடங்கள், ஆயு தங்கள் பொருத்திய வாகனம் ஒன்று உள்ளிட்டவை முற்றிலுமாக அழிக்கப்பட்டன. 200 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என துருக்கி இராணுவத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. (ம-ரி4)

## அச்சம் இல்லாத ஈரானியப் பெண்

தெஹ்ரன், ஒக். 22

ஈரானியப் பெண் ஒருவர் மேற்குலக நீச்சல் ஆடை வடிவமைப்பாளாராக வலம்வருவது பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றது.

ரலா றாசி என்ற குறித்த பெண் தனது 16 ஆறாவது வயதில் விருந்துபசாரம் ஒன்றுக்காக குட்டைப் பாவாடையை அணிந்து சென்றமையை அடுத்து, பெண்களுக்கான விதிமுறையை அவர் மீறியதாகத் தெரிவித்து 40 பிரம்படிகள் அவருக்கு தண்டனையாக வழுங்கப்பட்டது. இதன் பின்னர் அமெரிக்காவுக்குச் சென்ற ரலா, தற்போது தன்னை நீச்சல் ஆடை வடிவமைப்பாளராக தக்கவைத்துள்ளார். அமெரிக்காவின் பிரபல நிறுவனமொன்று கடந்த 2012 ஆம் ஆண்டு அச்சமற்ற பெண் எனக் குறிப்பிட்டு ரலாவை கௌரவித்தது. (ம-ரி4)



## ாவை சென்றடைந்தது
## பையின் உதவிக் குழு



கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ரஷ்யாவுக்கு கொடுக்கப்பட்ட பல்வேறுபட்ட அழுத்தங்களின் விளைவாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சியாலும் அங்கு குறுகிய நேர போர் நிறுத்தம் ஏற்பட்டது. இந்த போர் நிறுத்த காலத்தைச் சிறப்பாகப் பயன்படுத்த ஐக்கிய நாடுகள் சபை, தனது விசேட உதவிக் குழுவை அங்கு அனுப்பியுள்ளது.

அலெப்போவில் அண்மைக்காலமாக சிரிய, ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதலில் 500 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஜுலை மாதம் 7 ஆம் திகதிக்கு பின்னர் அலெப்போ மக்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. அதற்கான வாய்ப்பு எமக்கு தரப்பட வில்லை. இந்தநிலையில் மிகநீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உதவி வழங்கும் குழு தற்போது மீண்டும் அலெப்போவுக்குச் சென்றுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்தார். (ம-ரி4)

# இந்தியா - சீனா கூட்டுப்பயிற்சி

இந்தியா - சீனா இராணுவ வீரர்கள் முதன்முதலாக கூட்டுப் பயிற்சி மேற்கொண்டனர்.

காஷ்மீர் மாநிலத்தின் லடாக் பகுதியிலேயே இந்தக் கூட்டுப் பயிற்சி நடைபெற்றது. இதில் நிலநடுக்கம் உள்ளிட்ட காலங்களில் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் கால மீட்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தியா-சீனா இடையே அணுசக்தி வினியோகஸ்தர்கள் குழு, தீவிரவாதி மசூத் அசார் உள்ளிட்ட விவகாரங்களில் முரண்பாடு நிலவி வரும் நிலையில் இந்த கூட்டுப் பயிற்சி நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

## கள் பழமையான
## நள் விற்பனைக்கு



புத்தர் சிலை உருவாக்கப்பட்டுள்ளது என்று குறித்த ஏல விற்பனை நிறுவனம் தெரிவித்தது.

புத்தர் சிலையுடன் வங்கிச் சீட்டு ஒன்றும் விற்பனைக்கு வரவுள்ளது.

இரண்டினதும் பெறுமதி இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 50 லட்சம். (ம-ரி4)




ஜப்பானில் மிகப் பெரிய ஏற்பாட்டில் டைவிங் போட்டி நடைபெற்றது. ஷிராஹமா கடல் பரப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் உலகின் பல பாகங்களிலிருந்தும் பல வீரர்கள் கலந்துளகொண்டனர். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் மாத எண் பலன்




## 5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதத்தில் உங்களின் நிர்வாகத் திறமை கூடும். ஆட்சியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.
பதவிகள் தேடி வரும். புது வேலை கிடைக்கும். தாய்வழிச் சொத்துக்கள் சேரும். அரசு காரியங்கள் உடனே முடியும். வீடு கட்டக் கடன் கிடைக்கும். வரைபட அனுமதி கிடைக்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.
இளைய சகோதரர் வகையில் இருந்த மனவருத்தம் நீங்கும். உறவினர்கள் எதிர்பார்ப்புகளுடன் பேசுவார்கள். டி.வி., பிரிட்ஜ் புதிதாக வாங்குவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். என்றாலும் கட்டை விரல், கண் புருவம், கால் மூட்டில் அடிபடும். சில நேரங்களில் ஏமாற்றங்களை உணர்வீர்கள். வழக்கால் நிம்மதி இழப்பீர்கள். உணர்ச்சிவசப்பட்டு முடிவுகள் எடுக்காதீர்கள். அரசியல்வாதிகள் கட்சி இரகசியங்களை மூத்த தலைவர் உங்களிடம் பகிர்ந்து கொள்வார்.

**கன்னிப் பெண்கள்:**
பெற்றோருடன் கலந்தாலோசித்து வருங்காலம் குறித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். வேலையாட்கள், பங்குதாரர்களுடன் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கத்தான் செய்யும். மூத்த அதிகாரிகளிடம் நெருக்கமும் வேண்டாம், பகையும் வேண்டாம். கலைத்துறையினர்கள் மூத்த கலைஞர்களிடம் சில நுணுக்கங்களைக் கற்றுத் தெளிவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 5, 6, 17, 23, 24**
**அதிர்ஷ்ட எண்கள் 3, 5**
**அதிர்ஷ்ட நிறங்கள்: றோஸ், வெளிர் நீலம்**
**அதிர்ஷ்ட கிழமைகள்: செவ்வாய், வியாழன்**

## 6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதத்தில் தொட்ட காரியம் துலங்கும். பணவரவு அதிகரிக்கும். மனதில் தொக்கி நிற்கும் தாழ்வு எண்ணங்களைத் தூக்கி எறிவீர்கள்.
அறிஞர்களின் நட்பால் தெளிவடைவீர்கள். திருமணப் பேச்சுவார்த்தை கைகூடும். கணவன்-மனைவிக்குள் இருந்த பனிப்போர் நீங்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். புதிதாக வீடு கட்டி கிரகப் பிரவேசம் செய்வீர்கள். புகழ் பெற்ற புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.
வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். தந்தைக்கு இருந்த நோய் குணமாகும் என்றாலும் தந்தைக்கு வேலைச்சுமை ஏற்படும். அவருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். உறவினர், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும். சகோதர வகையில் செலவுகள் இருக்கும். அரசியல்வாதிகள் கட்சிக்குள் நடக்கும் விடயங்களில் தலையிடாமலிருப்பது நல்லது.
கன்னிப் பெண்களின் காதல் மற்றும் உயர்கல்வி சம்பந்தப்பட்ட குழப்பங்கள் நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொண்டு புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் இருந்த மோதல்கள் விலகும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். கலைத் துறையினர்கள்! புதுமையாக சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். பெரியோர்களால் பாராட்டுப் பெறும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 6, 15, 26, 13, 14**
**அதிர்ஷ்ட எண்கள்: 2, 7**
**அதிர்ஷ்ட நிறங்கள்: ஊதா, செம்மஞ்சள்**
**அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, வெள்ளி**

### நாளை

**ஐப்பசி-07**
ஞாயிற்றுக்கிழமை -23.10.2016
திதி: அட்டமி மா. 06.29
நட்சத்திரம்: பூசம் பி.இ.02.32
ராகுகாலம்: [illegible] 06.02 வரை
சுபநேரம்: 09.[illegible] வரை

# மன்னார் சம்பவத்தை விசாரியுங்கள்

மன்னாரில் முத்தலிப்புத்துறையில் திருட்டுக்கள் அதிகரித்த நிலையில், கிராமத்துக்குள் சென்ற கடற்படைச் சிப்பாய் ஒருவர் தாக்கப்பட்டமை பதற்றமான சூழ்நிலையை அங்கு ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயத்தில் பொதுமக்கள் மீது குற்றம் சுமத்தும் கடற்படையினர் கடற்படைச் சிப்பாய் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டை பொதுமக்கள் 10 பேர் மீது சுமத்தி அவர்களின் பெயர்களுடன் சிலாவத்தைப் பொலிஸில் முறையிட்டுள்ளனர். அந்த விவகாரம் நீதிமன்றுக்குச் சென்றுள்ளது. ஆனால் அதன் பின்னணி தொடர்பாக இருதரப்பிலிருந்தும் வரும் தகவல்கள் வேறுபட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தம்மில் தவறு இல்லை என்பது கடற்படையினரின் வாதமாகவுள்ளது. ஆனால் அதனை ஏற்றுக்கொள்ள பொதுமக்கள் எவரும் தயாராக இல்லை. அந்த ஊரே சேர்ந்து கூறுகின்றது கடற்படையினரில்தான் தவறு என்பதாக. அதற்கு அக் கிராமத்துப் பொதுமக்கள் கூறும் காரணமும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே உள்ளது.
அந்தக் கிராமத்தில் சில நாள்களாகத் திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளன. எத்தனையோ நாள்கள் கஷ்டப்பட்டு உழைத்து, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவிலும் இயன்றளவு சேமித்துச் சேர்த்து வைத்த பணம், பொருள்கள் திருடப்படுவதை எவர்தான் பார்த்துக்கொண்டிருப்பர். சட்டவரன்முறையையும் மீறியல்லவா அவற்றைப் பாதுகாக்கத் துடிப்பர். அப்படிச் சேகரித்து வைத்தவை திருட்டுப் போவதைக் கண்டால் திருடர்களை அன்பாக உபசரிக்கவா முடியும்?
சிலநாள்களுக்கு முன்னர் நள்ளிரவில் திருடன் ஒருவனைக் கண்டு அவனைத் துரத்திச் சென்றபோது பிடிபடும் நிலையில் இருந்த அவன் தான் கொண்டு சென்ற வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றிருந்தான். அதனால் காயமடைந்தவர் 32 இழைகள் போடப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கிராமத்துக்குள் நள்ளிரவில் சிலர் சென்றபோது ஊரே ஒன்று சேர்ந்து அவர்களைத் துரத்திப்பற்றைக்குள் வைத்துத் தாக்கியபோது அவர்கள் கடற்படையினர் என்பது தெரிய வந்தது. பொதுமக்களிடமிருந்து இருவர் தப்பியோடியதாகவும் ஒருவர் வசமாக மாட்டிக் கொண்டார் என்றும் கூறப்பட்டது. தப்பியவர்கள் சென்ற சில நிமிடங்களில் அந்த இடத்தில் கடற்படையினர் குவிக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் பொலிஸாரும் செல்ல அங்கு பரபரப்பான நிலை ஏற்பட்டது. இவற்றுக்குக் காரணம் யார்? பின்னணி என்ன?
கிராமத்துக்குள் எத்தனையோ திருட்டுக்கள் இடம்பெற்றிருந்தபோதும் பொலிஸாரால் திருடரைப் பிடிக்க முடியவில்லை. வசமாக மாட்டிக் கொண்டதும் கடற்படையினர் என்றால் முன்னர் நடந்த திருட்டுக்களில் ஈடுபட்டது யார் என்ற சந்தேகம் கடற்படையினர் மீது வருவதைத் தவிர்க்க முடியாது தானே. அது உண்மையா? பொய்யா? என்பதை உரிய விசாரணையின் மூலமாகவே கண்டறியலாம். அந்தத் திருடர்கள் யார் என்பதனைக் கண்டறிய விசாரணை அவசியம். உண்மை வெளிவரும்போது முகத்திரை கிழியலாம்.
அவர்கள் திருடச் செல்லவில்லை என்றால் மற்றும் கடத்தல், குற்றச் செயல் தொடர்பில் ஆராய்வதற்காகச் சென்றிருந்தால் பொது மக்கள் சந்தேகிக்கும் அளவுக்கு, அவர்கள் துரத்தும் போது ஏன் தப்பியோடியிருக்க வேண்டும்? சட்ட ரீதியான செயல்களில் ஈடுபடச் சென்றிருந்தால் பொதுமக்களைக் கண்டு ஓடியிருக்கவேண்டியதில்லை. அந்த வகையிலும் பொதுமக்கள் செயற்பட்ட விதத்தை நியாயப்படுத்த முடிகிறது.
திருட்டு உள்ளிட்ட குற்றச் செயல்கள் பொலிஸாரால் தடுக்கப்பட்டிருந்தால், வாள்வெட்டு நடக்காதிருந்திருந்தால் அந்தளவு விபரீதம் ஏற்பட்டிருக்காது.
கடற்படை மீது பொதுமக்கள் தாக்கியதாகக் கடற்படையினர் முறையிடுகின்றனர். ஆனால் கடற்படையினர் நள்ளிரவில் கிராமத்துக்குள் வீடுகளுக்குள் ஏன் நுழைய வேண்டும்? பின்னர் ஏன் தப்பியோட வேண்டும்?
முன்னர் கிறீஸ் பூத விவகாரம் கிழக்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரிவடைந்திருந்தது. அது பல பிரச்சினைகளை உருவாக்கியிருந்தது. அது அமைதியைக் குலைத்து அச்சுறுத்தியது. இந்த நிலையில் திருட்டுக்கள் மக்களின் உழைப்பில் அடிவயிற்றில் கைவைக்கிறது என்றாகியுள்ளது. அந்த வகையில் பார்த்தால் அந்தக் கிராமத்தில் பிடிபடாத திருட்டுச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் யார் என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.
பாதுகாப்புத் தரப்பு என்று இங்கு இருக்கிறார்கள். இருக்கும் காலத்தில் அதற்கேற்றதாக அவர்கள் தத்தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். கிராமத்துக்குள் அத்துமீறி நுழைந்தது ஏன் என்பதிலிருந்து சகல வகையிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரகவி காரை.எம்.பி.
அருளானந்தன



# சிவலிங்க பூசை வழிபாட்டின் சிறப்பு

பல தெய்வ வழிபாடுடைய இந்துக்களில் பலருக்கும் எந்த மூர்த்தியை வழிபட்டால் எல்லா மூர்த்திகளையும் வழிபட்ட பயனைப் பெறலாம் என்பது தெரியாதிருக்கிறது. அதைப் பலரும் அறியும்படி தெரிவிக்கவே, சிவன் கோயில்களில் மூலஸ்தானத்தில் சிவலிங்கத்தைத் தவிர வேறு பிரதிஷ்டை ஒன்றுமின்றி அமைத்துக் காட்டியிருக்கின்றனர் நம் முன்னோர்கள்.

சிவலிங்கத்தில் பிரம்ம, விஷ்ணு, சிவபாகங்கள் ஆகிய மூன்றும் அமைந்திருப்பது. சிவலிங்கம் மூன்று கூறுகளுடையன. அடிப்பாகம் நாற்கோண வடிவாய் பூமிக்கு அதிபதியான சிருஷ்டி கர்த்தாவான பிரம்ம பாகத்தை உணர்த்துவதாகும்.

முக்கிய பாகம் எட்டுப்பட்ட முடைய அட்ட கோண வடிவமாய் வாமை, சேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமணி சர்வபூததமணி என்றும் மகாவிஷ்ணுவின் எட்டு சக்திகளும், அதனோடு பொருந்த இருக்கும் ஆவுடை எனப்படும் மனோன்மணியாகிய ஒன்பதாவது சக்தியும் சேர்ந்து மகாவிஷ்ணுவின் நவசக்திகளாகி நீருக்கு அதிபதியான காத்தல் எனப்படும் ஸ்திதி கர்த்தரான விஷ்ணு பாகத்தை உணர்த்துவதாகும். அரன் என்பதன் பெண்பாலே அரி என்பதாகும். அதனாலேயே அரியல்லால் தேவியில்லை, ஐயன் ஐயாறனார்கே என்று திருநாவுக்கரசர் அருளியிருக்கின்றார்.

இதனாலே நமது அப்பனாகிய சிவபெருமானது இடப் பாகம் அம்மையாக விளங்கும் மகா விஷ்ணுவின் பாகமாகவும் மாதொருபாகன் உமா மகேஸ்வரன், அர்த்தநாரி, சங்கரநாராயணன் என்ற ஆணும் பெண்ணும் சேர்ந்த ஆபூர்வ மூர்த்தங்களாகவும் அமைந்து திகழ்கின்றன.

மேலுள்ள பாகம் நெருப்புக்கு அதிபதியும், அழித்தல் எனப்படும் சம்ஹாரம், மறைத்தல் எனப்படும் திரௌபவம், அருளல் எனப்படும் அனுக்கிரகம் ஆகிய முத்தொழில்களுக்கும் அதிபதியாகிய சிவபாகமாகும். பூமிக்கு அதிபதியான பிரம்மபாகம் பூமிக்குள் மறைந்து ஒடுங்கி நிற்கும்.

நீருக்கு அதிபதியான விஷ்ணுபாகம் அபிசேக நீரைத் தாங்கி விரிந்து நிற்கும். நெருப்புக்கு அதிபதியான சிவபாகம் மேலோங்கி ஜோதி போன்று ஜொலித்துக் கொண்டிருக்கும். இந்த மூன்றும் சேர்ந்த அருவமும் உருவமும் அற்ற ஆதியும் அந்தமும் இல்லா அருந்பெரும் ஜோதி வடிவே சிவலிங்கம் ஆகும்.

ஆகவே சிவலிங்கத்தை வழிபட்டால் பிரம்மாவை வழிபட்ட பயனும் மகாவிஷ்ணுவின் பத்துத் திரு அவதாரங்களை வழிபட்ட பயனும் சிவபெருமானின் இருபத்தைந்து திரு மூர்த்தங்களை வழிபட்ட பயனும் ஒருங்கே கிடைக்கக் கூடியதாகவும் இருக்கிற தென்பதை வேதாகமங்கள் வலியுறுத்துகின்றன. புராண இதிகாசங்களும் அனுபூதிமான்களது அனுபவங்களும் அந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

அரசமரத்தைச் சுற்றி வரும் அன்பர்கள் சைவர்களாக இருந்தாலும், வைணவர்களாக இருந்தாலும், எல்லோரும் ஒன்றுபோல் சொல்லிவரும் மூலதோ, பிரம்மரூபாய, மத்யதோ விஷ்ணுரூபிணி, அக்சத சிவ ரூபாய வருக்ஷராஜாயதே நம என்ற மந்திரமும் சிவலிங்க தத்துவத்தின் உண்மையை நன்றாக வலியுறுத்துகிறதல்லவா?

மேலும் பாவங்களில் எல்லாம் மிகவும் கொடியது பிரம்மஹத்தி தோசம் எனப்படும் மனிதரைக் கொன்ற கொலைப் பாவம். அதை நீக்க வேண்டுமானால் தனியாக எந்த மூர்த்தியையும் வழிபட்டு நீக்கிக் கொள்ள முடியாது என்பது வேதாகம விதி. அதைப் படிக்க வேண்டுமானால் சிவலிங்க பூசையே செய்தாக வேண்டும். அதனாலேயே திருவிளையாடல் புராணத்தில் பஞ்சமா பாதகம் செய்தவனுக்கும் இறைவன் இறைவி அவரது பாவங்களை மன்னித்து நற்கதி கொடுத்ததாகக் காண்கிறோம்.

மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்களும் சிவபூஜா துரந்தரர்களாக இருக்க அர்ச்

அரசமரத்தைச் சுற்றி வரும் அன்பர்கள் சைவர்களாக இருந்தாலும், வைணவர்களாக இருந்தாலும், எல்லோரும் ஒன்றுபோல் சொல்லிவரும் மூலதோ, பிரம்மரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபினி அக்சத சிவ ரூபாய வரு-ராஜாயதே ந என்ற மந்திரமும் சிவலிங்க தத்துவத்தின் உண்மையை நன்றாக வலியுறுத்து கிறதல்லவா?

சுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதம் பெறுவதற்கு விசேட தவம் புரிந்தது யாவரும் அறிந்ததே, கந்த புராணத்தில் சூரசம்ஹாரத்துக்குப் பிறகு ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் திருச்செந்தூரில் சிவ பூசை செய்து, கொண்டிருப்பதைக் காணலாம். கஜமுகா சூரனை சம்ஹாரம் செய்த பிறகு விநாயகப் பெருமான் திருச்செங்காட்டக் குடியில் சிவலிங்க பூசை செய்து கொண்டிருப்பதைக் காணலாம். இராமாயணத்தில் இராவண சம்ஹாரத்துக்குப் பிறகு இராமபிரான் இராமேஸ்வரத்தில் இராமநாதரை சிவலிங்கத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றியதும், அனுமார் தனியாகக் காசியிலிருந்து லிங்கம் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றியதும் காணலாம். எனவே எப்பேர்ப்பட்ட பாவமானாலும், நீங்க வேண்டுமானால் சிவலிங்க பூசை செய்யவேண்டும். மேலான பதவிகள் பெறவேண்டுமானாலும் சிவலிங்க பூசை செய்தாக வேண்டும்.

கட்டுரையாளர்:
பணிப்பாளர்,
சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்

மருத்துவர் சி.யமுனாநந்தா

# மாணவர்களின் ஒழுக்கமும் பாடசாலை நேர அட்டவணையும்

நேரக்கட்டுப்பாடு வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. நேர முகாமைத்துவத்தைப் பாடசாலை வாழ்க்கையிலேயே கற்றுக் கொள்ளல் வேண்டும்.

ஒருவரது நேரம் என்பது இன்றைய விரைவுப் பொருளாதார யுகத்தில் பணத்தின் ஒரு வடிவமாகும். இதனையே காலம் பொன்னானது எனக் கூறுவர். பாடசாலையில் குறித்த பாடவேளையில் ஆசிரியர் இல்லாவிடில் மாணவர்கள் அப்பாடநேரத்தை நூலகங்களில் கழிக்கலாம். அன்றேல் வேறு ஆசிரியரின் உதவியுடனோ அன்றேல் மூத்த மாணவ தலைவர்களின் உதவியுடனோ பாடங்களைத் தொடரலாம். பாடசாலையின் நேர ஒழுங்கைக் கண்ட கண்ட படி மாற்றக்கூடாது. பாடசாலையை ஒரு நாளைக்கு பகல் 12.30 மணிக்கும் இன்னொரு நாளைக்கு ஒரு மணிக்கும் இன்னொரு நாளைக்கு 1.30 மணிக்கும் என்று எழுந்தமானமாக மூடக்கூடாது. பாடசாலை நாட்களில் நேர நியமங்கள் சீராகப் பேணப்படல் வேண்டும். கொக்குவில் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி என்பன பாடசாலை மாணவர்களின் நேரக்கட்டுப்பாட்டை சிறப்பாக வைத்துள்ளன. இதனை ஏனைய பாடசாலைகளும் முன்மாதிரியாக எடுத்தால் எமது இளம் சந்ததியினர் காலத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1383 - போர்த்துக்கல் அரசர் பெர்னாண்டோ ஆண்வாரிசு இன்றி இறந்ததையடுத்து, போர்த்துக்கல் ஆட்சியில் நெருக்கடி ஏற்பட்டு, சிவில் போர் தொடங்கியது.

1730 - ரஷ்யாவில் லடோகா கால்வாய் பூர்த்தி செய்யப்பட்டது.

1784 - அலஸ்கா கோடியக் தீவில் ரஷ்யா குடியிருப்பு ஒன்றைக் கண்டுபிடித்தது.

1797 - அன்றி யாக்கியூஸ் கார்னெரின் பாரிசில் 3200 அடி உயரத்திலிருந்து வெற்றிகரமாக பரசூட்டில் இருந்து குதித்தார்.

1859 - மொரோக்கோ மீது ஸ்பெயின் போர்ப்பிரகடனம் செய்தது.

1878 - சல்போர்டில் பரக்ரன் மற்றும் ஸ்வின்ரன் இடையே மின் ஒளியில் முதன்முறையாக கால்ப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

1875 - ஆர்ஜென்ரினாவில் முதல் தந்தித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

1992 - புலிகளுக்கெதிரான போரில் ஒன்றரை லட்சம் படையினர் எனத் தெரிவிக்கிறார் ரணில்.

- இனப்பிரச்சினைக்குத் தீர்வு விரைந்து காணப்படும் என லிபரல் கட்சித் தலைவர் தெரிவிப்பு.

2004 - இராவணன் சிங்கள மன்னன்; இவ்வாறு அடித்துக் கூறுகிறார் அமைச்சர் மேர்வின் சில்வா. அவரே விமானத்தையும் அறிமுகப்படுத்தியவரெனவும் தெரிவிப்பு.

- முல்லைத்தீவில் காணாமற் போனவரை இராணுவத்தினரே கைது செய்தனர் என விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு வவுனியா நீதிமன்றம் பரிந்துரை.

2007 - இப்படி ஒரு தாக்குதல் நடக்கும் என சற்றும் எதிர்பார்க்கவில்லையென அநுராதபுர விமானப்படை மீதான தாக்குதல் பற்றி கெஹலிய தெரிவிப்பு.

- அநுராதபுர விமானத் தள தாக்குதலின் பின் இந்தியாவுடன் ஜனாதிபதி ஆலோசனையென இந்தியப் பத்திரிகை தெரிவிப்பு.

# உதவுவதே உன்னத குணம்

முத்துலிங்கம் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியர். அவரது மனைவி பூரணி. இவர் களுக்கு ஆண்டவன் குழந்தைச் செல்வத்தைக் கொடுக்கவில்லை. ஆரம்பத்தில் குழந்தைகள் இல்லாத குறை இவர்களை வருத்தத்தில் ஆழ்த்தியது. காலப் போக்கில் அவர்கள் இருவருமே அதை மறந்து விட்டனர். ஊரிலுள்ள குழந்தைகளைத் தமது குழந்தைகளாகவே கருதினார்கள். அதுமட்டுமன்றி தம்மாலியன்ற உதவிகளையும் அவர்களுக்கு வழங்கி வந்தார்கள்.

பூரணி முத்துலிங்கத்துக்கு ஏற்ற மனைவியாக விளங்கினார். தனது கணவருக்குக் கிடைக்கின்ற ஓய்வூதியப் பணத்தை சிக்கனமாகச் செலவழிக்கின்ற வழக்கத்தைக் கொண்டிருந்தார். அதில் ஒரு பகுதியைத் தமது அயலில் வாழ்கின்ற சிறுவர்களின் தேவைகளுக்கென ஒதுக்கி வைத்து விடுவார்.

ஒரு நாள் வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகள் சப்பாத்து அணியாமல் பாடசாலைக்குச் சென்றதால் வகுப்பு ஆசிரியர் அவர்களைக் கண்டித்ததோடு வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவிட்டார். சகோதரர்களான அந்த இருவரும் அழுதவாறு பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தனர். அப்போது பூரணி ஏதோவொரு அலுவல் காரணமாக அவர்களின் வீட்டுக்குச் சென்றிருந்தார். விடயத்தைக் கேள்விப் பட்டதும் மனம் வருந்தினார். பின்னர் அந்த இருவரும் அணியும் சப்பாத்துக்களின் அளவுகளைத் தெரிந்து கொண்டு வீட்டுக்குச் சென்று கணவரிடம் வியடத்தைக் கூறினார். அதைக் கேட்ட முத்துலிங்கம் மிகுந்த வேதனையடைந்தார். உடனேமனைவியிடம்பணத்தை வாங்கிக் கொண்டு சப்பாத்துக்களை விற்பனை செய்யும் நிலையமொன்றுக்குச் சென்றார்.




அன்று பிற்பகல் வேளையில் பூரணி இரண்டு சோடி புதிய சப்பாத்துக்களை எடுத்துச் சென்று அந்தப் பிள்ளைகளின் தாயாரிடம் கொடுத்தார். பூரணியின் நல்ல மனதைக் கண்ட அந்தத் தாய் பலமுறை தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மறுநாள் அந்தப் பிள்ளைகள் இருவரும் புதிய சப்பாத்துக்களை அணிந்தவாறு உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் பாடசாலைக்குச் சென்றனர்.

தமது வீட்டு வாசலில் நின்றவாறு இதனைக் கண்ட முத்துலிங்கமும், பூரணியும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

குழந்தைகளே! தேவை உடையவர்களுக்கு உதவுதல் மிகச் சிறந்த பண்பாகும். இதை நாம் வாழ்வில் கடைப்பிடித்தால் எந்தவொரு குறையும் எம்மை நெருங்காது.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க...



# பொது அறிவு

1. மனித உடலின் மிகவும் குளிரான பகுதி - மூக்கு
2. மரியானா ஆழியின் நீளம் - 11880 கி.மீ
3. உலகிலே மிக உயர்ந்த பீடபூமி - திபெத் பீடபூமி
4. நீரில் நீந்திக் கொண்டே உறங்கும் உயிரினம் - வாத்து
5. ஈயின் ஆயுட்காலம் - 10 நாள்கள்
6. நாணயங்கள் தயாரிக்க உதவும் உலோகம் - நிக்கல்
7. மோட்டார் வானங்கள் வெளிவிடும் வாயு - காபன் மோனாக்சைட்
8. நேரடி ஜனநாயகம் நிலவிய நாடு - எதென்ஸ்
9. இராகங்கள் மொத்தம் எத்தனை - 16
10. அதிக ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் நாடு - அமெரிக்கா
11. சனிக் கிரகத்துக்கு வளையம் உண்டு எனக் கருதியவர் - கலிலியோகலிலி
12. உயிர்காக்கும் உலோகம் என்று அழைக்கப்படுவது - ரேடியம்
13. அமைதியான தூதுவர் என்று அழைக்கப்பட்டவர் - ஜவஹர்லால் நேரு
14. வெட்டுக்கிளியை வேட்டையாடும் பறவை - மைனா
15. நோபல் பரிசை நிறுவியவர் - ஆல்பிரட் நோபல்
16. நின்று கொண்டே உறங்கும் விலங்கு - குதிரை
17. துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு - ஸ்பெயின்
18. நமது நாக்கில் எத்தனை சுவை நரம்புகள் உள்ளன - 3000
19. மனிதனால் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் - செம்பு
20. உலக சிகரெட் ஒழிப்பு தினம் - மே 31

நேவிநாதன் மிதுனா, தரம் 9 A,
*யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.*

# தித்திக்கும் தீபாவளி

தித்திக்கும் தீபாவளி வந்தது
தெருவெங்கும் ஆனந்தம் தந்தது!
தித்திக்க இல்லத்தில் நின்றது!
தின்பண்டம் வேண்டுமா? என்றது!

வெடிச் சத்தம் வீதியிலே கேட்டது!
விளக்கேற்றிப் பாதையினைக் காட்டுது!
பொடியாகத் துன்பங்கள் போனது!
புத்தாக நாடின்று ஆனது!

புத்தாடை மேனியிலே சிரித்தது!
புதியவர்க்கு நல்வரவு கொடுத்தது!
எத்தனையோ இன்பங்களைச் சொன்னது!
எல்லோருக்கும் இனியநாள் என்றது!

நல்லவை நாம் பெற்று வாழுவோம்
நாட்டினை ஒற்றுமையாய் ஆளுவோம்!
அல்லவை விரட்டி உடன் ஓட்டுவோம்!
அனைவருமே ஒன்று எனக் காட்டுவோம்.

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | | | 3 | | | | |
| | 1 | | 4 | | 9 | 7 | | |
| | | | | | | | | 2 |
| | | 9 | | | | 2 | | 1 |
| 4 | | 2 | | | | | 8 | |
| | | 1 | 5 | | | | | 6 |
| 3 | | | | | | | | 5 |
| | | | 6 | 5 | 4 | | | |
| | 7 | | | | | 8 | | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 3 | 7 | 6 | 9 | 1 | 8 | 5 |
| 9 | 7 | 5 | 2 | 8 | 1 | 6 | 3 | 4 |
| 1 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 | 7 | 2 |
| 6 | 3 | 9 | 1 | 5 | 8 | 2 | 4 | 7 |
| 7 | 1 | 8 | 9 | 2 | 4 | 5 | 6 | 3 |
| 5 | 2 | 4 | 3 | 7 | 6 | 8 | 1 | 9 |
| 8 | 9 | 2 | 6 | 3 | 7 | 4 | 5 | 1 |
| 4 | 5 | 7 | 8 | 1 | 2 | 3 | 9 | 6 |
| 3 | 6 | 1 | 4 | 9 | 5 | 7 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விஜயின் பைரவா தெறியை மிஞ்சும் வியாபாரம்



விஜயின் 60ஆவது படமான பைரவா இதுவரை அவரது படங்கள் விற்காத அளவுக்கு பெரிய அளவில் வியாபாரம் ஆகியுள்ளது.

வெளிவந்துள்ள தகவல்களின்படி இந்தப் படம் தமிழகத்தில் மட்டும் ரூ. 50 கோடி வரை விற்பனையாகியுள்ளதாகத் தெரிகிறது.

பரதன் இயக்கத்தில் விஜய் நடித்துவரும் பைரவா படத்தை விஜயா புரொடக்சன்ஸ் தயாரித்துள்ளது. இதன் தமிழ்நாடு வெளியீட்டு உரிமையை ஸ்ரீக்ரீன் புரொடக்சன் பெற்றுள்ளது.

படத்தை வாங்க தியேட்டர் அதிபர்களிடையே பெரும் போட்டி நிலவுகிறது. இதுவரை விஜய் படங்கள் ரூ. 1 – 2 கோடி வரை போன இடங்களில் இப்போது 3 முதல் 4 கோடி வரை விலை பேசப்பட்டு வருகிறதாம் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேவைப்பட்டா ஆப்பிரேசன் செய்ய வேண்டி வரும்... எப்ப டாக்டர்...?



எனக்கு காசு தேவைப்படும் போது...

வாழ்க்கையில என்ன பண்ணலாம் என்று யோசிச்சாலே... ஒன்னு பசி வந்துடுது, இல்லை என்னா தூக்கம் வந்துடுது...



ஹும் ... என்ன பன்றது நம்ம டிசைன் அப்டி...

அண்ணே ... கோடீஸ்வரனாக ஏதாவது மந்திரம் இருந்தா சொல்லுங்க...



தெரிஞ்சா நான் ஏன்யா நீங்க கொடுக்கற பத்து அஞ்சு பிச்சைக்கு உக்காந்து ஜோசியம் பாக்கறேன்?

ஏண்டா சுகர் டப்பால மசாலா என்று எழுதி வச்ச...



எறும்பை ஏமாத்த அண்ணே!

குண்டா இருக்கிங்கனு சொன்னா மனசு கஷ்டப்படுமேன்னு...



கும்முனு இருக்கிங்கனு சொன்னே அதுக்கு போய்ப்பாக் பன்னிருச்சி...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்களின் நற்செயலை, நண்பர்கள் பாராட்டுவர். ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். நீண்ட நாள் விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**இடபம்:** செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான அளவில் பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில், திடீர் மாறுதல் உண்டாகும்.

**மிதுனம்:** கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். வருமானம் சிறப்பாக இருக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்:** உறவினர் மீதான நம்பிக்கை குறையலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற, கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். லாபம் சீராக இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. தாயின் அன்பு, ஆறுதல் அளிக்கும்.

**சிங்கம்:** புதிய முயற்சியில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் தாராளமாக இருக்கும். நண்பர்களால் நன்மை உண்டு.

**கன்னி:** நண்பரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய வாய்ப்பு கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். ஆடை, ஆபரணம் சேரும்.

**துலாம்:** எதிர்காலம் குறித்த சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரம், மந்தகதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும். வெளியூர் பயணத்தில், திடீர் மாறுதல் ஏற்படலாம். பெண்கள், ஆடம்பரச் செலவு செய்ய நேரிடலாம்.

**விருச்சிகம்:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்வர். நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். தொழில், வியாபாரத்தில், லாபம் படிப்படியாக உயரும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர்.

**தனுசு:** உற்சாக மனதுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி, இலக்கு, திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் உயரும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.


**கும்பம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் குடும்ப விடயம் பற்றி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாராக இருக்கும். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் நல்லது. பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திக்க நேரிடலாம்.

**மீனம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு, வீட்டுச் செலவு அதிகரிக்கும். புத்திரரின் நற்செயல் மனதுக்கு ஆறுதல் அளிக்கும்.

WhatsApp

மனைவி: என்னங்க நாளைக்கு நம்ம கல்யாணநாள் இதுவரைக்கும் நான் பார்க்காத இடத்துக்கு என்னை கூட்டிட்டு போங்க.
கணவன்: வா நம்ம வீட்டு சமையல் அறைக்கு போகலாம்...
மனைவி: ???????

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு

போத்தல் தாங்கியுடன், போத்தல்கள் அறிமுகமாகியுள்ளன. சமையலில் பயன்படும் சரக்குப் பொருள்களை பிரத்தியேகப் போத்தல்களில் வைத்துப் பேணப்பட அவற்றுக்கான போத்தல்களாக இவை அறிமுகமாகியுள்ளன. பிளாஸ்டிக்கில் இறப்பர் மூடியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரே தாங்கியில் போத்தல்கள் அடுக்கப்படுவதால் இடம் மிச்சப்படுத்தலாம். இது 850 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

## இன்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 50 | 60 | 60 | 70 | 40 | 50 | 60 | 35 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 80 | 100 | 120 | 140 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 100 | 120 | 140 | 160 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 60 | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 60 | 60 | 60 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 50 | 40 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 160 | 120 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 100 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100–110 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 400 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 80 | 80 | 200 | 80 | 100 |

## கொத்தமல்லித் தழையின் மருத்துவக் குணங்கள்

கர்ப்ப காலத்தில் தண்ணீரில் ஒரு கப் கொத்தமல்லி இலைகள் மற்றும் ஒரு கப் சர்க்கரை சேர்த்து கொதிக்க வைத்து பிறகு குளிர வைத்துக் குடித்தால் தலைசுற்றுதல் மற்றும் வாந்தி குறையும்.

கொத்தமல்லி காயம்

கொத்தமல்லி(அல்லது) தனியா, சீரகம், அதிமதுரம், கிராம்பு, கருஞ் சீரகம், சன்னலவங்கப்பட்டை மற்றும் சதகுப்பை இவை அனைத்தையும் வறுத்து பொடி செய்து கொள்ள வேண்டும். பிறகு 600 கீராம் கற்கண்டை பொடியுடன் கலந்து வைத்துக் கொள்ளவும். இவற்றை காயம் செய்து சாப்பிடலாம்.

பயன்கள்: இந்த காயத்தை காலை, மாலை 1 தேக்கரண்டி சாப்பிட்டால் உடல் சூடு, செரியாமை, வாந்தி, விக்கல், நாவறட்சி, ஏப்பம், தாது இழப்பு, நெஞ்செரிப்பு போன்றவை குணமாகும்.

கொத்தமல்லியை தினமும் அளவோடு உணவில் சேர்த்துக்கொள்வது மிகவும் நல்லது. அது நரம்பு, எலும்பு மற்றும் தசை மண்டலங்களில் ஏற்படும் பாதிப்புகளை குணமாக்கும். இது நன்கு பசியைத் தூண்டும் ஒரு மூலிகைத் தாவரம். வாயு பிரச்சினையை குணமாக்கும். இரவில் நன்றாக தூக்கம் வர கொத்தமல்லிடியை சேர்த்துக்கொண்டால் நல்ல பயனைத் தரும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 400 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 600 | 500 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 800 | 700 | 500 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 400 | 300 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 500 | – |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 300 | 200 |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 500 | 600 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 450 | 300 | – |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 300 | 300 | – |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 250 | 300 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | 150 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 500 | 200 | – |
| மதனம் | 150 | 150 | – | 400 | 350 | 300 | – |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 80 | 70 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 250 | – |



## கரட் பாயசம்

**தேவையான பொருள்கள்**

கரட் – 2
பால் – 2 கப்
சேமியா – ஒரு கப்
சீனி – ஒரு கப்
தண்ணீர் – ஒரு கப்
நெய் – 3 தேக்கரண்டி
முந்திரி, திராட்சை, ஏலக்காய் – தேவையான அளவு

**செய்முறை**

சட்டியில் நெய் விட்டு முந்திரி, திராட்சை வறுத்து எடுத்துக் கொள்ளவும். அதே சட்டியில் மேலும் சிறிது நெய் விட்டு சேமியாவை வறுத்து எடுக்கவும்.

சேமியாவை வறுத்து எடுத்த பின்னர் துருவிய கரட்டை போட்டு 8 நிமிடங்கள் வரை வதக்கவும்.

பின்னர் அதில் வறுத்த சேமியா, பால், தண்ணீர், ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து வேக விடவும்.

கலவை நன்கு வெந்ததும் சீனி மற்றும் ஏலக்காய் சேர்க்கவும்.

வறுத்த முந்திரி, திராட்சை தூவி இறக்கினால் கரட் பாயசம் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு விழா

மட்டுவில் தெற்கு வளர்மதி கல்விக்கழக ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு வளர்மதி கலையரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்விக் கழக தரம் 11 வகுப்பு மாணவர்களால் எற்பாடு செய்யப்பட்ட விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச இளம்தொழிலதிபர் த.ஜெயந்தன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் த.அப்புத்துரை கிராம அலுவலர் க.முல்லைமாறன் ஆகியோரும் கலந்து கொள்வர். கல்விக்கழக ஆசிரியர்கள் கௌரவிப்புடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### தங்கம்மா சிவானந்தம்



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சிவானந்தம் கடந்த (19.10.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவானந்தத்தின் (இளைப்பாறிய ஊழியர், இலங்கை மின்சாரசபை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் பார்வதிப்பிள்ளை, நாகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாறஞ்சினி (பிரான்ஸ்), ஜெயரஞ்சினி (இத்தாலி), குகேந்திரன் (வர்த்தகர்), சிவகாந்தன் (ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ், சங்கானை) ஆகி யோரின் அன்புத் தாயும் நிமலராஜா (பிரான்ஸ்), ஜெயக்குமார் (இத்தாலி), வனிதா (ஆசிரியை, அராலி சரஸ்வதி ம.வி) ஆகியோரின் அன்பு மாமியாரும் விதுசாந், ஜனுசாந், டினுஷா, பிரசாந், பிரவீனா, சஜிவர்ணா, கபினயா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(C.25973) (16.17.19)



### திருமதி தயாநிதிதேவி சத்தியசீலன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாநிதிதேவி சத்தியசீலன் நேற்று 21.10.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - சரஸ்வதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான நடராசா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியசீலன் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) இன் அன்பு மனைவியும் பங்கயற்செல்வி, ரதிதேவி, கிருபாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர்.
077 1324315

அருளகம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(j 5578) (17.19.20)

## மரண அறிவித்தல்கள்

### நாகப்பன் குருநாதன்

(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)



பிறப்பு 05.04.1924
இறப்பு 19.10.2016

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.17, குமாரசாமி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட நாகப்பன் குருநாதன் கடந்த (19.10. 2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பன்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அமிர்தம்மா வின்பாசமிகு கணவரும் பவானி, Dr.இந்திராணி , பவா னந்தா, Dr. தேவயானி ஆகியோரின் தந்தையும் Dr.கலைச் சந்திரன், விநாயகமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் Dr.அமித்தா, Dr.சிவநேசன், சக்திசிவகாமி, சிவராமன், சிவரூபன் ஆகியோரின் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, வள்ளியம்மை, சத்தியதேவி துரைசிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா தில்லை நாதன், முத்துக்குமாரு மற்றும் ஞானம்மா சோமஸ்கந்தன், குணரத்தினம், மாசிலாமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் அன்னாரின் பூதவுடல் எரியூட்டப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்
பவானந்தா (மகன்)
077 0711485

(ஜெ.5574) (16.17.19)



### திருமதி வரதலெட்சுமி இராசரெத்தினம்

(இராசாத்தி)- நயினாதீவு

அன்னை மடியில் 08.10.1948
அம்பிகை அடியில் 19.10.2016

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலெட்சுமி இராசரெத்தினம் 19.10.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராணபிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னர் - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜரெத்தினத்தின் (சவாரித்தம்பர்) பாசமிகு மனைவியும், பொன்னம்பலம் (பிரான்ஸ்), கேதீஸ்வரி (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்),ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற சிவகடாச்சம் மற்றும் கடம்பன் (அரச உத்தியோகத்தர் - யாழ்.மாவட்ட செயலகம்), வாகீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்த நாயகி(பிரான்ஸ்), கமலக்கண்ணன் (பிரான்ஸ்), சுகந்தினி (பிரான்ஸ்), செந்தில்குமரன், துர்க்காயினி, மயூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரூசன், அட்சயன், சங்கவி, ரிஷிகேசன், சிவாதினி, கர்னிதா, தர்ஷிகன், சாயிசன், சருந்திதா, சாதுரியா, சாருஜன் ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும், காலஞ்சென்ற கமலாட்சி, குணசிங்கம், பரராஜசிங்கம் மற்றும் கனகரெத்தினம், நாகலெட்சுமி, சரசலெட்சுமி, காலஞ்சென்ற சின்னத்துரை, சரவணமுத்து மற்றும் பராசக்தி, காலஞ்சென்ற செல்லம்மா, பூமணி, லீலாவதி மற்றும் நாகலெட்சுமி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி, சந்தானலெட்சுமி, காலஞ்சென்ற நடராசா மற்றும் கோபாலன், காலஞ்சென்ற தங்கமுத்து, சின்னம்மா, சுப்பிரமணியம், மார்க்கண்டு, வீரவாகு, சின்னத்தம்பி, சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நயினாதீவு 06
குடும்பத்தினர்.

021 300 4774

## மரண அறிவித்தல்

### கந்தையா குணபாலசூரியர்



சுண்டுக்குளி விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய கந்தையா குணபாலசூரியர் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பாக்கியரட்ணம் தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தர்மபாலன், ஜெயலக்சுமி (சுண்டுக்குளி), ராஜலக்சுமி ஆகியோரின் சகோதரனும் கௌரி, வித்தியா ஆகியோரின் அருமைத் தந்தையும் செந்தில்குமார், குகேந்திரன் ஆகியோரின் அருமை மாமனாரும் மகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரட்ணம், சண்முகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் கஜாணன், பிரதீப் , ஐதுஷன், மானுசா, ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று கனடாவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஜெயலக்சுமி (சகோதரி)

தொடர்புகளுக்கு
கௌரி செந்தில்குமார் - 0014163915700
வித்தியா குகேந்திரன் - 0019082799173

(ஜெ.5579) (16.17.19)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 18 05 1934



ஆண்டவன் அடியில் 16 10 2016

### தம்பு நவரத்தினம்

(முன்னாள் பணியாளர் பரந்தன், ஊரியான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

யாழ் சுதுமலையைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணி மற்றும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நவரத்தினம் 16.10.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பொன்னம்மா தம்பதிகளின் மகனும் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், கனகமணி (மணி அக்கா) அவர்களின் பாசமிகு கணவரும், சுரேந்திரன் (பாரிஸ்) ஜன்ந்தி (இங்கிலாந்து) ஆகியோரின் அருமைத் தந்தையும், குமுதினி (பாரிஸ்) பிரசாந் (இங்கிலாந்து) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான கண்மணி, நடேசு ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான சண்முகசேகரம்பிள்ளை, தவராசா, மகேஸ்வரி மற்றும் கந்தசாமி (பிரான்ஸ்) சிரோன்மணி ஆகியோரின் மைத்துன்ரும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் புனிதவதி, இரத்தினேஸ்வரி (பாரிஸ்) ஆகியோரின் சகலனும், பிரபாகரன், கருணாகரன், [illegible] ஆகியோரின் சித்தப்பாவும், தர்ஷினி, லதா, செந்தூரன், [illegible] தஷ்கி, தாமரை, காயா ஆகியோரின் மாமனாரும், ஹரி[illegible] அக்ஷிதா, பிரியங், பிரித்திகா, கஜானந், மீரா, [illegible] ராகுல், பவித்திரன், பிரவீவன், அர்ஜூன் ஆகியோரின் [illegible] பேரனும், இரத்தினபதி, கீர்த்திராணி, காலஞ்சென்ற சிவசண்முகசேகரம், ஜெயராணி, ஜெயராஜ், பத்[illegible] இந்திராணி ஆகியோரின் தாய் மாமனும், சண்[illegible] கௌரி, தனு, குஞ்சு, அரியம் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 11.0[illegible] மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.பகல் 1[illegible] மணிக்கு கல்கிசை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
மனைவி, பிள்ளைகள்

தொடர்பு
No.30 ½, வண்டவுற் பிளேஸ்
தெகிவளை

தொ.பே - 0112726626, 0777[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்

### ஜிபை (GeeFi) இணையத்தில் புதிய அறிமுகம்

தற்காலத்திலே இணையப் பாவனைக்காக அதிகளவில் வைபை தொழில்நுட்பத்தையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். தொலைத் தொடர்பாடல் வலையமைப்புச் சேவையை வழங்கிவரும் நிறுவனங்கள் 4ஜி சமிக்ஞையை வைபை ஆக மாற்றும் சாதனங்களை அறிமுகம் செய்துள்ளன.
அந்த வகையிலே 100 வகையான நாடுகளின் ஊடாகப் பயணிக்கும்போது எந்தவொரு வலையமைப்பிலிருந்தும் 4ஜி சமிக்ஞையை வைபை சமிக்ஞையாக மாற்றக்கூடிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஜிபை எனும் இச்சாதனத்தின் ஊடாக அதிகபட்சம் ஒரே தடவையில் 10 சாதனங்களைஒருங்கே இணைத்துக் கொள்ள முடியும்.
இச்சாதனத்தில் 5000 மெகா கேட்ஸ் மின்கலம் இணைக்கப்பட்டுள்ளதுடன், நீண்ட நேரம் செயற்படக்கூடியதாகவும் இருக்கின்றது.
இதேவேளை இச்சாதனத்தைப் பயன்படுத்துவதற்கு ரோமிங் வசதி அவசியம் இல்லைஎன்பதுடன்வரையறையற்ற இணையப்பாவனையை மேற்கொள்ளவும் முடியும்.
தற்போது கிக் ஸ்ராற்றர் தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள இச் சாதனத்தின் விலையானது 110 அமெரிக்க டொலர்கள் ஆகும் என தெரிவிக்கப்படுகின்றது.

### பயனர்களுக்கு புதிய வசதிகள்; பேஸ்புக் நிறுவனம் அறிமுகம்



சமூகவலைத் தளங்களில் முன்னணியாகவுள்ள பேஸ்புக் புதிய விடயங்களை அறிமுகம் செய்து வருகின்றது. அந்த வகையிலே தியேட்டர்களுக்கான ரிக்கெற்றுகளைப் பதிவு செய்தல், உணவுப் பரிமாற்றத்திற்கான தகவல் தரல் போன்ற வசதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.
மேற்படி வசதியானது தற்போது அமெரிக்காவில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
உதாரணமாக உணவு பரிமாற்றத்தில் நாம் ஒரு பீட்சாவை பெற்றுக் கொள்வதற்கு பேஸ்புக் ரெஸ்ரோரண்ட் பக்கத்திற்குச் சென்று ஓடர் என்ற பட்டனை அழுத்தினால் போதும் அதன் செயற்பாடு தொடங்கி விடும்.
இதேபோன்றே சினிமா பார்ப்பதற்கான டிக்கெட் பதிவு, அழகு சாதன நிலையங்களுக்குச் செல்வதற்கான முற்பதிவு போன்றவற்றையும் செய்ய முடியும்.
இவைதவிர பேஸ்புக்கில் உள்ள ரிக்கற் மாஸ்ரர், இவன்ற் பிறைட் பக்கத்தின் மூலமும் நாம் எந்த நிகழ்ச்சிகளுக்குமான டிக்கெற்றுகளை வாங்கக்கூடிய வசதிகள் காணப்படுகின்றது.
மேலும் வாடிக்கையாளர்கள் தங்களின் கேள்விகள், கோரிக்கைகள், கருத்துக்களை இந்த விடயத்தில் கூறலாம் எனவும் பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது.

# தங்க மற்றும் வெள்ளி விருதுகளை வென்றது 'சியெட் களனி ஹோல்டிங்ஸ்'




விற்பனை மற்றும் மேற்பார்வைக்கான தங்க மற்றும் வெள்ளி விருதுகளை சியெட் களனி ஹோல்டிங்ஸின் நிறைவேற்று அதிகாரிகள் இருவர் 2016 தேசிய விற்பனை காங்கிரஸ் விருது வழங்கும் நிகழ்வில் பெற்றுக்கொண்டுள்ளனர். இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் மேற்படி இரண்டு முக்கிய பிரிவுகளில் இந்த விருதுகளை வழங்கியுள்ளது.
இதன்படி சியெட் களனியின் மூத்த விற்பனை நிறைவேற்று அதிகாரி தம்மிக பானக்க வாகனங்கள் பிரிவில் விற்பனை மற்றும் மேற்பார்வைக்கான தங்க விருதையும் பிராந்திய விற்பனை முகாமையாளரான பிரபாத் அமரதுங்க பிராந்திய முகாமையாளர் பிரிவில் இதே பிரிவின் கீழ் வெள்ளி விருதையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.
தங்க விருது வென்ற சியெட்டின் தம்மிக்க பானக்க 13 வருடங்களாக சியெட்டில் கடமையாற்றி வருகின்றார். இவர் குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் விற்பனைப் பகுதிக்குப் பொறுப் பாக உள்ளார். அதேபோன்று பிரபாத் அமரதுங்க சியெட்டில் 15 வருடங்கள் கடமையாற்றி வருகின்றார். காலி, குருணாகல், மாத்தறை, பதுளை, கண்டி மற்றும் கம்பஹா மாவட்டங்களின் விற்பனைப் பகுதிக்கான செயற்பாடுகளைக் கவனித்து வருகின்றார்.
இதுதொடர்பில் கருத்துரைத்த சியெட் களனி முகாமைத்துவப் பணிப்பாளர் விஜய் காம்பீர், "தொழில்சார் அபிவிருத்திக்கு சியெட் ஆகக் கூடுதலான முக்கியத்துவம் அளிக்கின்றது. ஏனெனில் சந்தையில் எமது வளர்ச்சி யில் எமது அதிகாரிகள் மிக முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றனர். அந்த வகையில் எமது குழுவினரின் இந்தச் சாதனை எமக்குப் பெருமை அளிக்கின்றது" – என்றார்.
விற்பனைத் துறையின் நிறைவேற்று அதிகாரிகளையும் விற்பனை சார் தொழில் வாண்மையாளர்களையும் அதி உயர் இடத்தில்வைத்துக் கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த முன்னிலையாளர்கள், விற்பனை நிறைவேற்று அதிகாரிகள், ஆள்புல முகாமையாளர்கள் என உணவு அழகு சாதனம் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள், நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகள், காப்புறுதி, கூட்டாண்மை விற்பனை, தொலைத்தொடர்பு, பயண மற்றும் சுற்றுலாப் பிரிவு, நவநாகரிகம் மற்றும் ஆடை அணி கலன்கள், நுகர்வோர் பொருள்கள், மதுபானம் மற்றும் புகையிலைப் பிரிவு, கைத்தொழில், சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், ஊடகம் மற்றும் நவீன சில்லறை வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் தங்கம் வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்படு கின்றன.
இந்த வகைப்படுத்தல்களினுள் வாகனப் பிரிவு இவ் வாண்டு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி – 2)

வணிகம்

# சிங்கர் ஊவா உதானய - 2016 ஊக்குவிப்பு நிகழ்வு பண்டாரவளையில்

நீடித்து உழைக்கும் நுகர்வோர் சாதனங்களின் விற்பனையில் முன்னணியில் உள்ள நிறுவனமான சிங்கர் சிறிலங்கா பீ.எல்.சி, தனது சிங்கர் ஊவா உதானய–2016 என்ற பரப்புரையில் மூலமான ஊக்குவிப்பு நிகழ்வுகள் பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் இம்மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை மு.ப 9.30 தொடக்கம் இரவு 10.00 மணி வரை இடம்பெறவுள்ளன.
இதன்போது சிங்கர் சிறிலங்கா நிறுவனத்தால் உள்ளூரில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்ற 40 வரையான வர்த்தக நாமங்களின் கீழான உலகத் தரம் வாய்ந்த உற்பத்திகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. குளிர் சாதனப் பெட்டிகள், தொலைக் காட்சிப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், சமையலறைச் சாதனங்கள் முதல் மொபைல் தொலைபேசிகள், மற்றும் மடிக்கணினிகள் போன்ற தனிப்பட்ட பாவனைக்குரித்தான சாதனங்கள் 50 வீதம் வரையான விசேட விலைத் தள்ளுபடிகளின் கீழ் விற்பனை செய்யப்படவுள்ளன.




மேலும் புதிய உற்பத்திகள் தொடர்பான விளக்கங்கள், தினசரி அதிஷ்ட இலாப குலுக்கல் சீட்டிழுப்புக்கள், பரிசுகள் மற்றும் முழுக் குடும்பமும் பங்குபற்றி மகிழக் கூடிய பல்வேறுபட்ட செயற்பாடுகளும் இடம்பெறவுள்ளன. இவற்றை விட, சிறுவர்களுக்கான செயற்பாடுகள், போட்டிகள், சமையல் விளக்கங்கள், தையல் கண்காட்சி, தையல் ஊசி ஓவியப் படைப்புக்கள் மற்றும் மாபெரும் இசை நிகழ்வு எனப் பொழுதுபோக்கு அம்சங்கள் நிரம்பிய வேறு பல செயற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
சிங்கர் நிறுவனமானது தொடர்ந்து 10 ஆண்டுகளாக வருடத்தின் மிகச் சிறந்த மக்கள் வர்த்தகநாமம் என்ற விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த விற்பனை மற்றும் வர்த்தகத்துறைப் பணிப்பாளரான மகேஷ் விஜயவர்த்தன, "இலங்கையில் அனைத்து இல்லங்களிலும் முக்கிய பங்கை வகித்து வருகின்ற சிங்கர், ஊவா உதானய மூலமாக பண்டாரவளை மற்றும் அதனை அண்மித்துள்ள பிரதேசங்களில் வசித்து வருகின்ற எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியை வழங்கும் வகையில், புத்தம்புதிய உற்பத்தி அனுபவங்கள், தள்ளுபடிகள் மற்றும் மேலும் பல விசேட சலுகைகளை வழங்கவுள்ளது. வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறைக் கேற்ப அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த விசேட நிகழ்வை நடத்தத் தீர்மானித்துள்ளோம். பண்டாரவளையில் வசிப்பவர்கள் சிங்கர் ஊவா உதானய – 2016 நிகழ்வைத் தவறாது பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் எவ்விதமான சந்தேகங்களும் கிடையாது" – என்றார்.

# காலாண்டில் அதிக வருமானம் சம்பாதித்த யாகூ

நடப்பாண்டின் கடந்த மூன்று மாதங்களில், இரண்டு மடங்குக்கும் அதிகமான இலாபத்தை யாகூ நிறுவனம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இதன்படி செப்டெம்பர் 30ஆம் திகதி வரையான காலாண்டிலே யாகூவின் வருமானமானது 163 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.
இதேவேளை இறுதிக் காலாண்டுக்குரித்தான வருமானமும், 6.5 சதவீதத்தால் அதிகரித்து, 1.3 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்படுகிறது.
கடந்த காலத்திலே குறித்த சில நிறுவனங்களுக்கான தனது பிரதான வியாபாரப் பங்குகளை விற்கும் யாகூவின் ஒப்பந்தமானது பெரிய தரவு மீறல்களால் நிச்சயமற்ற தன்மையை அடைந்திருந்தது. இந்த நிலையிலே இத்தகைய இலாபத்தை யாகூ நிறுவனம் பெற்றுக் கொண்டுள்ளமை ஆச்சரியத்தை ஊட்டும் செயல்நிலையென பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை...

சென்றுகொண்டிருந்த அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று அறியவந்தது. எனினும் நேற்று முன்னிரவு வரை இந்த அவலச் சாவுகளுக்கான காரணம் என்ன என்பது குறித்த உத்தியோகபூர்வமான அறிக்கைகள் எவையும் வெளியிடப்படவில்லை. சம்பவத்தை அடுத்து யாழ். குடாநாட்டில் பரபரப்பும் பதற்றமும் தோன்றியுள்ளன.

யாழ். நகரில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் காங்கேசன்துறை வீதியில் உள்ள கொக்குவில், குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையாக நள்ளிரவு நேரம் சம்பவம் இடம்பெற்றது. நள்ளிரவு 11.30 மணியளவில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களைத் தாம் கேட்டனர் என்று அயலவர்கள் தெரிவித்தனர். இரவு 9 மணியளவில் கொக்குவில் சந்திப் பகுதியில் பொலிஸார் காவல் பணியில் ஈடுபட்டிருந்ததைத் தாம் கண்டனர் என்றும் சாட்சிகள் சிலர் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவர்கள் இருவரும் துப்பாக்கியால் சுடப்பட்டதிலேயே உயிரிழந்தனர் என்று சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார் என மாணவன் ஒருவரின் தந்தை நேற்று மாலை 6.25 மணியளவில் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். மாணவர்களின் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் நேரில் பார்வையிட்ட பின்னர் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

காலையில் அந்தப் பகுதியைச் சுற்றிப் பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர். 9 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் விசாரணைகளை நடத்தினர். பொலிஸ் தடயவியல் வல்லுநர்கள் தடயங்களைச் சேகரித்தனர். அந்த நேரத்தில் மழையும் தூறிக்கொண்டிருந்தது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த நடராசா கஜன், யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த பவுன்ராஜ் சுலக்சன் ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்தனர். இவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை மற்றும் அரசறிவியல் துறைகளில் கற்கும் 2 ஆம் 3 ஆம் வருட மாணவர்களாவர்.

நள்ளிரவு 12.30 மணியளவில் சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவனும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதே உயிரிழந்த மாணவனின் சடலமும் ஒப்படைக்கப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. படுகாமயடைந்த மாணவனும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. உத்தியோகபூர்வமான எந்தத் தகவலையும் தர வைத்திய சாலை நிர்வாகம் மறுத்துவிட்டது.

நேற்று மாலை 6 மணியளவில் நீதிவான் முன்னிலையில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் சார்பில் ஒருவரும், பல்கலைக்கழக மாணவர் சார்பில் ஒருவர், மாணவர்களின் தந்தையர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு மாணவர்களின் சடலங்கள் காட்டப்பட்டன. அதன் பின்னர் வெளியே வந்த மாணவன் சுலக்சனின் தந்தை அது குறித்துச் செய்தியாளர்களுக்குத் தெரிவித்ததாவது:

இந்த உயிரிழப்புக்கள் துப்பாக்கிச் சூட்டால் நிகழ்ந்தவை என்றே தான் அறிக்கையிட்டுள்ளார் என்று சட்ட வைத்திய அதிகாரி எம்மிடம் தெரிவித்தார். சுலக்சனின் ஒரு பக்கக் கழுத்து மற்றும் ஒரு முழங்காலுக்குக் கீழான பகுதியில் காயங்கள் காணப்படுகின்றன என்றும் அவை கீழே விழுந்ததால் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். சுலக்சனின் வயிற்றிலும் தோள்மூட்டிலும் இரு காயங்கள் காணப்படுகின்றன. அது அவரது வயிற்றுப் பக்கத்தால் புகுந்த துப்பாக்கிச் சன்னம் தோள்மூட்டுப் பக்கமாக வெளியேறியதால் ஏற்பட்டதாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

கயனின் உடலில் எந்தக் காயங்களும் காணப்படவில்லை என்றாலும் அவரது தலை பிரிந்திருக்கிறது என்றும் அதற்கான காரணத்தை உடனடியாகச் சொல்ல முடியாது என்றபோதும் இது அவர் கீழே விழுந்தாலும் ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும் கூறிய சட்ட வைத்திய அதிகாரி, எப்படியிருந்தாலும் இருவரது உயிரிழப்புக்கும் துப்பாக்கிச் சூட்டே காரணம் என்று தனது அறிக்கையில் தான் குறிப்பிட்டிருக்கிறார் என்றும் தெரிவித்தார் - இவ்வாறு பவுன்ராஜ் கூறினார்.

இளைஞர்கள் இருவரும் விபத்தில் உயிரிழந்திருக்கலாம் என்று முன்னர் கூறப்பட்டபோதும் அதில் பலத்த சந்தேகம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னரே அவர்களில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்ற விடயம் தெரியவந்துள்ளதது.

உயிரிழந்த மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு 10.40 இற்குப் பின்னர் யாழ். நகரில் இருந்து கந்தரோடை நோக்கிப் பயணித்த வேளையில் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று அவர்களது நண்பர்கள் சந்தேகிக்கின்றனர். சுலக்சனே மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றார் என்றும் கூறப்படுகிறது. எனினும் எவருக்கும் உறுதியான தகவல்கள் தெரியவில்லை.

சம்பவம் குறித்து பொலிஸ் உயர்மட்ட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றபோதும் ஊடகங்களுக்கு எதுவித தகவல்களையும் பொலிஸார் வழங்கவில்லை. எனினும் அரச தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில், சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதாகவும் உண்மை கண்டறியப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள போதும், சம்பவத்தின் உண்மை விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் உள்ள கடைகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களில் பதிவான காணொலி நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதில் நேற்றுமுன்தினமிரவு 11.45 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் சில மாணவர்கள் செல்வது காட்சிகளாகப் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சென்ற 2 நிமிடங்களின் பின்னர் அந்த இடத்தில் மழை அங்கி அணிந்த பொலிஸ் சீருடையில் சிலர் நகர்ந்து செல்வதும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு சம்பவம் இடம்பெற்றபோதும் நேற்று மதியமே அந்த இடத்திலிருந்து மோட்டார் சைக்கிள் அகற்றப்பட்டது. எனினும் காலையிலிருந்தே அந்த இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டன.

கிளிநொச்சியைச் சேர்ந்த கஜனுக்கு ஏற்கனவே ஒரு கால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை மற்றும் பொலிஸார் மீதான குற்றச்சாட்டுக்களை அடுத்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய வளாகப் பகுதியில் நேற்று மாலை பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கொக்குவில், பிரம்படிப் பகுதியில் உள்ள வீட்டின் மீது கடந்த 6ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் ஓட்டோவில் சென்ற இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். எனினும் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. இந்தச் துப்பாக்கிச் சூட்டைப் பொலிஸாரே மேற்கொண்டிருக்க வேண்டும் என்று பலத்த சந்தேகம் வெளியிடப்பட்டது. (உ-வ-4,101,106)

## மாணவர்கள்

எடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

இந்தச் செய்தி எமக்குப் பேரதிர்ச்சியையும், வேதனையையும் தந்திருக்கிறது. துப்பாக்கிச் சூட்டினால் இந்தச் சாவு நிகழ்ந்திருக்கிறது என்றே அறிகின்றோம். இன்னும் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை வரவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவர்களுடனும், அங்கு குவிந்திருந்த மாணவரிடமும் பேசி விசாரித்திருந்தேன். கொலைக்குக் காரணமானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நடவடிக்கை எடுப்போம் என்று வாக்குறுதி வழங்கினேன். மாணவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டிய ஏதுக்கள் ஏதுமில்லை.

பொலிஸாரின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய செயல்களை வன்மையாக அனைவரும் கண்டிக்க வேண்டும். எதிர்க்கவேண்டும். பல்கலை மாணவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும். மாணவர்கள் கொலைக்கு நம்பகத்தன்மை வாய்ந்த சட்டபூர்வமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அனுப்பி வைத்த கண்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**சரவணபவன் எம்.பி**

யாழ். பல்கலை மாணவர் மீதான துப்பாக்கிச் சூட்டின் பின்னணி முழுமையாக ஆராயப்படவேண்டும். நடைபெற்ற சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றேன். உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரையும், ஜனாதிபதி மற்றும் பிரதமரையும் கோருகின்றேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களின் உயிரிழப்புத் தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாணவர்கள் உந்துருளியில் சென்றபோது விபத்தில் உயிரிழந்தாக முதலில் தகவல்கள் வெளிவந்தன. பின்பு நடத்தப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் ஒருவர் சுடப்பட்டதால் இறந்ததாகவும் அதனால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக மற்றையவர் இறந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் உந்துருளியில் சென்றபோது பொலிஸார் மறித்தாகவும் அவர்கள் நிற்காமல் சென்ற காரணத்தினால் சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மறிக்கும்போது அவர்கள் செல்லும் வாகனத்தின் இலக்கத்தை அடையாளம் கண்டு பின்பு அவர்களைக் கைது செய்வது சிரமமான காரியம் அல்ல. மேலும் பல இடங்களிலும் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களை அடையாளம் காண்பதும் இயலுமான காரியமே. அப்படியான நிலையில் அவர்கள் சுடப்பட்டிருக்கின்றார்கள் என்றால் அது மக்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வாகனம் மறிக்கும்போது நிற்காமல் சென்றால் அதற்கு எதிராகத் தவிர்க்க முடியாத உயர்பட்ச நடவடிக்கையாக ரயருக்குச் சுடுவதே வழமையான விடயமாகவுள்ளது. ஆனால் இங்கு மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது முக்கியமாக ஒரு முறைமீறிய நடவடிக்கை என்றே கருதவேண்டியுள்ளது.

இது தொடர்பாக புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை நாம் வரவேற்கும் வேளையில் இது தொடர்பான விசாரணைகள் நேர்மையாகவும் நியாயபூர்வமாகவும் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இராஜங்க அமைச்சர் விஜயகலா**

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டையடுத்து பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தமை பெரும் கவலையளிக்கும் விடயமாகும். பொலிஸாரின் அத்துமீறிய இத்தகைய செயற்பாடு குறித்து உரிய விசாரணை நடத்தி நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சருமான திருமதி விஜய கலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

மோட்டார் சைக்கிளில் பல்கலைக்கழக மாணவர்கள் பயணித்த போது பொலிஸார் தமது அத்துமீறிய அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளமையினாலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவர்களைப் பொலிஸார் மறித்தபோது அவர்கள் நிறுத்தாமல் சென்றிருந்தால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டிய அவசியமில்லை. அவர்கள் யாராகவிருந்தாலும் துரத்திச் சென்று அவர்களைப் பிடித்திருக்கலாம். அல்லது எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து அவர்களை நிறுத்த முயற்சித்திருக்கலாம். இதனைவிடுத்து அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளமை ஏற்றுக்கொள்ளத்தக்க செயற்பாடல்ல. இத்தகைய செயற்பாடானது பொலிஸாரின் அத்துமீறிய செயலை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த விடயத்தில் உரிய விசாரணை நடத்தப்பட்டு குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும். இரண்டு அப்பாவி உயிர்கள் இழக்கப்பட்ட இந்த விடயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். இந்த விடயம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு நான் கொண்டுவந்ததுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (வ-த-5)

## குற்றவாளிகள்...

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு சென்றார்.

திருகோணமலையில் நேற்ற நடைபெற்ற சுற்றாடல் தின நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்து கொண்டிருந்தனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மாணவர்கள் உயிரிழந்த விடயம் உடனடியாகவே ஜனாதிபதியின் கவனத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரினால் கொண்டு செல்லப்பட்டது. இதன்போது ஜனாதிபதி, சிறப்பு விசாரணைப் பிரிவினர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும், விசாரணை முன்னெடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவரிடம் உறுதியளித்துள்ளார் என, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில், இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக் கொள்வதாகவும், சம்பவம் தொடர்பில் இரா.சம்பந்தன், பொலிஸ்மா அதிபரோடும் தொடர்பு கொண்டு தனது கண்டனத்தையும் கவலையையும் தெரிவித்ததோடு துரித கதியில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## கடற்படையினரை...

விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

முத்தரிப்புத்துறைக் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றினுள் நுழைய முற்பட்ட நபர் ஒருவரைத் துரத்திப் பிடித்த கிராம மக்கள் அவரை தாக்கினர். அந்த நபர் கடற் படைச் சிப்பாய் எனத் தெரிய வந்தது. இந்த நிலையில் கடற்படை யினருக்கும் கிராம மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. தாக்கப்பட்ட கடற்படைச் சிப்பாயை மீட்க சிவில் உடையில் சென்ற மற்றுமொரு கடற்படைச் சிப்பாயும் தாக்கப்பட்டார். தாக்குதல்களுக்கு உள்ளான இரு கடற்படைச் சிப்பாய்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்றது.

இந்த நிலையில் தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் என முத்தரிப்புத்துறைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் பெயர் விவரங்கள் கடற்படையினரினால் பொலிஸாருக்கு வழங்கப்பட்டன. இதனடிப்படையில் சிலாவத்துறைப் பொலிஸார் 6 பேரைக் கைது செய்து நேற்று மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

6 சந்தேகநபர்களையும் எதிர் வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் கட்டளையிட்டார். கைதானவர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட போது அந்தக் கிராம மக்கள் நீதிமன்ற வளாகத்தை சூழ்ந்திருந்தனர். (த-21-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை லட்சம் கோடி ரூபா ஒரு வருடத்தில் மட்டும் கடன்

## கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஒக். 22
மைத்திரி - ரணில் அரசு ஒரு வருடத்துக்குள் ஒன்றரை லட்சம் கோடி ரூபாவைக் கடனாகப் பெற்றுச் செலவு செய்துள்ளது.
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
மகிந்த அரசு கடும் போருக்கு மத்தியிலும் அபிவிருத்திகளைச் செய்தது. 2009 இல் போர் முடிந்த போது இந்த நாடு பெற்ற வெளிநாட்டுக் கடன் 4 இலட்சத்து 16 ஆயிரத்து 100 கோடி ரூபாவாக இருந்தது.
2014 ஆம் ஆண்டு இறுதியில் அதாவது, மகிந்தவின் ஆட்சி கவிழும்போது, 7 இலட்சத்து 39 ஆயிரத்து 100 கோடியாக அதிகரித்தது. போரின் பின் 3 இலட் சத்து 23 ஆயிரம் கோடி ரூபாவைத்தான் நாம் கடனாகப் பெற்றுள்ளோம்.
அம்பாந்தோட்டை துறைமுகம், நுரைச்சோலை அனல் மின் நிலையம், கொழும்பு - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம், மத்தல விமான நிலையம், புதிய பாலங்கள் நிர்மாணிப்பு, நெடுஞ் சாலைகள் நிர்மாணிப்பு மற் றும் வடக்கு வீடமைப்புத் திட்டம் என்று இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்கள் 2014 வரைஎம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மைத்திரி-ரணில் அரசு 2015 முதல் 2016 வரை யான ஒரு வருடத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளது. இந்த நிதியைக் கொண்டு இந்த அரசு என்ன செய்து இருக்கின்றது?
நாங்கள் ஒரு வருடத்துக்கு 33 ஆயிரத்து 800 கோடி ரூபா என்ற அடிப்படையில் தான் செலவு செய்துள் ளோம். ஆனால், இந்த அரசு வருடத்துக்கு ஒரு இலட் சத்து 50 ஆயிரம் கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளது.
இந்த நிதியைக் கொண்டு செய்துள்ள அபிவிருத்தி என்னவென்று இந்த அரசால் சொல்ல முடியுமா? மகிந்த அரசு செய்த அபி விருத்திபோல் இந்த அர சால் செய்ய முடிந்ததா ? அப்படியென்றால் இந்தப் பணத்துக்கு என்ன நடந்தது ?' -என்று கேள்வி எழுப்பினார். (த-5)

## பியசேனவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக் 22
தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் லங்க ஜயரத்ன உத்தர விட்டுள்ளார். இந்த வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளார். பிரதமர் அலுவலகத் துக்குச் சொந்தமான வாகனங் களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன, கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டார் என்பது குறிப் பிடத்தக்கது. (கு)




# தருமபுரத்தில் பிடிபட்டது கசிப்பு உற்பத்தி நிலையம்



யாழ்ப்பாணம், ஒக்.22
கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகை இடப்பட்டு, அங்கிருந்த கசிப்பு மற்றும் உற்பத்திப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
நேற்றுக் கிளிநொச்சி மதுவரித்திணைக்கள நிலையப் பொறுப்பதிகாரி இ.பிரதாபன் தலைமையில் சோதனை நடவடிக்கைக்காகச் சென்ற குழுவினர் தருமபுரம், குமாரசாமிபுரம் பகுதியில் இருந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.
இதன்போது 5 லீற்றர் கசிப்பு கைப் பற்றப்பட்டது.
அத்தோடு கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் கைப் பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய் யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் தற்போது பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.
எதிர்வரும் வரும் 27 ஆம் திகதி நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட வுள்ளது எனக் கிளிநொச்சி மாவட்ட மது வரித் திணைக் களப் பொறுப்பதிகாரி இ.பிரதாபன் தெரி வித்தார். (கு-ரி3)

BLUE SKYY AGENCY

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணினி இயக்குநர், கணக்காளர் தேவை. (பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்:**

**கணக்காளர்(உதவியாளர்)**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கணினி இயக்குநர்**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- MS Office நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
- MS Excel முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாளஅட்டை போட்டோப்பிரதி, சான்றிதழ்களின் போட் டோப்பிரதி ஆகியவற்றை இணைத்து 31.10.2016 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல - 5516 (J 5571) (14,17,18)
மே/பா உதயன்,
361.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பகிரங்க ஏல விற்பனை

**மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்**

கீழே குறிப்பிடப்பட்ட பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத வாகனங்களும், வள்ளங்களும், இஞ்சினும் எதிர்வரும் 28.10. 2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் நீதி மன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

| பொருள் விவரம் | எண்ணிக்கை |
| --- | --- |
| 01. சிறிய வாகனம் - மகேந்திரா மக்சிமோ | 01 |
| 02. முச்சக்கரவண்டி - பஜாஜ் | 01 |
| 03. எப்.ஆர்.பி.போட் | 01 |
| 04. டீசல் இஞ்சின் (போட்டுக்குரியது) | 01 |
| 05. எப்.ஆர்.பி.வள்ளம் | 01 |

**நிபந்தனைகள்**

01. ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன் னர் மேற்குறிப்பிட்ட பொருள்களை யாழ்ப்பாணம் மேல்நீதி மன்றப் பதிவாளர் அவர்களின் அனுமதியுடன் பொது மக்கள் பார்வையிட முடியும்.
02. ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தம்முடன் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
03. ஏலத்தில் விற்கப்படும் மேற்படி பொருள்களை ஏலத்தில் பெறுபவர் உடனடியாகக் காசு மூலம் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து பொருள்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.
04. காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**மா.இளஞ்செழியன்**
**மேல் நீதிமன்ற நீதிபதி,**
**மேல்நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C/25973) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பிட்டி மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

புத்தளம், ஒக். 22

புத்தளம் பாலாவி கற்பிட்டி மீனவர்கள் மேற் கொண்ட ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸார் விசேட அதிரடிப் படையினரை வரவழைத்தனர்.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரி நேற்று முன்தினம் முதல் கற்பிட்டி மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வீதிகளை மறித்து மீனவர்கள் மேற்கொண்ட போராட்டத்தினால் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டதாகப் புத்தளம் பொலிஸார் கூறினர்.

ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட இடத்துக்குச் சிலர் வருகை தந்ததையடுத்து மோதல் ஏற்பட்ட நிலையில் அங்கு பதற்றமான சூழலும் ஏற்பட்டது.

இதனால் குறித்த வீதியூடாகப் பயணித்த வாகனங்கள் சில சேதமடைந்த நிலையில் பதற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட அதிரடிப் படையினர் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். (கு)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### 5 பொலிஸார்...

தலைமையில் அனுப்பப்பட்ட குழுவே விசாரணையின் பின்னர் இந்த 5 பேரையும் கைது செய்துள்ளது என்று அறிய வந்தது.

அதனைவிடக் கொழும்பிலிருந்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு பொலிஸ் குழு ஒன்றும் இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணை செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் உயிரிழந்த சம்பவத்தையடுத்து நேற்றுமுன்தினமிரவு இரவு வீதிக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அனைவரும் காலையிலேயே பிரதிப் பொலிஸ் மா அதிபரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பொலிஸ் உப பரிசோதகர் சரத்திச, பொலிஸ் சார்ஜன்ட் ஜெயவர்த்தன, பொலிஸ் கொஸ்தாபல்களான சந்தன, லங்காமன், நவரத்தின ஆகியோரே கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்
(உ-4,5,101,106)

### ராமேஸ்வரத்தில்...

பெருந்தொகையான வயகரா மாத்திரைகள் மீட்கப்பட்டிருந்தன. இவ்வாறான நிலையிலேயே, வடக்குக்குக் கடத்தப்பட இருந்த பெருந்தொகையான வயகரா மாத்திரை மண்டபம் பகுதியில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

இராமேஸ்வரம் அருகே கடல் வழியாக இலங்கைக்குப் போதைப் பொருள்கள் கடத்தப்பட உள்ளதாகப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து இராமநாதபுரம் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் மணிவண்ணன் உத்தரவின் பேரில் சிறப்பு பிரிவினர் இராமநாதபுரம் முதல் இராமேஸ்வரம் வரையிலான கடலோரப் பகுதிகளில் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் மண்டபம் அருகே இராமேஸ்வரம் நோக்கி வந்த வாகனத்தை மடக்கிப்பிடித்தனர். மண்டபம்பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 2 லட்சத்து 250 போதை மாத்திரைகள் மற்றும் வயகரா மாத்திரைகளையும் கடத்தலுக்குப் பயன்படுத்தி வாகனத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். கடத்தலுக்கு உடந்தையாகச் செயற்பட்ட சந்தேகத்தில் மூவரையும் கைது செய்தனர்.

முதற் கட்ட விசாரணையில், சென்னையிலிருந்து ராமேஸ்வரம் அருகே தனுஸ்கோடி அரிச்சல் முனைக்கடல் பகுதி வழியாகப் படகு மூலம் அவற்றை இலங்கைக்குக் கடத்திச் செல்ல முயன்றதாகக் கைது செய்யப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.
(த-5)

### 'பேய்பட்ஜெட்'...

அமையும்' என்று அரசு பதிலடி கொடுத்துள்ளது.

2017 ஆம் நிதியாண்டுக்கான தேசிய அரசின் வரவு - செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு முதலாம் வாசிப்புக்கென நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் அரசு செலவினங்களும், அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டைவிட, கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கு நிதி குறைக்கப்பட்டுள்ளது.

இதை மகிந்த அணி கடுமையாகச் சாடியுள்ளது. நவம்பர் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் பட்ஜெட் மக்களுக்குப் பாதகமாகவே அமையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கல்விக்கு 6 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படும் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு, பெருமளவு நிதியைக் குறைத்துள்ளது. இதன் மூலம் அதன் நோக்கம் என்னவென்று தெளிவாகின்றது. மக்கள் எதிர்பார்க்குமளவு நிவாரண முன்மொழிவுகள் இடம்பெறாது. அதாவது, மக்களை மிரட்டும் வகையில் பேய் பாதீடாகவே இது அமையும்' என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த வருடமும் நிவாரண அறிவிப்புகள் வெளியாகின. அவை நிறைவேற்றப்பட்டனவா? எனவே, இம்முறையும் விளையாட்டுகளைப் பார்க்கலாம் என்று மகிந்த ராஜபக்ச சாடியுள்ளார்.

எனினும், எதிரணியின் குற்றச்சாட்டுக்களை அரச தரப்பு நிராகரித்துள்ளது.

மக்களின் நாடி அறிந்தே பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. நல்லாட்சியானது மக்களுக்கானது. எனவே, நிவாரணங்கள் நிச்சயம் வழங்கப்படும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (த-5)

### வைத்தியசாலையில்...

யில் குவிந்திருந்த னர்.

மாணவர்கள் மத்தியில் கவலையும் பீதியும் காணப்பட்டது. அரசியல் களநிலவரங்களும் பதற்றமடைந்திருக்கும் நிலையில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றமை எல்லோரையும் பதற்றத்துக் குள்ளாக்கியிருந்தது.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடத்தப்பட்ட அரசியல் ஊர்வலத்திலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர். இந்த நிலையில் இரு மாணவர்கள் சுடப்பட்டனர் என்ற செய்தி பல்வேறு கேள்விகளையும் எழுப்பியது. எனினும் மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் அத்தகைய அரசியல் காரணங்கள் எவையும் இருப்பதற்கான அறிகுறிகள் நேற்றிரவு வரையில் அறியப்படவில்லை.

மாணவர்களின் உயிரிழப்பால் பல்கலைக்கழகம் நேற்றுச் சோபையிழந்து காணப்பட்டது. இந்தச் சூட்டுச் சம்பவமே நேற்று அனைத்து இடங்களிலும் பேசு பொருளாக இருந்தது. (உ-4)


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி பாஸ்கரலிங்கம்



யாழ்.கரவெட்டி கரணவாய் மத்தி, சாளம்பனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பாஸ்கரலிங்கம் 18.10.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா அம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னையா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாஸ்கரலிங்கம் (முன்னாள் தபாலதிபர் - வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், சுகந்தி (சுவிஸ்), உஷாநந்தினி (சுவிஸ்), சுரேஸ்குமார் (மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு), பிரதீப்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான முருகேசு (பட்டயக் கணக்காளர்), வேலுப்பிள்ளை (பொறியியலாளர்), கனகம்மா மற்றும் விக்கினேஸ்வரன் (முன்னாள் ஒப்பு நோக்குநர் - கல்வித்திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜ்குமார் (சுவிஸ்), பத்மநாதன் (சுவிஸ்), தர்ஷிகா, கிருத்திகா ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரிந்தாபன் (சுவிஸ்), ஷர்மிதா (சுவிஸ்), அனிஷ்கா(சுவிஸ்), அபிநயா (சுவிஸ்), அனோஜன் (சுவிஸ்), அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று எள்ளங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீட்டு முகவரி:**
**சாளம்பன்,**
**கரணவாய் மத்தி,**
**கரவெட்டி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**இலங்கை**
**தொலைபேசி + 942 1226 3051**
**செல்லிடப்பேசி + 947 7987 6573**

(ஜே.5567) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபம் ஏற்றுகிறார் ஹாட்லியின் வீரர்

யாழ்ப்பாணம், ஒக். 22

சேர். ஜோன்காபற் கனிஷ்ட பிரிவினருக்கான தடகளத் தொடர்எம்பிலிப்பிட்டியபொது விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. ஒலிம்பிக் தீபத்தை ஏற்றும் வாய்ப்பு ஹாட்லிக் கல்லூரியின் வீரருக்குக் கிடைத்தது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பாலச்சந்திரன் ஆனந்த் என்ற வீரரே அவ்வாறு ஒலிம்பிக் தீபத்தை ஏற்றவுள்ளார். இவர் கடந்த வருடம் நடை பெற்ற சேர். ஜோன்காபற் கனிஷ்ட தடகளத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் 45.91 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப்பதக்கத்தையும் சிறந்த மெய்வல்லுநர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார். இதனையடுத்தே அவருக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ம-(422)





# மீள்பரிசீலனை முறையை ஏற்றது இந்திய கிரிக்கெட்

நடுவரின் தீர்ப்பை மீள்பரிசீலனை செய்து பார்க்கும் முறையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்பதாக அறிவித்தது.

நடுவரின் தீர்ப்புக்கள் துல்லியத்தன்மையுள்ளன என்று சொல்லிவிட முடியாது. இதனால் அவர்களின் முடிவையும் திரும்பப் பரிசோதனை செய்து பார்க்க பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் டி.ஆர்.எஸ். முறை அறிமுகம் செய்யப்பட்டது. பல நாடுகள் அதனை ஏற்றுக் கொண்ட போதிலும், இந்தியா ஏற்கவில்லை. எனவே இந்தியா விளையாடும் இருதரப்புத் தொடரில், அந்த முறை நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. டோனி, சச்சின் போன்ற அனுபவ வீரர்கள் இந்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அந்த முறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் தற்போதைய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி டி.ஆர்.எஸ். அந்த முறையை ஏற்பதற்கு ஆதரவு தெரிவித்தார். இதனால் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இங்கிலாந்து - இந்தியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் நடுவரின் முறையை மீண்டும் பரிசீலனை செய்து பார்க்கும் முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆலோசித்து வந்தது. இந்த நிலையில் குறித்த முறையைத் தாமும் ஏற்றுக்கொள்வதாக அந்தச் சபை நேற்று அறிவித்தது. (ம)

## இந்தியா – ஆஸி. டெஸ்ட்; திகதிகள் அறிவிக்கப்பட்டன

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான திகதிகள் நேற்று அறிவிக்கப்பட்டன.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடத்த உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் தொடருக்கான திகதிகள் அறிவிக்கப்படாமலிருந்தது. இந்த நிலையில் தொடருக்கான திகதிகள் நேற்று அறிவிக்கப்பட்டன. இதன்படி 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடர் நடைபெறவுள்ளது. முதல் டெஸ்ட் பெப்ரவரி 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை புனேயிலும், இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் மார்ச் 4ஆம் திகதி தொடக்கம், 8ஆம் திகதி வரை பெங்களூரிலும், மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை ராஞ்சியிலும், நான்காவது டெஸ்ட் ஆட்டம் 25ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை தர்மசாலாவிலும் நடைபெறவுள்ளன.

இமாச்சலப் பிரதேசத்தில் அமைந்துள்ள உலகின் மிக அழகான கிரிக்கெட் மைதானமான தர்மசாலாவில் இதுவரை டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெறவில்லை. (ம)



## சிந்து முன்னேற்றம்

டென்மார்க் பூப்பந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார் இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனையான பி.வி.சிந்து.


ஓடென்ஸ் நகரில் தொடர் நடைபெற்று வருகிறது. சிந்து தனது முதற் சுற்று ஆட்டத்தில் சீனாவின் ஹீபிங்யோவை எதிர்கொண்டார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 21:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தார் சிந்து. இரண்டாவது செற்றையும் அவர் 21:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதையடுத்து 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)



## பாகிஸ்தான் பலமான ஆட்டம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 304-4 என்று பலமான நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான், முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. கடந்த ஆட்டத்தில் முச்சதம் விளாசிய அசார் அலி இந்த ஆட்டத்தில் ஓர் ஓட்டத்தையேனும் பதிவுசெய்யவில்லை. அஸ்லாமும் பிஸ்கூவிடம் போல்ட் ஆனார். ஆரம்ப வீரர்கள் இருவரும் சிறந்த அடித்தளத்தை வழங்காத பதற்றத்தை படிப்படியாக இல்லாமல் செய்தது சபிக், யுனிஸ் கான் இணை. இணைப்பாட்டமாக 87 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சபிக். சதம் கடந்தார் யுனிஸ்கான். மிஸ்பாவும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த இணை தனக்குள் இணைப்பாட்டமாக 175 ஓட்டங்களைப் பகிர்ந்தது. 127 ஓட்டங்களுடன் யுனிஸ்கான் ஆட்டமிழக்க பாகிஸ்தான் 304-4. யுனிஸ்கானின் ஆட்டமிழப்புடன் நாளும் முடிவுக்கு வந்தது. 90 ஓட்டங்களுடன் மிஸ்பா களத்தில் உள்ளார். (ம)





## சமியின் தலைமைத்துவம் அபாரம் என்கிறார் அப்ரிடி

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் தலைவரான சமியின் தலைமைத்துவம் அற்புதமானது என்று பாராட்டியுள்ளார் பாகிஸ்தானின் முன்னாள் தலைவரான அப்ரிடி.

ஐ.பி.எல். தொடரைப் போன்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் ரி-20 தொடரை நடத்துகின்றது. அப்ரிடியும், சமியும் பெசாவர் அணியில் இடம் பிடித்திருந்தனர். கடந்த தொடரில் பெசாவர் அணியின் தலைவராக அப்ரிடி செயற்பட்டார். இஸ்லாமாபாத்திடம் அந்த அணி தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது. அடுத்த வருடத்துக்கான தொடர் தொடர்பான ஏலம் அண்மையில் நடைபெற்றது. இந்தத் தொடரில் பெசாவர் அணியின் தலைமைப் பதவியை சமியிடம் கொடுப்பதாக அப்ரிடி அறிவித்தார்.

சமி ஓர் அற்புதமான தலைவர். இரு ரி-20 கிண்ணங்களை வென்றுள்ளார். அவரது தலைமைத்துவம் தனிச் சிறப்புமிக்கது. சமியின் தலைமையின் கீழ் விளையாட ஆவலாய் உள்ளேன் என அப்ரிடி மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்தாட முற்படும்போது இலக்குகள் சரிகின்றன

## டோனி தெரிவித்தார்

நான் ஒரு முனையில் அடித்தாட முற்படும்போது மறு முனையில் இலக்குகள் சரிகின்றன. இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் தலைவரான டோனி.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நியூசிலாந்து 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. டோனி, 65 பந்துகளுக்கு 39 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். டோனி, அதிகம் நிதானித்துவிட்டார் என்று கருதப்படும் நிலையிலேயே அவர் இவ்வாறானதொரு கருத்தை வெளிப்படுத்தினார். நான் அடித்து விளையாட விரும்பினேன். ஆனால் மறுமுனையில் இலக்குகள் அதிகம் சரிந்ததால் அது சாத்தியமில்லாமல் போனது. களத்தடுப்பின் போது இரு பிடியெடுப்புக்களைத் தவறவிட்டோம் (ஒன்றை டோனி தவறவிட்டார்). இதுவும் எமது தோல்விக்குக் காரணமாக அமைந்தது என டோனி மேலும் தெரிவித்தார். (ம)





# இந்தியா - பாகிஸ்தான் தொடர் வேண்டும் என்கிறார் யுனிஸ்கான்

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே இருதரப்புத் தொடர்கள் நடத்தப்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார் பாகிஸ்தான் நட்சத்திர வீரரான யுனிஸ் கான்.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் குறித்த இரு நாடுகளுக்கும் இடையில் இருதரப்புத் தொடர் நடத்தப்படுவதில்லை. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இரு தரப்புத் தொடரை நடத்துவதில் சாத்தியக்கூறுகள் இருந்தன. ஆனால் காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் ஆயுததாரிகள் அத்துமீறித் தாக்குதல் நடத்தியதால் இருதரப்புத் தொடர் மீண்டும் கைவிடப்பட்டது. இந்த நிலையில் தொடர் மீண்டும் நடத்தப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வீரரான யுனிஸ்கான் வலியுறுத்தியுள்ளார். பாகிஸ்தான் நாட்டில் மீண்டும் டெஸ்ட் தொடர்கள் நடத்த வேண்டும். இந்தியா மற்றும் அனைத்து அணிகளுடன் மோத வேண்டும் என்பது எனது விருப்பம். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் கிரிக்கெட்டில் ஜாம்பவான்கள். டெஸ்ட்டில் முதல் இரண்டு இடங்களில் உள்ளன. இரு நாடுகள் இடையே எந்த மாதிரியான சூழ்நிலை நிலவினாலும் அதை மறந்துவிட்டு கிரிக்கெட் விளையாட வேண்டும். இரு அணிகளும் மோதுவதைப் பார்க்க மக்கள் விரும்புகிறார்கள். இரு அணிகள் எப்போதாவது மோதினால் அந்தப் போட்டியை ஆர்வம் இல்லாமல் பார்க்கிறார்கள். இதனால் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் அடிக்கடி மோதவேண்டும். அரசியல் வேறு, விளையாட்டு வேறு என யுனிஸ்கான் மேலும் தெரிவித்தார். இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கம்பீர், இருதரப்புத் தொடர் அவசியமில்லை. எல்லாவற்றையும் விட இந்திய மக்களின் பாதுகாப்பே முக்கியம் எனத் தெரிவித்தார். (ம)

# இந்தியா நியூசிலாந்து மூன்றாவது ஆட்டம்

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் இந்தியாவும், இரண்டாவது ஆட்டத்தில் நியூசிலாந்தும் வெற்றிபெற்றன. இதனால் நாளைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி பின்னர் எஞ்சியிருக்கும் இரு ஆட்டங்களில் ஒன்றில் வெற்றி பெற்றால் கிண்ணத்தைக் கைப்பற்றலாம். மாறாக நாளைய ஆட்டத்தில் தோல்வியடையும் அணி அடுத்த இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும். எனவே தமது அழுத்தத்தைக் குறைக்க இரு அணிகளும் இந்த ஆட்டத்தில் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தும். மொகாலி மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)

# ஒரு நாளில் இரு ஆட்டங்கள் இது ஆஸியின் அட்டவணை

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஒரு நாளில் இரு ஆட்டங்களில் விளையாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் அணிகள் தொடர்ச்சியாக விளையாடிவரும் அட்டவணை மிகவும் நெருக்கமாக உள்ளது. தொடர்களுக்கிடையில் போதுமான இடைவெளி, வீரர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதில் ஒரு படி மேல் சென்று, ஆஸ்திரேலிய அணி, ஒரே நேரத்தில் இரண்டு ஆட்டங்களில் விளையாட வேண்டிய நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரியில், இலங்கை அணிக்கெதிரான ரி-20 ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி பங்குபற்றும் அதே நேரத்தில் அவ்வணி இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரையும் ஆரம்பிக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ம)

# இந்தியா அபார ஆட்டம்

மலேசியாவில் ஆசிய ஹொக்கித் தொடர் நடைபெற்று வருகிறது. இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஜப்பானுடன் மோதியது. முடிவில் இந்திய அணி 10:2 என்ற கோல் கணக்கில் ஜப்பானைப் பந்தாடியது. இந்திய அணி அடுத்த ஆட்டத்தில் தென்கொரியாவை இன்று எதிர்கொள்கிறது. (ம)



# சீன பூப்பந்தாட்டத் தொடரில் மிரட்ட வருகிறார் சாய்னா

இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நேவால், அடுத்த மாதம் நடைபெறவுள்ள சீன பூப்பந்தாட்டத் தொடரில் மீண்டும் களமிறங்கவுள்ளார்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அண்மையில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் முழங்கால் காயத்துடன் களமிறங்கினார் சாய்னா நேவால். குறித்த தொடரில் சாய்னா சிறப்பாகச் செயற்படவில்லை. இதற்கு அவருக்கு ஏற்பட்ட காயமும் பிரதான காரணமாகச் சொல்லப்பட்டது. இந்த நிலையில் அவர் தனது காயத்துக்கு சில வாரங்களுக்கு முன்னர் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார். அடுத்த வருடமே அவர் மீண்டும் களமிறங்குவார் என்று கருதப்பட்ட நிலையில் அடுத்த மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ள சீன ரென்னிஸ் தொடரில் அவர் தனது பங்கு பற்றலை உறுதிப்படுத்தினார். குறித்த தொடருக்கான பயிற்சியையும் அவர் ஆரம்பித்தார். (ம)



நாளை நடைபெறவுள்ள அத்லெட்டிக் கழகத்துக்கு எதிரான ஆட்டத்துக்காக ரியல்மட்ரிட் அணி நேற்றுமுன்தினம் கடும் பயிற்சியில் ஈடுபட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்பந்தாட்டத் தொடர்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளின் 17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் முன்னெடுத்து வந்த கால்பந்தாட்டத் தொடரின் தேசியமட்ட ஆட்டங்கள் நளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. ஆண்கள் பிரிவில் 30 அணிகளும், பெண்கள் பிரிவில் 24 அணிகளும் பங்குபற்றுகின்றன. ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் அல்பிரட்பீரிஸ் மைதானத்திலும், பெண்கள் பிரிவு ஆட்டங்கள் கட்டுநேரியஸ் சென். செபஸ்ரியன் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.(ம-23)

வீடு வாடகைக்கு
யாழ்நகரில் அமைதியான சூழலில் வீடு வாடகைக்கு உண்டு
T.P. 077 3673309

Computer Sale
Hp Core 2 Duo Hp
(2GB,17" MON,250GB.DVD)
One year Warranty
24.750/=
Free-8GB Pen/H.Phone/ webcamera
ST.Antony's
187,kks Road
Jaffna Town.
021-222-4865
075-0698608

அமெரிக்க லொத்தர் விசா
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
விரையுங்கள் - இன்னும் 10 நாட்களே உள்ளன
0768226230
V2 Travels
www.facebook.com/v2tandt

மலேசிய நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் ஆண்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு
Furniture Manufactures மரத்தளபாட உற்பத்தி நிறுவனத்தில்
Helps: 30 பேர் உடன் தேவை. Salary :- 1000-Rm.+OT
வயது 19 - 40 மூன்றே வாரத்துக்குள் பயணம். அத்துடன் மலேசிய நாட்டில் கௌரவமான வீடுகளில் உயர் சம்பளத்துடன் House Maid வீட்டுப்பணிப்பெண்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Air trust (Res.No- 2490)
No.945, Marudana Road, Punchi Boralla.
077 052 0384

### கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து) பரந்தன்

**கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம்**

கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கத்தின் கிளை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் 23.10.2016 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஏற்கனவே 05.10.2016 13.10.2016 ஆம் திகதிகளில் உதயன் பத்திரிகையில் திரு. உ.சுபசிங்க கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் முல்லைத்தீவு அவர்களால் அறிவிக்கப்பட்ட உரிய இடங்களில் பெயர் குறித்த தவிசாளர்களால் நடத்தப்படும். அன்றைய தினம் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் அனைவரையும் குறித்த கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்
க.வ.ப.நோ.கூ.சங்கம்
பரந்தன். (சி/25976)(17.19.20)

### கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணபல்கலைக்கழகம்

**கீழ்காணும் உணவகத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 28.10.2016 ஆம் திகதி மு.ப. 10 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பொறியியல் பீட உணவகம் - அறிவியல் நகர், கிளிநொச்சி.**

மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப்படிவங்கள் இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணபங்கள் நிராகரிக்கப் படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல் நகர் பிரதிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம். (சி/25975)(17.19.20)

22.10.2016



## மிராஸ், தமீம் இக்பால் அபாரம் பலமான நிலையில் பங்களாதேஷ்

இங்கிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளில் பங்களாதேஷ் அணி பலமான நிலையில் இருந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மிராஸ், சகிப் அல்ஹசனின் சிறப்பான பந்துவீச்சால் இங்கிலாந்து அணி முதல் நாள் முடிவில் 258-7 என்ற நிலையில் இருந்தது. வோக்ஸ் 36 ஓட்டங்களுடனும், ரசிட் 5 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக் காகக் களமிறங்கினர். வோக்ஸால் மேலும் ஓர் ஓட்டத்தையேனும் பெற முடியவில்லை. ரசிட் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்தார். 26ஓட்டங்களுடன் ரசிட்டை வீழ்த்தினார் இஸ்லாம். புரோட் டுக்கு முடிவு கட்டினார் மிராஸ். 293 ஓட்டங்களில் சுருண்டது இங்கிலாந்து.

பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக மிராஸ் 6 இலக்குகளையும், சகிப் அல் ஹசன், இஸ்லாம் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 21 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார் கையிஸ். மொனிமுலால் ஓர் ஓட்டத்தை யேனும் பெறமுடியவில்லை. இக்பால், முகமதுல்லா இணை சிறிது போராட்டம் காட்டியது. இணைப்பாட்டமாக 90 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முகமதுல்லா. அரைச்சதம் கடந்த இக்பால் 78 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இரு ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் ரகிம். நாள் முடிவில் 221-5 என்ற நிலையில் பங்களாதேஷ் உள்ளது. சகிப் அல் ஹசன் 31ஓட்டங்களுடனும், இஸ்லாம் ஓட்டமெதனையும் பெறாமலும் களத்திலுள்ளனர். (ம)

## றோயல், சிவானந்தா அணிகள் முன்னேறின

யாழ்ப்பாணம், ஒக். 22

மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல், கொற்றாவத்தை சிவானந்தா அணிகள் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறின.

மனோகராவின் மைதானத்திலேயே ஆட்டங்கள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் அணி மோதியது. பிரசன்னாவின் மூலம் பதிவான கோலின் உதவியுடன் முதல் பாதியின் முடிவில் 1:0 என்று முன்னிலை வகித்தது றோயல். இரண்டாம் பாதியின் 31ஆவது நிமிடத்தில் கஜகோபனும், 35ஆவது நிமிடத்தில் கபிலும், 36 ஆவது நிமிடத்தில் பிரசன்னாவும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய, முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றோயல்.

தொடர்ந்து நடைபெறவிருந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து ஏழாலை 5 ஸ்ரார் அணி மோதவிருந்தது. இதில் 5 ஸ்ரார் அணி உரிய நேரத்திற்கு வருகை தராத காரணத்தால் கொற்றாவத்தை சிவானந்தா அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ம-108-422)

## மத்தி., இந்து இளைஞர் முன்னேற்றம் கண்டன

யாழ்ப்பாணம், ஒக். 22

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ் மாவட்ட ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

சோமஸ்கந்தன் மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் யுத் அணி மோதியது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:15, 25:23, 25:14 என்ற புள்ளிகளை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றி முன்னேற்றம் கண்டது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து இளவாலை மத்தி அணி மோதியது. 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபற்று முன்னேற்றம் கண்டது ஆவரங்கால் மத்தி. (ம-422-108)

## பயிற்சிப் பட்டறை

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது. எனவே அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.